குடும்பம்

தில்லை-வில்லாளன்

1953

குடும்பம்

தில்லை-வில்லாளன்

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : மே, 1953

விலை ரூ. 1-8-0

அச்சிட்டது :—கே. ஜி. பிரஸ், பிராட்வே, சென்னை-1.

முன்னுரை

'குடும்பம்'—எனது நீண்ட நாள் நினைவுகள் பெற்ற குழந்தை.

பலர், என்னிடம், தங்கள் தங்கள் குடும்பக் குமுறல்களையும், குதூகலங்களையும் கூறுவார்கள். அவைகளை மிக உன்னிப்பாகக் கேட்பேன். அவைகளை மறப்பதே இல்லை. அத்தகைய நினைவுகளைத் தொகுத்துக் கோவையாக்கினேன். அந்தப் பழைய நினைவுகள் கூடின—'குடும்பம்' பிறந்தது.

குடும்பத்தைப் பற்றி, பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். தினந்தினம் நம் செவிகளில் குடும்பத்தைப் பற்றிய விமரிசனம் வந்து விழுந்தபடியே இருக்கிறது.

பக்கத்து வீடு, எதிர்த்த வீடு, நம் வீடு இப்படி மிக நெருங்கிய இடங்களின் பக்கம் நம் காதுகளைத் திருப்பிவிட்டால், குடும்பத்தை, ஆயிரம் விதமான உருவங்களில் பேசவிட்டு வேடிக்கை காட்டுவார்கள்—கண்களையும் அந்தப் பக்கம் திருப்பிவிட்டால், சில உருவங்கள் நம்மை மிரட்டும்—சில நம்மை மகிழச் செய்யும்.

குடும்பம் நடித்த இரண்டு ஊர்களில் உள்ள ஐந்து குடும்பங்களின் நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

கல்லூர், வட்டியூர் ஆகிய ஊர்களில் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

அகிலாண்டம், சரவணன், மங்கம்மாள், பாலன், வள்ளியம்மை ஆகியோரின் ஐந்து குடும்பங்களிலுள்ளவரை இங்கு சந்திக்கிறோம்.

அவர்கள் சந்திப்பு மூலம் 'குடும்பம்' நடிக்கத் தெரிகிறது—அதிலுள்ள 'கோணல், மாணல்' புரிகிறது.


குடும்பத்தில் ஈடுபட்டு அலுத்தவர், ஈடுபட்டு இன்னமும் அதிலேயே உழன்றுகொண்டிருப்போர், இனி குடும்பத்தின் வாயிற்படியில் காலடியெடுத்து வைப்போர்-மற்றும் அனைவருக்கும் இந்தக் 'குடும்பம்' சுவையான குறிப்பேடாகக் காட்சிதரும்.

குடும்பம் — இன்று, பாரி நிலையத்தார் மூலம் உங்கள் கரங்களுக்குக் குடியேறுகிறது. அவர்களுக்கு என் அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை
3-12-'53

அன்பன்

தில்லை—வில்லாளன்



மறைந்த என் தந்தையார்

வி. இராமகிருட்டினனார்

அவர்கள் நினைவு மலராக
இந்நூலை அர்ப்பணிக்கிறேன்.

தில்லை—வில்லாளன்

முதல் பாகம்

குடும்பம்

தந்தை :

அவன் ஏன் அப்படியிருக்கிறான்? என் மகன் கண்ணன் கோலத்தைப் பார்க்கிற பொழுதெல்லாம் என் உள்ளம் வேகிறது! தாடி வளர்த்துக்கொண்டிருக்கிறான். நீள மீசை வைத்துக்கொண்டிருக்கிறான். ஏனடா இந்தக் கோலம் என்றால், இலட்சியப் போராட்டம் என்கிறான். அவனது இலட்சியம் நிறைவேறுகிற வரையில் தாடியை எடுக்கமாட்டானாம், மீசையை நறுக்கமாட்டானாம். பாரதத்தில் திரௌபதை துரியோதனன் இரத்தத்தால்தான் தன் கூந்தலைக் கோதி முடிவேன், அதுவரை அவிழ்ந்த கூந்தல் அவிழ்ந்ததேதான் என்று சபதம் எடுத்துக்கொண்டாளாமே, அதுபோல அரையணா கூலியில், குப்பைமேட்டிற்குப் போகிற மயிரில் இலட்சியப் போராட்டம் நடத்துகிறான். என்ன பைத்தியம் பாருங்கள்!

"கண்ணா, உனக்கு வயது ஆகிக்கொண்டேயிருக்கிறது, ஒரு கல்யாணம் காட்சி செய்ய வேண்டாமா, இப்படி தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு சாமியார் மாதிரி திரிந்தால் எவனடா பெண் தருவான்" என்று கேட்டால் சீறுகிறான். "அப்பா, அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். கல்யாணம் என்ற வார்த்தையை மட்டும் என் காதில் போடவேண்டாம்" என்று கடுகடுக்கிறான். நான் என்ன செய்யட்டும்? வாயால்தான் சொல்ல முடியும்—அடித்துத் திருத்துகிற வயதா அவனுக்கு-இருபத்தேழு, வருகிற வைகாசியோடு முடிகிறது.

அவன் சரியாகச் சாப்பிடுவதில்லை. சரியாகத் தூங்குவதும் இல்லை. இரவில் வெகு நேரம் வரை விழித்துக்கொண்டிருப்பான். "ஏனடா, இப்படிக் கண்விழித்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிருய்" என்று அவன் தாய் செல்லமாகக் கண்டித்தால், "படித்துக்கொண்டிருந்தேன் அம்மா" என்று கூறுவான். ஆனல் அந்த அறைக்கு புத்தகம் எதுவுமே அவன் எடுத்துப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும். அவன் ஆர்வத்தோடு எந்த புத்தகத்தையும் படிப்பதை விட்டு ஒண்ணரை ஆண்டுகளாகின்றனவே!

* * *

அவனது போக்கு புரியவில்லை. எனக்கு இயற்கையாகவே முன்கோபம். என்ருவது என்னையுமறியாமல் கோபம் வந்துவிடும்; கோபித்துக்கொண்டு விடுவேன். அவன் கண்களில் நீர் தேங்கிவிடும். எதிர்த்துரையாட மாட்டான். அப்படியே திகைத்து நின்றுவிடுவான். பிறகு நானே அவனைக் கட்டிக்கொண்டு அழுவேன்.

என் மகனுக்கு என்ன வந்துவிட்டது என்று நான் அழுகிறேன். நானும் அந்தத் துக்கம் தாங்கமாட்டாமல் புழுவாய்த் துடிக்கிறேன். ஆனல் ஊரார் சும்மாயிருக்கிருர்களா? தங்கள் ஓட்டைவாயைத் திறந்தபடி தானிருக்கின்றனர்.

என் பையனுக்கு வயதாகிவிட்டது என்பது எனக்கு ஏதோ தெரியாது போய்விட்டதுபோலவும், அந்த உண்மையை உணர்த்தும் பெருநோக்கத்தோடு வந்து பேசுவதுபோலவும் வந்து பேசுவர். "என்னப்பா, சரவண, பையனுக்கு வயதாகிறதே, காலாகாலத்திலே ஒரு கட்டு கட்டிப் போட்டுவிட்டா உன் கடமை தீர்ந்துவிடுமில்லே" என்று ஒருவர் பேச்சைத் துவங்குவார். "ஆமாம், அது சரவணத்துக்குத் தெரியாதா, என்ன" என்ருெருவர் தூபம் போடுவார். "என்ன, ஊரிலே பலமாதிரி சொல்லித் திரிகிருங்க; அதனலே சொல்கிரும்" என்று தங்களின் குத்திவிடும் பேச்சிற்கு, எங்கோ கிடக்கும் எவரையோ துணைக்கிழுப்பார். என்னல் சில சமயங்களில் தாங்க முடிவதில்லை. தொல்லை பொறுக்கமாட்டாமல்,

துடுக்குத்தனமாகப் பேசிவிடுவேன். ஒருநாள், "அவன் என்ன பூப்போட்ட சேலேகட்டி, பொழுதுபோன, வாசற் படியிலே நிற்கிற பொன்னியா, பெரிய மதிலேறிக் குதித்து ஓடிய பெரியநாயகியா—ஆண்பிள்ளைச் சிங்கம். அவனுக்கு ஆகிற பொழுது ஆகும். அதைப் பற்றி நீங்க யாரும் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை" என்று சொல்லி விட்டேன். பொன்னி என்ற பெண் அப்படி மேனமினுக்கி யாக இருக்கிருள் என்று ஊரார் பேசிக்கொண்டிருந்த னர், அவளுக்குக் கல்யாணம் ஆவதற்கு முன்னலே. அந்தப் பெண்ணின் பெரியப்பாவும் அங்கு வந்திருந்தார். நான் வாய்த் துடுக்காகப் பேசியது கேட்டு அவர் முகம் சுருங்கியது. ஓடிப்போன பெரியநாயகியின் மாமனும் அங்கிருந்தார். அவர் முகத்தையே ஒரு பக்கம் திருப்பிக் கொண்டார். கொஞ்சநேரத்தில் அவர்கள் எல்லோரும் கலைந்து சென்றுவிட்டார்கள்.

அவர்களிடம் அப்படிப் பேசினேனே யொழிய அவர்கள் சொல்லியதில் தப்பில்லை. தடியனைப் போலத் தகப்பனிருந்தும், பிள்ளையை இப்படி பிரமச்சாரியாகத் திரியவிட்டு வேடிக்கைப் பார்க்கிருன் என்று பேசமாட்டார் களா? ஆனல் என் மகன் 'தப்புத்தண்டா' ஏதும் செய்யவில்லை. 'அங்கே பார்த்தேன், இங்கே இப்படி இருந்தான்' என்று எவரும் கூறமுடியாது. அதனல் தான் என்னல் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

* * *

எனக்கு மட்டும் ஒரு சந்தேகம். அவன் இலட்சியப் போராட்டம் என்கிருனே, அதனலே தான் அந்தச் சந்தே கம் வலுவாகிறது.

மூன்ருவது தெரு, மல்லிகையம்மன் கோவிலுக்கு எதிர் வீட்டிலிருக்கிருளே, மங்கம்மாள், அந்த வீட்டிற்கு கண்ணன் போவது வருவதுண்டு. ஆனல் இன்று நேற்று ஏற்பட்ட பழக்கமில்லையே, அது. குழந்தையாக இருந்த நாளிலிருந்து போய் விளையாடுவானே, அங்கு!

மல்லிகையம்மன் என்ருல் மருண்டு விடவேண்டாம். அந்த ஆத்தா கோவித்தால் மல்லிகைப் பூக்கள் மாதிரி

அம்மை போட்டுவிடும். ஆகவேதான் அதற்கு மல்லிகைப் பூ கரகம் எடுப்பது வழக்கம். இந்த விசித்திர நாட்டில்தான் வியாதிகளுக்கெல்லாம் ஒவ்வொரு கடவுள் இருக்கிறார்களே! அந்தக் கோயிலின் முன் வெளியில்தான் அவன் எப்பொழுதும் விளையாடுவான்.

மங்கம்மாள் இரண்டு பெண்களைப் பெற்றவள்—மூத்தவள் பெயர் **ரேவதி**, இளையவள் பெயர் **தேவகி**.

இரண்டு இரத்தினங்களைப் பெற்ற வைரவியாபாரியைப்போலத்தான் பூரிப்பு, அந்தத் தாய்க்கு. அவர்கள் இருவரும் ஒரு கிளையில் பூத்த இரண்டு வித மலர்கள். ஒன்று வர்டாமல்லி, மற்றொன்று ரோஜா. ஆமாம், அப்படித்தான் கூறவேண்டும். பெரிய பெண் கருப்பு—அவ்வளவு அழகு என்று சொல்லமுடியாது. இளையபெண் காண்போருக்கு விருந்தூட்டும் கட்டழகி. அவள் விழிகளில் வீசும் காந்த ஒளி யொன்றே அவளைப் பேரழகியென்று உலகிற்குக் கூறும்.

தேவகியுடன் கைகோத்து ஆடுவான் கண்ணன். கண்ணனுக்கு, தேவகியிடம் அலாதியான பிரியம். குழந்தை வயதிலேயே, அத்தகைய நட்புள்ளத்தோடு நடந்துகொண்டதாலே, இப்பொழுது ஏதேனும் அவர்களுக்குள்ளே விபரீத முடிவு செய்துகொண்டிருப்பார்களோ என்ற சந்தேகம் எனக்குப் பலமாக இருக்கிறது.

இப்பொழுது எந்தப் புத்தகத்தை யெடுத்தாலும், காதல் கதைகள்தானே எழுதியிருக்கிறார்கள்! எந்தக் கதையில்தான் காதலன் வராமல் இருக்கிறான்? 'கண்ணி உன்னை நான் கைவிடமாட்டேன்—இது சத்தியம்' என்று சொல்லாமல் இருக்கிறான்? என் கண்ணனும் அப்படி ஏதேனும் விபரீதம் பண்ணியிருப்பானோ என்ற எண்ணம் என் மனதைக் குடைகிறது! எப்படிக் கேட்பேன், இதுபற்றி அவனிடம்—ஒரு தகப்பன் கேட்டுக் கொள்ளக்கூடிய காரியம் இல்லையே இது!

* * *

அவனாவது சொல்வானா என்றால், அவன் எப்பொழுதுமே அழுத்தக்காரன்—அதுவும் இந்தச் செய்தி

யென்றால் அவன் எப்படிச் சொல்வான்—யாரிடம் சொல் வான்?

இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு இது ஒரு விளை யாட்டாகவே இருக்கிறது. கல்யாண காலத்தில், ஏதாவ தொரு பெண்ணின் மீது எனக்கு அபாரமான காதல் என்று சொல்வதும், தந்தை தாறுமாறாகப் பேசுவதும், பிறகு அதட்டும் அப்பாவுக்காகவும், அழும் தாய்க்காகவும் காதலைத் தியாகம் செய்துவிட்டேன் என்று கூறுவதும் சர்வசாதாரணமாகிவிட்டது. என் மகனும் அப்படிச் செய்வான் என்ற நம்பிக்கையிருந்தால் நான் இவ்வளவு அஞ்சமாட்டேன். அவன் அழுத்தக்காரன் மட்டுமல்ல, மிகவும் பிடிவாதக்காரன். நினைத்ததை நடத்தியே காட்டு வான். அவன் கேட்ட துணியை வாங்கித் தராவிட்டால் மூன்று நாட்கள் சாப்பிடவே மாட்டான். அதே துணி அவன் கைக்கு கிடைத்த பிறகுதான் அவன் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுவான். அம்மாதிரி இப்பொழுதும் பிடிவாதம் செய்தால் நான் என்ன செய்வது?

அவன் இப்பொழுது கேட்பது ஆடையல்லவே, ஒரு பீடையல்லவா? அந்தத் தேவகி பார்க்கப் பார்க்க பர வசம் ஊட்டும் அழகிதான்—பறித்துத் தின்னலாமா என்ற ஆசை ஊட்டும் பருவக்கனி—அவன் அவளிடம் மயங்கியிருந்தானென்றால் அதில் தவறில்லை. ஆனால், நான் எப்படி அவளை மருமகளாக ஏற்றுக் கொள்ள முடியும்?

அவர்கள் என்ன சாதி, நான் என்ன சாதி-என் சாதி உயர்ந்தது, அவர்கள் சாதி தாழ்ந்தது என்று சொல்ல வரவில்லை. சாதிவிட்டு, சாதி 'கொள்வினை, கொடுப்பினை' வைத்துக் கொள்வதென்றால் முடியுமா? நான் என்ன சாதி கெட்டவனா? சட்டைக்காரிக்குப் பிறந்தவனா? அசல் பிள்ளையாயிற்றே. சாதியிலேயே தலைமை சாதியா யிற்றே!

அவர்கள் என்ன சாதியென்று ஊராருக்கே தெரி யாது. சாதி,குலம் தெரியாத அவர்களிடம் நான் சம்பந்தம் வைத்துக் கொள்வதா? ஐயோ, நான் சரியென்றாலும்,

ஊர்ப் பெரியவர்கள் விட்டுவிடுவார்களா? உலகம்தான் இந்த விபரீதத்தை எப்படித் தாங்கிக் கொள்ளும்?

சாதியை விட்டு சாதி தாவுவதே தவறு. அதிலும் அவர்கள் என்ன சாதியென்பதுகூடத் தெரியவில்லை. மேலும், அந்த மங்கம்மாள் என்னமோ சொல்கிறார்களே! கட்டிய கணவனை விட்டுவிட்டு ஓடிவந்துவிட்டாளாமே. ஐயோ, அவள் பிறகு கெட்டழிந்த கதையைக் கிளறினால், நாற்றம் தாங்காது! பெரியவளின் தந்தை ஒருவனும், சிறியவள் அப்பன் வேறொருவனும்—ஒரு தாய், இரண்டு தந்தைமார்கள். இத்தகைய ஒழுக்கங்கெட்ட குடும்பத்திலே உறவாம்—அதுவும் சம்பந்தம் போடுவதாம்-நினைக்கும் பொழுதே நெஞ்சு நடுங்குகிறது!

அவனைக் கேட்டால், நான் மணந்து கொள்ளப் போவது தேவகியை, அவள் தாயை அல்ல என்று கூறுவான். ஆனால் தாயில்லாமல், மகள் எப்படிக் குதித்துவிட முடியும்? அவளைப் பார்க்காமல் மகளை எப்படி மணந்து கொள்ள இயலும்? தன் பழியை மறைக்கத்தானே இரண்டு பெண்களையும் படிக்க வைத்தாள். பெரியவள் பாட்டுவாத்தியாராகி விட்டாள். சின்னக் குட்டி, இன்னமும் படிக்கிறாள். எம். ஏ. பட்டம் வாங்கப் போகிறாளாம்!

கண்ணன் படிப்பை பாதியிலே விட்டுவிட்டான். இவன் ஏன் இந்த எம். ஏ. வையும், பி. ஏ. வையும் சுற்றித் திரிய வேண்டும்? அவனை யார் போய்க் கேட்பது? அவனது தாய் கேட்டால், ஏதாவது கூறி வாயை அடைத்து விடுகிறான்.

* * *

இந்தக் காலத்தில், திருமணத்திலே எவ்வளவோ மாறுதல்கள் செய்து வருகிறார்கள். மாறுதல்கள் செய்யட்டும். ஆனால் விபரீத மாறுதல் செய்யக்கூடாதே! 'நாங்கள் புரட்சிவீரர்கள், புதுமை விரும்பிகள், பகுத்தறிவுவாதிகள், ஆகவே பழமையை எதிர்க்கிறோம், பண்டை நாளில் செய்ததை மாற்றுகிறோம் என்று கூறி, முன்னாளில் பகுத்தறிவு இல்லாத முன்னோர்கள், ஆணுக்கும்

பெண்ணுக்குமல்லவா திருமணம் செய்தார்கள், இதோ நாங்கள் ஆணுக்கும் ஆணுக்குமே திருமணம், பெண்ணுக்கும் பெண்ணுக்குமே திருமணம் செய்கிறோம்' என்று பேசலாமா? அதுதான் என் ஆட்சேபனை. கண்ணன் காதல் செய்யட்டும். ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சேற்றிலே போய், நீராடுவேன் என்றால் எப்படி அனுமதிப்பது? சேற்றிலேதானே செந்தாமரை இருக்கிறது என்பான்—அந்தத் தாமரையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது!

தமிழ் எம். ஏ. வாம் அவள். அவள் என்னென்ன பேசினாளோ, இந்தப் பயலும் என்னென்ன சொன்னானோ, இருவரும் சேர்ந்துகொண்டு என்னை ஆட்டி வைக்கிறார்கள்! நான்தான் கணத்திற்குக் கணம் வேதனைப் படுகிறேன். அவனுக்கு என்ன கவலை? படிக்கிற வேலையே அவனுக்குக் கசந்துவிட்டது. வேறென்ன வேலை செய்யப் போகிறான்? அப்பன் நான் படாது பாடு பட்டு சொத்து சேர்த்து வைத்துவிட்டேன்—அதை வைத்துக்கொண்டு அவன் கும்மாளம் போடவேண்டியது தானே!

வீணாக என் மனத்தைத்தான் வாட்டிக் கொள்கிறேன். அவனை ஒரு நாளைக்குக் கூப்பிட்டுக் கேட்டுவிட வேண்டியதுதான். வீணாக நாளை ஓட்டிக்கொண்டே போனால் என்ன செய்வது? தேவகிதான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தால், அவன் தலையெழுத்துப்படி நடக்கிறதென்று விட்டுவிட வேண்டியதே! ஏதாவது ஒரு முடிவு வேண்டும். அவனை நானே கூப்பிட்டுக் கேட்கட்டுமா? அல்லது, அவன் தாயைக் கேட்கச் சொல்லட்டுமா?

என்னிடம் எங்கே சொல்லப்போகிறான்? நாலணா வேண்டுமென்றாலும் அம்மாவிடம்தான் கேட்பான். குழந்தைப் பருவத்திலிருந்து வரும் பழக்கம். இப்பொழுது மாறிவிடப்போகிறதா, என்ன! ஆனால், இந்த விஷயத்தில், அவள் தாய் ஆயிரந்தடவை கேட்டுவிட்டாள். அவன் சரியாக ஏதும் பதில் சொல்லவில்லை.

கேட்டால் இலட்சியப்போர்—ஆனால் அந்த இலட்சியப்போர், எந்தக் களத்தில், எந்த எதிரியோடு? அவன்

சொல்வதே இல்லை. நாமாகத் தெரிந்துகொண்டு, அதற்குரிய விளக்கம் கேட்டாலும் சொல்வதில்லை. அவன் இலட்சியம் நிறைவேற வேண்டுமென்றால் பிறருக்குச் சொல்லித்தானே ஆகவேண்டும். ஏன் அவன் செய்யவில்லை?

* * * *

எனக்கொரு யோசனை தோன்றுகிறது—அப்படிச் செய்வதே சரி! கண்ணனின் நண்பன் பாலன். அவன்மீது உயிரையே வைத்திருக்கிறான் பாலன். அவனை யழைத்து, என் மனத்தில் கிடக்கும் எண்ணங்களை யெல்லாம் கூறி, என் மன பாரத்தையாவது குறைத்துக்கொள்கிறேன். அவனிடம் எப்படியும் கண்ணன் உள்ளதைக் கூறுவான்—அதன் பிறகாவது ஒரு வழி பிறக்கட்டும்.

இப்படி நான் தினந்தினம் எண்ணி எண்ணி மனம் புழுங்கிச் சாகிறேன். கண்ணன் மட்டும் என்னிடம் ஏதும் பேசுவதில்லை. வருவான், சிறிது நேரம் அமர்வான். பிறகு வெளியில் போவான். அவன் தாயோ, கண் கலங்காத நேரங் கிடையாது. அவளுக்கு என்மீது கோபம்—தன் பிள்ளைக்கு ஏதோ கோளாறு, அதனை நான் கவனிக்காமல் இருக்கிறேன் என்று அவள் தவறாகப் புரிந்துகொண்டு, என்னை வாட்டினாள்.

ஒருநாள் கண்ணன் வெளியில் கிளம்பிச் செல்லும் பொழுது நானே தடுத்து நிறுத்தினேன்.

"கண்ணா, எங்கே, வந்ததும் வராததுமாக வெளியில் கிளம்பிவிட்டாய்?"

"எங்குமில்லையப்பா?"

"எங்குமில்லையென்று கூறிக்கொண்டே வெளியில் போகிறாயே—உள்ளே போ."

"சரி,"

"சாப்பிட்டாயா, இப்பொழுது"

"இல்லை"

"ஏன்?"

"பசியில்லை"

" என்ன கண்ணு இது, நானும் பார்த்துப் பார்த்துச் சகிக்கமுடியாமல்தான் கேட்கிறேன் இன்று. ஏன் இப்படி நீ சித்தங் கலங்கியவன்போல் நடக்கிருய் மனதில் உள்ளதையாவது வெளிப்படையாகச் சொல்."

"சொல்லுங் காலம் வரவில்லை அப்பா, காலம் வந்தால் கட்டாயம் சொல்வேன்."

கண்ணன் அங்கு நிற்கவில்லை. அவன் கண்களில் வந்த நீரைத் துடைத்துக்கொள்ளத்தான் அவ்வளவு அவசரமாக உள்ளே சென்றுவிட்டான் போலும்! அதற்கு மேலும் அவனிடம் எதையும் பேச விருப்பமில்லை. ஆகவே வெளியில் செல்லலாமென்று புறப்பட்டேன்.

* * *

அதற்குள் உள்ளேயிருந்து அவள் குரல் கொடுத்தாள். நான் அவளிருக்குமிடம் சென்றேன்.

" கல்யாணி, என்னையா கூப்பிட்டாய் ?"

" ஆமாம் "

" ஏன் ?"

" நான் பிள்ளையைப் பெற்றுவிட்டேனே—அந்தக் கொடுமைக்காக !"

" ஐயோ, கல்யாணி, என் வேதனையை விரிவாக்காதே—என்ன சொல்வேன் "

" போதும், போதும்—"

" சரி, வெளியில் போய்விட்டு வரட்டுமா ?"

" வெளியில் போய் தலைநிமிர்ந்து நடக்கிற மாதிரியா இருக்கு ?"

" எனக்குப் பின்னே கூனு விழுந்துவிட்டது ?"

" எரிகிற கொள்ளியிலே எண்ணெயை விடாதீங்க "

" என்னதான் சொல்கிருய், இப்பொழுது ?"

" என்னத்தைச் சொல்றது, நான் ?"

" பின் எதையும் சொல்லவேண்டாம் "

"சொல்லாமல் எப்படியிருக்கிறது ?"

"அப்படியானல் சொல்லேன்"

"சொல்ற மாதிரியாயிருக்கு"

"ஐயோ, தலையிலடித்துக்கொண்டால்கூட தேவலை போலிருக்கு. என்ன சேதி? சொல்லித்தொலை"

"கேட்டீங்களா, சேதியை ?"

"பின்னே இவ்வளவு நேரம் என்ன கேட்டுக் கொண்டிருக்கிறேனும்"

"அடுத்த வீட்டு பாட்டி சொன்னுள்—என் காதிலே ஈயத்தை ஊத்தின மாதிரியிருந்தது"

"என்ன சொன்னுள், பாட்டி ?"

"கிணற்றடியில், ஊர் வம்புக்காரிகள் பேசினதைத் தான் சொன்னுள்"

"ஊர் வம்புக்காரிகள் என்ன பேசினுங்களாம் ?"

"என்ன பேசின, உங்களுக்கென்ன. என் மானம் போகிறது"

கல்யாணி அழ ஆரம்பித்துவிட்டாள். கல்யாணி கிராமத்துப் பெண். வெள்ளை மனம் படைத்தவள். அவளுக்கு இருபத்தேழு வயது நிரம்பிய ஒரு மகன் இருக்கிருன் என்ருலும் உலகம் அறியாதவள். நான்தான் அவளுக்கு உலகம். என் மகன்தான் அவளுக்கு உலக சஞ்சாரம். அவள் அப்படிப் பேசுகிற பொழுதெல்லாம் நான் சிரித்துச் சிரித்து மகிழ்வேன். அவள் பின்னிப் பின்னிப் பேசிடுவதைக் கேட்ட எனக்கு அன்று பிரமாதமாகக் கோபம் வந்தது. அவளை ஒரு அறை அறைந்து விடலாமா என்று ஆத்திரம் வந்தது. ஆனுல் அடக்கிக் கொண்டேன். மிகவும் நிதானமாகக் கேட்டேன்.

"கல்யாணி, ஊர் வாயாடிகள் உளறுவதைக் கேட்டு உனக்கு என்ன கவலை—உன் வேலையைப் பார்."

"வாயாடிகள் பேசுவது நம்ம வீட்டைப்பற்றி"

"நம் வீட்டிலே எங்கே ஓட்டையாம் ?"

"எல்லாம், நம்ம பையனைப் பற்றித்தான்"

"ஏனும், எவளாவது வயது வந்த பெண்ணை வைத்துக்கொண்டு இவன் தலையில் கட்டத் தவிக்கிறவள் சொல்லியிருப்பாள்"

"அதெல்லாம் இல்லேன்னு, அவன், அந்தத் தேவடியா மகளோடு சேர்ந்து திரிகிறானும். அந்தப் பாவி, கண்ணே, காதை யாட்டி, என் மகன் மனசை இப்படி மாத்திவிட்டாளே — பைத்தியமாக்கிவிட்டாளே — அடி, பாவி!"

"போதும், போதும்—கல்யாணி கண்டபடி உளருதே"

என் மனைவியை அதட்டினேனே யொழிய, என மனதை அதட்ட முடியவில்லை. என் மனமும் அப்படித் தானே நினைக்கிறது! நான் வெளியில் நடந்தேன். எப்படியும், பாலனைச் சந்தித்து, அவனை அழைத்து வந்து விபரம் சொல்வதென்ற முடிவில்தான் வெளியில் சென்றேன்.

*　　　*　　　*

பாலன் மிகவும் தங்கமானவன். இனிமையாகப் பேசுவான். எவரிடமும் அன்பாகப் பழகுவான். பழகுவதற்குத் தக்க நற்குணங்கள் அவனிடம் உண்டு. பாலனுக்கு என் மகன் கண்ணனிடம் மிகவும் அன்பு உண்டு.

பள்ளிக்கூட நாட்களில் இரண்டுபேரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதேயில்லை. இருவரும் இணைந்தே செல்வார்கள். இணைந்தே திரும்பி வருவார்கள். ஒருநாள், சிறுவர்கள் இருவரும் திரும்பி வரும்பொழுது நான் பார்த்தேன். இருவரும் என்னைக் கண்டதும் அழ ஆரம்பித்துவிட்டார்கள். கண்ணன் என் கால்களைக் கட்டிக்கொண்டான். பாலன் அழுகை வருவதை அடக்கிக்கொண்டான். அவன் சட்டையெல்லாம் கிழிந்துவிட்டது. பை பிய்ந்துகிடந்தது. புத்தகங்கள் எல்லாம் குப்பைக் காகிதம் போல் தாறுமாருகக் கிடந்தன. ஏனென்று எனக்குப் புரியவில்லை.

"பாலா, என்னடா இந்தக் கோலம்"

அவன் பதில் பேசவில்லை.

"எல்லாம் என்னால்தானப்பா"

என் மகன் பேசினான்.

"ஏனடா"

நான் மீண்டும் கேட்டேன்.

"அந்தத் தடிப்பயல் தாண்டவராயன் என் புத்தகத்தை, எனக்குத் தெரியாமல் திருடி வைத்துக்கொண்டானப்பா—அதைப் பாலன் கேட்டான். கொடுக்கமுடியாதென்று அடிக்க வந்தான். இவன் விடவில்லை. இருவருக்கும் அடிதடி சண்டை. அதனால்தான் இப்படி இருக்கிறானப்பா"

"உன் புத்தகத்தைக் கொடுத்தானா இல்லையா, அந்தப் பயல்"

"கிணற்றில் போட்டு விட்டானப்பா"

அந்தச் சின்னஞ் சிறு வயதிலேயே நண்பனுக்காக அடிபட்டான் அவனிடம் போய் என் மகனைப்பற்றிக் கூறினால் தள்ளிவிடமாட்டான். கட்டாயம் வருவான். அவன் மனதறிந்து, அவன் வாழ்வில் மறுமலர்ச்சி காட்டுவான். இப்படி எண்ணிக்கொண்டே நடந்தேன்.

பாலனுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாகி விட்டன. அவன் திருமணத்திற்கு நான் போகவில்லை. காரணம் வேறொன்றுமில்லை. அவன் பெண் கொண்ட வீட்டாருக்கும் எனக்கும் கொஞ்சம் மனவேறுபாடு. அவ்வளவுதான். அதற்குப் பிறகு பாலனைப் பார்த்துப் பேசியிருக்கிறேன். அவன் குடும்பத்தில் ஊறியிருக்கிறான் என்பதை அவன் பேச்சிலிருந்து புரிந்துகொண்டேன். குடும்பத்தைப் புரிந்த ஒருவன், குடும்பத்தின் உயிர்ப் பொருளுணராத ஒரு வாலிபனைத் திருத்த விடுவதே முறையென்றுதான் பாலனைத் தேடுகிறேன்; அவன் உதவியை நாடுகிறேன்.

குடும்பம் என்பது தூண்டா மணிவிளக்கு, அது வெறும் காற்றே புகாத இருட்டறையில் வைக்கப்படவில்லை. அலைகாற்று புகும் பெருந் தாழ்வாரத்தில்தான்

வைக்கப்பட்டிருக்கிறது. காற்றினால் விளக்கு அணையவும் கூடாது; ஒளியும் அதிகமாகப் பரவவேண்டும். சிலபேர் காற்றே அடிக்காத இடத்திற்கு அந்த விளக்கைக் கொண்டு போய்விடலாமா என்று கருதுவார்கள். அவர்கள் அறிவில் சிறந்தவர்களல்ல—காற்றடித்தாலும் விளக்கெரிகிறது பார் என்று காட்டத் துடிப்பவர்களே, அறிவில் வல்லவர்கள். அத்தகைய ஒளி விளக்கடியில் அவன் உட்கார்ந்து மூன்ருண்டுகளாகின்றன. அவனுக்கு அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கும் என்றே எண்ணுகிறேன்.

* * *

நான் என் மளிகைக்குச் செல்வதையே நிறுத்தி ஒரு மாதமாகிறது. கடைக்கணக்கர் கண்ணுசாமிப் பிள்ளை தான் அதன் நிர்வாகத்தைப் பார்த்து வருகிருர். கண்ணன் அந்தப் பக்கமே வருவதில்லை. இவன் 'கணக்கை' முடித்துவிட்டுத்தான் கடைக்கணக்கைப் பார்க்கப் போவதென்று முடிவு செய்துவிட்டேன்.

பாலன்கூட, அதே கடைவீதியில்தான் கடை வைத்திருக்கிருன். அவன் வைத்திருக்கும் கடைக்குப் பெயர் 'விநோதா ஸ்டோர்ஸ்.' அங்கே விற்பனைக்குக் கிடைக்கும் பொருள்கள் விநோதமானவை என்று வேடிக்கையாகக் கூறுவார்கள். அங்கே, குழந்தைகளுக்கு வேண்டிய விளையாட்டுச் சாமான்கள், குமரிகளுக்கு வேண்டிய அலங்காரப் பொருள்கள், இன்னும் புதுவிதமான சாமான்கள் எல்லாம் கிடைக்கும்.

* * *

ஊரிலே பல கட்சிப் பிரசங்கங்கள் நடக்கும். நான் எதற்கும் எப்பொழுதும் காது கொடுப்பதில்லை. என் மளிகைக் கடைதான் எனக்கு கட்சி. அங்கே உப்பு மூட்டை எத்தனை, பருப்பு மூட்டை இந்த வாரத்திற்குப் போதுமா, சர்க்கரை என்ன விலை, சர்க்கார் கண்ட்ரோல் என்ன ஆச்சுது, மிளகாய் வரத்து எவ்வளவு இவைகள்தான் எனக்கு அரசியல் பிரச்சினைகள். ஆனல் பாலனுக்கு அரசியல் விவகாரங்களில் அதிக அக்கரை. என் மகனும் அவன் பக்கந்தான். பாலன்தான் கடை குமாஸ்தா சங்கக் காரியதரிசி. அவன் கடைக்கு எப்பொழுதாவது செல்வ

துண்டு. எனக்கு, கட்சி விவகாரங்கள் பிடிக்காதென்பது கூட அல்ல, தெரியாதென்பதே அவன் எண்ணம். ஆனால் எனக்கும் அவைகள் தெரியும், ஆனால் அவைகள் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாதவர்கள் என்னைப் போல சிலபேர் உண்டு என்று கூறுவதுபோலச் சில வார்த்தைகள் சொல்லி வைப்பதுண்டு.

கோபாலகிருஷ்ணன் பக்கத்தில் காந்தி பொம்மையிருந்தது, அவன் கடையில். நான் சிரித்துக்கொண்டே சொன்னேன், 'கோபாலகிருஷ்ணனும் காந்தியும் சேர்ந்து விட்டாங்க போலிருக்கு' என்று. 'அவங்கதான் கோபாலகிருஷ்ணன் என்ன அந்தக் கடவுள் பரம்பரையே காப்பாத்துகிற வாரிசுகளாகி விட்டாங்க!' என்றான். ஸ்டாலின் பக்கத்திலே நேரு பொம்மை இருந்தது. 'சண்டை வந்துவிடப்போகிறது , தள்ளிவை' என்றேன். 'ஏற்கனவே உடைந்த பொம்மைதான் நேரு பொம்மை. ஆகவே மேலும் உடைந்தால் பரவாயில்லை' என்றான் அவன். 'சண்டை வந்தால் யார் ஜெயிப்பார்கள் என்று நீயே முடிவு செய்துவிட்டாய் போலிருக்கு' என்றேன். அவன் சிரித்தான். இப்படி வேடிக்கையாக எப்பொழுதாவது பேசியிருப்பேனே தவிர குடும்ப விவகாரங்கள் பற்றி அவனிடம் பேசியதில்லை. குடும்பம் என்பது நல்ல மலர். ஆனால் அந்த இதழ்கள் ஒரு கட்டுக்குள் இருக்கிறவரைதான். ஒவ்வொரு இதழாகப் பிரித்துவிட்டால் என்னாகும்? குடும்ப ரகசியங்கள் விசித்திரமான மிட்டாய். குடும்ப சம்பந்தப்பட்டவர்கள் சுவைத்தால் அவை இனிக்கும். ஆனால் குடும்பத்திற்கு வெளியில் இருப்பவர்கள் வாய்க்குப் போய்விட்டால் கசக்கும். இப்படியெல்லாம் நினைக்கிற நானேதான் பாலனிடம் போய் என் மகன் இப்படித் திரிகிறான், நீதான் சொல்லித் திருத்த வேண்டும் என்று கேட்கப்போகிறேன்.

என் தோட்டத்து மாமரமானாலும், மரம் ஏறத் தெரிந்தவர்களை விட்டுத்தானே, கனி கொண்டுவரச் சொல்கிறேன். என் மகன் என் தோட்டத்து மாமரந்தான். ஆனால் மரமேறியைப்போல, பாலனைத் தேடுகிறேன். இதிலே தவறில்லை.

நான் பாலனின் விநோதா ஸ்டோர்ஸை நெருங்கினேன். பாலன் அப்பொழுதுதான் கடையை விட்டு வெளியில் வந்தான். என்னைக் கண்டதும், உள்ளே வரும்படி அழைத்தான். நான் தனித்துப் பேசவேண்டுமென்று கூறினேன். என்னைப் பார்த்த அவன், ஆச்சரியத்தால் அப்படியே சிலைபோலானான்.

"பாலா, நான் என்ன பேசப்போகிறேன் என்பது உனக்குத் தெரியுமா?"

"இல்லை, இப்பொழுதுதான் உங்களிடம் வந்து தனித்துப் பேசவேண்டும் என்று புறப்பட்டேன்"

"என்ன......"

"ஆச்சர்யமாகத்தானிருக்கும். எனக்கும் ஆச்சர்யமாகத்தானிருக்கிறது. எப்படி அதற்குள் உங்களுக்கு அந்தச் சேதி எட்டிவிட்டது என்று புரியவில்லை."

"எந்தச் செய்தி?"

"எல்லாம் அவளைப்பற்றித்தான்"

"அவளா?"

"சும்மாயிருந்தாலும் இருப்பேன்—என்னைப் பெற்றவர்கள் என் உயிரை வாங்கிக் கட்டிவைத்தார்கள். ஓயாத சண்டை, ஒழியாத தொல்லை"

"உன் மனைவியைப்பற்றியா சொல்கிறாய்?"

"ஆமாம்"

"தங்கமான பெண்ணாயிற்றே"

"பின் நான்மட்டும் இரும்பா என்ன—நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், தங்கமான குணம் உண்டு எனக்கென்று"

"உங்களுக்குள் ஏதேனும் சச்சரவா?"

"பின் சரசமா நடக்கும்!"

"ஏனப்பா, அவ்வளவு சலிப்பு—குடும்பம் என்ருல் அப்படித்தான். குடும்பம் என்ருல் சர்க்கரைப்பாகா என்ன? அதுகூடக் கொஞ்சம் அதிகம் சாப்பிட்டால் கசக்கிற உணர்ச்சி வருவதில்லையா?"

"நல்ல குடும்பம்—எனக்கு வேண்டாம், குடும்பமும், குட்டிச் சுவரும்"

பாலன் இப்படிப் பேசுவதைக் கேட்டதும் நான் மனம் இடிந்து போனேன். புதியதோர் குடும்பத்தை உண்டாக்க அவனிடம் சென்றேன். அவனே, குடும்பத்தைக் குட்டிச் சுவர் என்று திட்டுகிருன். குடும்பவிளக்கை ஏற்றிவை என்றுகேட்கச் சென்ற என்னிடம் அந்த விளக்கையே அவிக்கிற அளவிற்கு ஆத்திரமாகப் பேசுகிருன். நான் வந்தவேலையைச் சொல்வதா வேண்டாமா என்பது எனக்குப் புரியவில்லை.

"அந்தப் பெண்ணிற்கு ஒருநாள் நீங்க வந்து புத்தி சொல்ல வேண்டும்."

"ஆகட்டும், உங்களுக்குள் என்ன சண்டை?"

"சண்டையில்லை, சந்தேகம்"

"என்ன சந்தேகம்?"

"என் ஒழுக்கத்திலேயே......'

"என்ன அப்படி நடந்துவிட்டது?"

"நான் நின்ருல் சந்தேகம், எழுந்தால் சந்தேகம், உட்கார்ந்தால் சந்தேகம்—அவள் குடும்பவிளக்காம்— நம்பிக்கை எண்ணெய்க்குப் பதில் சந்தேகத் தண்ணீரை ஊற்றினல் விளக்கு எரியுமா?"

"உன் மனேவியை நீதான் சந்தேகம் தெளிவித்து மகிழ்விக்க வேண்டும்"

"என்ன செய்வதென்றே புரியவில்லை!"

"ஏன், உன் பெற்ருேர்களிடம் சொல்வதுதானே?"

"என் பெற்றோர்கள் அதற்கு மேல்—நான்தான் சந்தேகத் தொல்லையில் மாட்டித் தவிக்கிறேனே—அவர்கள் வேறு குறைமேல், குறை—அவள் இப்படிப் பேசினாள், அப்படித் திட்டினாள், சாக்கிட்டுச் சொன்னாள், சைகை காட்டினாள் என்று அவர்கள். குடும்பமா இது—பிடுங்கல் இது"

"குடும்பத்தைக் குறை கூறாதே. குடும்பம்தான் மனித வாழ்வின் மிக அடிப்படையான உன்னத அம்சம், அது தவறென்றால், மனித வாழ்வே தவறாகும்"

"குடும்பமா? ஐயோ! மாமி மருமகள் போராட்டம், நாத்திக் கொடுமை, மாமா கடுமை எல்லாம் இருந்து, குடும்பம் எதற்கு?"

"இந்தக் கொடுமைகளையும், கடுமைகளையும் கடந்ததுதான் குடும்ப சுகம்"

"அந்தச் சுகம் எனக்குக் கிட்டாதுபோலும்!"

"ஆடாது வராது நாட்டியம், பாடாது வராது சங்கீதம், படிக்காது வராது பட்டம் என்று குழந்தைகள் கை கொட்டி யாடுமே, அதுபோலத்தான் தேடாது வராது சுகம்"

"தேடியலுத்து விட்டேன் நான்"

"சுகம் கிடைக்கிறவரை தேடவேண்டியதுதான்!"

பாலன் ஆத்திரம் தீர பேசும்படி விட்டுவிட்டேன், பிறகுதான் அவனிடம் எதையும் பேசமுடியும் என்ற நம்பிக்கையில். அதன்படியே, அவன் நான் வந்த காரியம் என்னவென்று வினவினான்.

* * *

நாங்கள் வெகுதூரம் நடந்து வந்துவிட்டோம் அங்கு ஒரு 'பார்க்' இருந்தது. அங்கு மக்கள் வரமாட்டார்கள். ஏனெனில் மாலை நேரங்களில் பூந்தோட்டங்களுக்கு எதற்குச் செல்வார்கள்? அமைதியாக அமர்ந்து, வேடிக்கையாக நண்பர்களுடன் பேசியிருக்கலாம் என்பதற்காகச் சில

பேர்—இன்னும் சிலர் தனிமையில் இனிமை காண்போர், ஏதேனும் இரண்டொரு பாடல்களைக் காது குளிரக்கேட்கலாம் என்பதற்காகவும் வரக்கூடும். ஓடும் ரயிலின் இரைச்சலும், கடந்து செல்லும் கார்களின் பேரொலியும் கேட்கவா செல்வார்கள்? ஆனால் அன்று எனக்கும் சரி, அவனுக்கும் சரி நிலை வேறானது! எந்தச் சத்தமும் எங்கள் காதுகளைத் தொடமுடியாது. தொட்டாலும் எங்கள் சிந்தனையை நெருங்கியே இருக்க முடியாது. ஆகவே, அந்தப் பூங்காவில் அமர்ந்தோம்.

அவனிடம், கண்ணனின் விசித்திரப் போக்கை விளக்கினேன். முதலில் பாலன் ஆச்சரியப்பட்டானே யொழிய நம்பவில்லை. கண்ணனா, இப்படியெல்லாம் செய்கிறான் என்று கேட்டான்.

நான் அவனிடம், கேட்டுக்கொண்டதெல்லாம், என் குடும்ப விளக்கை ஏற்றிவை என்பதுதான். அவன் சித்தங் கலங்கியிருக்கிறானா, அல்லது, சிறுமதியால் ஏதேனும் விபரீதத் திட்டமிட்டு அப்படித் திகைத்திருக்கிறானா, எனக்குத் தெரியாது. எனக்கு அவன் மகன், உனக்கு அவன் நண்பன். இருவரும் விரும்புவது புதிய குடும்பம். அதில் அவனும், அவனது அன்பிற்குரியவளும் அங்கம் வகிக்க வேண்டும் என்பவையே! பாலன் சிறிது நேரம் சிந்தித்தான்.

"உங்களிடம் எதுவுமே இன்றுவரை சொன்னதில்லையா?"

"மணம் என்றால் மருள்கிறான்"

"மணத்திலேயே விருப்பமில்லையா?"

"பெண் என்றால் பேசாது உள்ளே சென்று விடுகிறான்"

"பின் என்ன காரணம்?"

"அவன் காரணம் சொல்லவில்லை. ஊரார் காரணம் சொல்கிறார்கள். மங்கம்மாளின் மகள் தேவகிதான் என் மகனை இப்படியாக்கிவிட்டாளாம்!"

"அதையாவது சொல்லட்டுமே !"

"சொன்னால், வேதனைதான் வளரும். சொல்கிறான் என்று வைத்துக்கொள். நான் எப்படி ஒத்துக் கொள்ள முடியும் ?"

"என்ன காரணம் மறுப்பதற்கு ?"

"அவள் வேறு சாதி"

"வேறு சாதியாயிருந்தால்......?"

"அதுமட்டுமல்லவே, அவள் தாய் வழுக்கி விழுந்தவள்"

"தாய் வழுக்கினால், மகள் சருக்கினாள் என்று யார் சொன்னார்கள் ?"

"நீ சொல்லமாட்டாய்—நான் சொல்ல பயப்படுகிறேன்—ஊரார் உரத்த குரலில் சொல்கிறார்களே !"

"ஊரார் வேண்டுமா, உங்கள் மகன் வேண்டுமா ?"

"சிக்கலான கேள்வி"

"இருந்தாலும் சீக்கிரத்தில் தீர்மானிக்க வேண்டிய கேள்வி"

"கொஞ்சம் நாள் கொடு—யோசிக்கிறேன்"

"நன்றாக யோசியுங்கள்—கண்ணன் அப்படி ஏதாவது முடிவு செய்திருந்தால் தடை சொல்லாதீர்கள். நானும் கண்ணனைப் பார்க்கிறேன்"

பாலன் பேசிய பேச்சுக்களைக் கேட்டதிலிருந்து எனக்கு இடிமேல் இடி விழுந்தது போலாகிவிட்டது. என் ஒரே மகன் இப்படிப் பித்துகொண்டவன்போலிருக்கிறானே. என்ன செய்வது என்று வழி கேட்கச் சென்றால், அவன் என்னையே பித்தனாக்கிவிட்டான். மகன் பித்தம் தெளிய வழி, ஒரு பெரிய பழியைச் செய்வதன் மூலம் தான் கிடைக்குமென்று சொல்லிவிட்டான். நான் என்ன செய்வது ?

"பாலா, நம் குடும்ப கௌரவம் என்னுவது?"

"குடும்பம் என்பதே நாம் ஏற்படுத்திக் கொள்வது தானே—அதற்கு இப்படி இப்படி நடந்தால் கௌரவம் என்று நாம் வரையறுத்துக் கொண்ட விதி முறைகள் தானே. அவைகளை மாற்றுவோம். மாற்றியதால் வரும் புதிய கௌரவத்தை நாம் அடைவோம்"

"குடும்பத்தை நீ ஏதோ குயவன் செய்யும் மண் பாண்டம் என்று நினைத்துக்கொண்டாய் போலும்"

"பின் ஆகாயத்திலிருந்து அப்படியே இறக்கி வைக்கப்பட்டுள்ள கருங்கல் சிலையோ?"

"போதுமப்பா, உன்னோடு வாதாடி வெல்ல என்னுல் முடியுமா? அவனைப் பார், அவனுக்குப் புத்தி கூறு—திருந்தச் செய்"

"செய்கிறேன்—சென்றுவாருங்கள்"

அங்கேயே இருவரும் பிரிந்தோம்.

* *

நான் நடந்து வந்துகொண்டேயிருந்தேன். என் மகன் கவனம்தானே எனக்கு—தூரத்தில் யாரேனும் வந்தால், ஒருவேளை அவனே என்று எண்ணுவேன். அருகில் வந்தால் அவனில்லையென்று ஏமாந்து மேலும் நடப்பேன்.

குடும்பத்தில் இத்தகைய குமுறல் வருவது இயற்கை தான். ஆனால் அதனைத் தாங்குகிற வேலையைச் செய்ய என்னுல் முடியவில்லை. கண்ணன், ஊர்ப்பிள்ளைகள் செய்கிற மாதிரி, துடுக்கான காரியங்கள் எதுவும் செய்துவிடவில்லை. இருந்தாலும் என் மனம் தாங்கவில்லை. ஏதோ பெரிய பொதியைச் சுமந்துகொண்டு, கழுத்து வளைந்து செல்லும் தொழிலாளி நிலையில்தானிருந்தது.

என் வீடு பூந்தோட்டம் என்ருலும் அதில் பூத்தமலர் என் மகன்தான். அவனது மணத்தைப் பரப்ப தென்றலைப் போல ஒரு பெண் வரவேண்டும் என்ற எண்ணம் என்னைப்போன்ற தகப்பன்மார்களுக்குத் தோன்றுவது

இயற்கைதானே! அந்தத் தென்றலோ, புயல் என்கிறான் பாலன். நான் என் செய்வேன்? பூந்தோட்டம் என்னாகும்? புயலால் சிதைந்து நாசமாகிவிடுமே என்று பயப்படுகிறேன்.

குடும்பம், சமாதான மாநாடு கூடும் இடமாக இருக்க வேண்டும்—பாலனோ, குடும்பத்தைப் போர்க்களமாக்கச் சொல்கிறானே—எப்படி சரி யென்பது? கெட்டழிந்தவள் ஒருத்தியின் மகளைக் கட்டிக் கொள்வேன் என்பானாம்—அதற்கு நான் சம்மதிக்க வேண்டுமாம். முடியுமா? என் குடும்பம் ஏற்றாலும் சமூகம் ஏற்குமா? பாலன் தான் புரட்சிக்காரன், சமூகம் புரட்சிகரமாக மாறவில்லையே! ஐயோ, என் குடும்பத்தில்தானா, இந்தத் தீ எழவேண்டும்!

என் மனம் சரியில்லை. ஆகவே, என் பாதையில் வருவோர் போவோர்கூட இப்பொழுது தெரியவில்லை. சற்று திகைத்து நின்றேன். தூரத்தில் மூன்று உருவங்கள் தெரிந்தன. எனக்கு யாரென்று தெரியவில்லை. நான் மேலும் நடந்தேன். அவர்கள் மூவரும் பேசிக்கொண்டே வந்தனர்.

நான் திடுக்கிட்டு நின்றேன். வந்தவர்கள் மூவரில் இருவர் இரண்டு இளம் பெண்கள்—நடுவில் இருந்தவன் என் மகன் கண்ணன்!

“கண்ணா” என்றேன்.

“அப்பா” என்றான்.

அதற்குமேல் என்னால் பேசமுடியவில்லை. அந்தப் பெண்கள் நான் விட்டுவந்த பூங்காவிற்குச் சென்றனர். கண்ணன் என்னைத் தொடர்ந்தான். நான் ஏதும் பேசவில்லை. என் குடும்பம் இப்படியா, தெருவில் நிற்கவேண்டும்? என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

தாய் :

குழந்தைகள்கூட, தாங்கள் வாங்கும் பொம்மைகளுக்குக் கல்யாணம் செய்து வேடிக்கை பார்க்கின்றன. ஆனல், இந்தப்பாவிக்கு அந்தப்பாக்கியம் இல்லைபோலும்! பெற்ற பிள்ளை, வீரனுக உலாவுகிருன். அவனுக்கு ஒரு திருமணம் செய்து, அவனும் 'குடியும் குடித்தனமுமாக' விளங்குகிருன் என்று பூரிப்போடு சாகமாட்டேன் போலிருக்கிறது. 'தடியாட்டமா, பிள்ளையை வளர்த்து, இப்படித் திரியவிட்டுவிட்டா!' என்று என்னை ஊரார் பேசுகிருர்கள் இப்பொழுதே. அவரிடமும் தலைபாடாய் அடித்துக்கொள்கிறேன். நான் வேறு என்ன செய்யமுடியும்? கண்ணனிடம் கதறிவிட்டேன். அவன், 'எனக்கு இப்போ வேண்டாம்மா' என்கிருன். 'பின்னே எப்போதான்' என்று கேட்டால், 'சொல்கிறேன்' என்கிருன்.

கண்ணன் நான் பெற்றெடுத்த தங்கக் கட்டி—ஆனல் வளர்ந்த பிள்ளையாய் விட்டானே—வயது இருபத்தேழும் தாண்டிவிட்டதே! அவனிடம் எவ்வளவு சொல்லலாமோ, அவ்வளவுதான் சொல்லலாம். அத்தனையும் சொல்லியாகிவிட்டது. சொன்னேனு, அழுதேவிட்டேன். அப்பொழுது கூட அவன் பிடிவாதம் குறைவதாயில்லை. தாயின் கண்ணீரைப் பார்த்தும் இளகாத அவன் மனம், வேறெதற்கு இளகிவிடும். அவன் மனதிலே என்ன கோளாருே! யார் கண்டார்கள்?

அவரைக் குறைகூறி என்ன செய்யட்டும்? அவன் ஒப்புக்கொண்டால்தானே அவர் ஏற்பாடு செய்வார்? இவன்தான் ஊமைப் பிடிவாதம் செய்கிருன்! சரியாய் ஏண்டா சாப்பிடுவதில்லையென்ருல் வயிறு சரியில்லையென்கிருன். சரியாகக் குளிக்கக்கூட நேரமில்லாமல், எப்பொழுதும் வெளியில் வேலையென்ன வென்ருல் ஊர் வேலையம்மா என்கிருன். ஆனல் அவன் முகத்தில் சிரிப்பென்பதே செத்துவிட்டது. எப்பொழுதும அவன் முகம்

உம்மென்றே யிருக்கிறது. எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படி யோசனை செய்துகொண்டிருக்கிறானே!

வெளியில் தலையை நீட்டிவிட்டால் போதும். ஏதேதோ சொல்கிறார்கள். என் காது பொறுக்கவில்லை! என் வாயும் சும்மாயிருக்காது. என் மகனைப்பற்றி கண்ட படி பேசுகிறார்கள். எனக்கே அம்மாதிரி சந்தேகம் இருப்ப தால் வாய் திறக்கமுடியவில்லை. பேசாமல் உள்ளே வந்து விடுகிறேன். ஆத்திரம் வந்தால் அழுது தீர்த்துக் கொள் கிறேன்.

• * *

ஊரிலேயே, தனித்திருக்கும் குடும்பம், மங்கம்மாளுடை யது. அந்த வீட்டிற்கு வருவார், போவார் யாரென்றே தெரியாது. புதுப்புது மனிதர்கள் வருவார்கள், போவார் கள். ஊரார் கேலியாகவும் பேசுவார்கள், சில பேர் ஆத் திரமாகவும் பேசுவார்கள். அந்த வீட்டிற்கு இவனைப் போகவிட்டதுதான் எங்கள் தப்பு—அந்த நாளிலிருந்து அவரும் அடக்கியதில்லை—நானும் அதட்டியதில்லை. இப்பொழுது வேதனைப்பட்டு என்ன செய்வது?

தாய்தான் தப்பிலி என்றால் மகளும் அப்படித்தான் என்கிறார்கள். ஐயோ, இந்த வெட்கக்கேட்டை எங்கே சொல்வது? ஆத்தாள் ஆறடி பாய்ந்தால், மகள் அறுப தடி பாய்வாள் என்பார்களே—பெரியவர்கள் வாக்கு பொய்க்குமா?

அந்த, வலையில் என் மகன் சிக்கிக்கொண்டான் என்பது உண்மையானால், அந்த வலையை அறுத்தாக வேண்டுமே! யார் அந்த வேலையைச் செய்வது? ஆவ தும், அழிவதும் பெண்ணாலே என்பார்களே! இப்பொழுது ஆனந்தப்படுவதும், ஆத்திரப்படுவதும் பெண்களே தான். மகனை அவர்கள் வலையில் சிக்கவிட்டு தவிப்பதும் பெண்தான்—'ஆகா நல்ல ஆள் சிக்கிக்கொண்டான்' என்று ஆனந்தப்படுவதும் பெண்தான். பெண் விரிக்கும் வலையில், சிக்கிக்கொண்டவர்கள் எப்படித் தப்ப முடியும்? அந்த வலையைப் பெண்ணேதான் அறுக்க வேண்டும்!

ஆண்கள் சென்ருல் அதில் மாட்டித் தவிக்க வேண்டியது தான்!

நானே போய், அவர்களிடம் கேட்பதா? என் மானம் பறிபோகாதா? பிள்ளை வேண்டுமானல், இதுவும்தான் செய்யவேண்டும், இன்னும் இழிவானதாக இருந்தாலும் தான் செய்யவேண்டும். அவனது மலத்தையும, மூத்திரத் தையும் அள்ளிக்கொட்டியவள் தானே—இப்பொழுது இந்த மலத்தையும் நான்தான் நீக்கவேண்டும்!

* * * *

நான், அவர்கள் வீட்டிற்குப் போவதற்கு முன்னல், கண்ணனைக் கேட்டுவிடவேண்டும். அவனது பிடிவாதத் திற்குரிய காரணத்தைச் சொல்லடா என்று எப்படியும் வற்புறுத்திக் கேட்டுவிட்டால்தான் நல்லது—முற்றவிட விட, என் குடும்பத்திற்குத்தான் கேடு!—இப்படி நான் எண்ணிக்கொண்டிருக்கும் பொழுதே கண்ணன் வந் தான்.

"தம்பி, இங்கே வா"

"ஏம்மா,"

"இப்போ, எங்கேயிருந்து வருகிருய்?"

"கடைத் தெருவிலிருந்து"

"நம்ம கடைப்பக்கம் போனுயோ?"

"போகவில்லை!"

"பின்னே, எங்கேயிருந்தாய்?"

"பாலன் கடையில்"

"இவ்வளவு நேரமும் அங்கேதானிருந்தாயா?"

"ஆமாமம்மா, அப்பா, அவனைப் பார்த்தாரா?"

"ஏன்?"

"இல்லே, உங்களுக்குத் தெரியுமா என்பதற்காகத் தான் கேட்டேன்"

"பாலன் ஏதாவது சொன்னுனு ?"

"நீங்கள் சொல்வதையெல்லாம் அவன் சொல்கிருன் "

"நாங்கள் என்ன சொல்கிருேம் ?"

"எடு தாலியை, கட்டு கழுத்தில் என்கிறீர்களே—அதையேதான் அவனும் சொல்கிருன் "

"அவன் நல்ல பையனுயிற்றே"

"அவன் நல்ல பையன்தான்—அவன் பேச்சுதான் நல்ல பேச்சாக இல்லை "

"ஏன், கல்யாணம் செய்துகொள் என்று கூறுவது தப்பா ?"

"தப்பில்லை—கல்யாணம் என்ருல் யாருக்கு, எப்பொழுது, ஏன் என்றெல்லாம் யோசிக்கவேண்டாமா ?"

"கல்யாணம் யாருக்கு—உனக்கு—எப்பொழுது—என்றைக்கு வேணுமாஞுலும்—ஏன், வயதாகிவிட்டது !"

கண்ணன் சிரித்துவிட்டான். பட்டிக்காட்டில் பிறந்தவள் என்ருலும், பட்டினத்து மகனுக்குத் தாயாயிற்றே—இதுகூடவா பேசமாட்டேன் என்று வேறு கேட்டுவிட்டேன். அவனது சிரிப்பு இன்னும் பலமாகிவிட்டது. என் மகன் முகத்தில் சிரிப்பைப் பார்த்ததும் என் உள்ளம் குளிர்ந்தது. அந்தச் சிரிப்பை வரவழைத்த என்னை நானே புகழ்ந்துகொண்டேன். அந்தச் சிரிப்பை நீடிக்க வைக்கவேண்டும் என்று மேலும் பேசினேன். ஆனுல் அவன் சிரிப்பு பறந்துவிட்டது. மௌனமாகிவிட்டான். அந்த ஊமை நிலைதானே, எங்கள் குடும்பத்திலிருந்த குதூகலத்தைக் கொன்றது !

* * * *

பாலனிடம் அவர் என்ன சொல்லியிருப்பார். கண்ணனின் நண்பனுயிற்றே, நீயாவது சொல்லக்கூடாதா என்று கேட்டிருப்பார். அவனும் சின்னபிள்ளைதானே—அவன் மட்டும் என்ன செய்துவிட முடியும் ? நாங்கள்

கேட்பதைப்போலவே பாலன் கேட்கமுடியும்? எங்களிடம் கூருமல் ஒளிப்பதையெல்லாம் கூடச் சொல்வான், ஆனால் அவன் இந்தச் சிக்கலை எப்படித் தீர்த்துவைப்பான்? அந்த வீட்டிற்கு அவனும் போக ஆரம்பித்தால், என் மகன் கதையே ஆகிவிட்டால்? பாவம், அவன் மணமானவனு யிற்றே—என் குடும்பத்தைக் காக்க வந்து, அவன் குடும்பம் பாழாகவேண்டுமா? அவர் அந்தப் பிள்ளையாண்டானிடம் என்ன கூறினரோ தெரியவில்லையே!

அவனை நானும் பார்த்து ஒரு குறை அழுது தீர்த்தால் தேவலைபோலிருக்கிறது. குடும்பம் என்பது அடுப்பங்கரையிலுள்ள உக்கிராண அறை மாதிரிதான். அங்கே உப்பு ஒரு பானையில், புளி ஒரு பானையில், மிளகாய் ஒரு பானையில் இருக்கும்—தனித்தனியே சுவைத்தால் ஒன்று கரிக்கும், மற்ருென்று புளிக்கும், இன்னொன்று உரைக்கும். ஆனால் இவை மூன்றும் சேர்ந்தால் சுவையான குழம்புமாகும். அம்மாதிரிதான் குடும்பத்தில், சுகம், துக்கம், எரிச்சல், வருத்தம், கோபம் என்று ஏதேதோ இருக்கிறது. இவை சேரும்பொழுதுதான் குடும்பத்தின் முழு இன்பம் கிடைக்கிறது, வெறும் மகிழ்ச்சி நாளடைவில் வெறுப்பைக் கொடுத்துவிடும். ஒரே துன்பம், கடைசியில் விரக்தியை அளித்துவிடும். இரண்டும் கலந்திருக்கவேண்டும். அப்படிப் பார்க்கிறபொழுது, என் குடும்பத்திற்கு இப்பொழுது துன்பப்பட வேண்டிய காலம் போலிருக்கிறது.

ஆனால் அந்தத் துன்பம் நீங்காத துன்பமாகிவிடக் கூடாது. எப்படியும் கண்ணனைக் கல்யாண கோலத்தில் காணவேண்டும். அதற்காக எது வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறேன். நான் பெற்ற மகனுக்காக என் உயிரையே கேட்டாலும் தரத் தயங்கமாட்டேன். அவனுக்காக எதையும் செய்வேன். அவன் வாய் திறந்து எதையாவது சொன்னல்தானே! அவன்தான் மூடிய வாயைத் திறப்பதில்லையே!

* * * *

"மங்கம்மாளிடம் போய்வா" என்று அவன் வாய் திறந்து சொல்லிவிட்டால், போவேன். என் மானம்,

மரியாதையைத் தூக்கிக் கட்டிவைத்துவிட்டுச் செல்வேன். அவர் தடுத்தாலும், உற்ருர் உறவினர் காரியுமிழ்ந்தாலும், ஊரார் தூற்றினுலும் போய்க் கேட்பேன். ஆனுல் அவன் எதையும் சொல்லவில்லையே!

சாதி, சம்பிரதாயம், சடங்கு எல்லாம், எனக்கும் தெரியும். ஆனுல் என் மகன்தான் முதல்—மற்றவை எல்லாம் இரண்டாவதானவையே' சாதிப்பெயரைச் சொன்ஞலும், சம்பிரதாயத்தைக் காட்டி மிரட்டினுலும் நான் பின்வாங்கமாட்டேன். என் மகன் மனம் மகிழ்ந்தால்தான் எனக்குக் குடும்பம், கோத்திரம் எல்லாம். அவன் பித்தம் பிடித்தவன்போல் அலைகிறபோது நான் குடும்பமா நடத்தமுடியும்!

ஐயோ, நான் பெற்ற செல்வத்தின் இன்றைய கோலத்தைப் பார்த்தால், என் பெற்ற வயிறு பற்றியெரிகிறது! அவனுக்கு என்ன குறை! ஏன் அவன் அப்படியிருக்க வேண்டும்?

இப்படி தினமும் எண்ணி எண்ணி ஏங்குவதால் கல்யாணம் நடந்துவிடாது. இன்று புறப்பட்டுப் போகிறேன். அந்தச் சின்ன குட்டி தேவகியையே கேட்கிறேன். 'ஏனடியம்மா, என் பையனுக்கு என்னதான் சொல்லி வைத்திருக்கிருய்?' என்று கேட்டுவிடுகிறேன். அவள் என்னை நேரில் பார்த்த பிறகுமா சும்மாயிருப்பாள்? சிக்கல், நீங்கிஞல் நீங்கட்டும். இல்லாவிட்டால் நூலாவது அறுந்து விடட்டும். அப்படிப் போய்த்தான் காரியத்தை முடிக்கவேண்டும்.

ஐயோ, அவள், 'எனக்கென்ன சங்கடம், நான் அவரைத் திருமணம் செய்துகொள்கிறேன். திருமணத்தை நடத்திவையுங்கள்' என்று கூறிவிட்டால். அதற்கு நான் தயாரா? அவர் எப்படிச் சம்மதிப்பார்? அவரை எப்படிச் சம்மதிக்க வைக்கமுடியும்? என்ன காரணம் காட்டினுலும் சீறுவாரே! அதே நேரத்தில் என் மகன் மட்டும் சீரழிவதை நான் எப்படிச் சகிப்பேன்? அவர் மட்டும் சகிப்பாரா, என்ன!

என் குடும்பம், இப்படித் தணலில்பட்ட புழுபோல நெளிந்து சாகிறது! அவரோ, எல்லாவற்றையும் மனதில் வைத்து நொந்து சாகிறார்! அவனோ, பித்தன் போலத் திரிகிறான்! நானோ, இந்தக் கோரக் கொடுமையைத் தாங்கமுடியாமல் தினமும் அழுது அழுது முகம் வீங்கிக் கிடக்கிறேன்.

* * *

மாலை நேரம் மனதைத் தேற்றிக்கொண்டு, வீட்டு வேலைக்காரிவள்ளியம்மாவைத்துணைக்கழைத்துக்கொண்டு புறப்பட்டேன். கோயிலுக்குப் போய்விட்டு வருகிறேன் என்றுதான் அவரிடம் கூறினேன். ஆனால் நான் புறப்பட்டுப் போக எண்ணிய கோயிலோ, மங்கம்மாளுடையது. அங்கு தரிசிக்கவேண்டிய அம்மனோ, தேவகியம்மன். கேட்கவேண்டிய வரமோ, கல்யாண வரம்! இதை எப்படி அவரிடம் கூறமுடியும்? பெற்ற மகனுக்காக, தாய் செய்ய வேண்டியது இது என்று நான் போகிறேன். செய்வது சரியோ, தவறோ அதுபற்றிய கவலை எனக்கில்லை.

போகிற வழியிலேயே, வள்ளியோடு பேசிக்கொண்டே நடந்தேன். பூக்கடையில் கொஞ்சம் பூ, பழக்கடையில் சில பழங்கள் வாங்கிக்கொண்டேன்.

"ஏம்மா, பூஜைக்கா?"

"ஆமாண்டியம்மா, அம்மன் பூஜைக்குத்தான்."

"அப்போ, சிவன் கோயிலுக்கில்லையா?"

"சிவன் கோயிலுக்குமில்லை—சிவகாமி கோயிலுக்குமில்லை"

"ஊ ஹா்ம்........."

"என்னடி அது, திடீரென்று பெருமூச்சு விடுகிறே"

"ஒன்னுமில்லை—என் பெரிய பெண்ணு பேரு சிவகாமி—அவள் நினைப்பு வந்துவிட்டது"

"அவளுக்கு என்ன?'

" அவள் ஒரு குடும்பமாவான்னுதான் பார்க்கிறேன்: நடக்கல்லே "

" ஏன் ?"

" எவனாவது கட்ட வந்தாத்தானே ?"

" அவளை ஏன் கட்டவரல்லே "

" அதுதான் தெரியவில்லை "

" ஏதாவது அங்கஹீனமோ ?"

" கால் கொஞ்சம் தாங்கல்—கண் கொஞ்சம் சாயல்"

" பின்னே என்னடி பண்றது? "

" ஏம்மா. ஆண்பிள்ளைகளிலே அப்படி ஊனமானவங்க கல்யாணம் கட்டிக்கிறதேயில்லையா ?"

" அப்பொழுது எவனாவது நொண்டி, குருடு வரவேண்டும் "

" அது வருகிறபோது வரட்டுமென்று விட்டுவிடுவேன்—என் சின்ன பொண்ணு சிங்காரி பண்ற தொல்லைதான் தாங்கவில்லை. அக்காவுக்குக் கல்யாணமானால்தான் நான் பண்ணிக்குவேன் என்கிருள். அவளுக்கு ஒரு குரைச்சலில்லே. தினம் நாலு பயல்கள் அவள் காலடியில் காத்துக்கிட்டு கிடப்பான்க "

" அதென்னடியம்மா, அவளுக்கு அந்த வைராக்கியம் "

"வைராக்கியமாவது, மண்ணாங்கட்டியாவது; அந்தக் குட்டி மனசிலே ஒண்ணை வைச்சுகிட்டு, வெளியிலே வேருென்னைப் பேசரா "

" என்ன அவள் மனதிலே "

" எங்க அண்ணன் சிங்கப்பூர் போயிட்டாரில்லே "

" ஓகோ—எப்போ ?"

' போய் நாலு வருசத்துக்கு மேலாகிறது "

“ அதுக்கு என்ன ?”

“ அவரோட மூத்த பய முனியப்பன் பேரிலே இந்தக் குட்டிக்கு மோப்பம். அந்தப் பயலும் இங்கிருக்கிற வரையிலே, சிங்காரி, சிங்காரின்னு இவளைச் சுத்திகிட்டே திரிவான். அவன் வரட்டுமிங்கிறதற்காக இப்படி நாளை ஒத்திப் போட்ரா ”

“ பலே கைகாரிதான் உன் மகள் ”

“கைகாரியாயிருந்து என்ன செய்யட்டும்—காலம் போகிறபோக்கு தெரியல்லையே! அந்த அண்ணனுக்கு சிங்கப்பூர் போனப்புறம் ஒரு கார்டுகூட கிடைக்கவில்லை. அவன் எப்போ வர்ரானோ என்ன கர்மமோ—அவனை நம்பி கிட்டே யிருக்கமுடியுமா ?”

“ இரண்டு பெண்களைப் பெறறவள் கதையெல்லாம் இப்படித்தானிருக்குமோ ?”

“ எம்மா, அப்படிக் கேக்கறிங்க—குடும்பம் என்றால் இதெல்லாம் இருப்பது சகஜந்தானே !”

“ அதுக்கில்லடியம்மா, அப்படியொரு எண்ணம் எனக்கு இப்போ வந்துவிட்டது. அதனாலே சொன்னேன் ”

நான் வள்ளியம்மையோடு பேசிக்கொண்டே சென்றதால், போகுந்தூரம் தெரியவில்லை—போய்க்கொண்டே மேலும் அவளோடு பேசினேன்.

“ ஏண்டி, உன் கணவனுக்குத்தான் காசநோய்—வீட்டிலே படுக்கையாய் கிடக்கிறான். நீ ஒருத்தி சம்பாதித்தா குடும்பம் நடக்கிறது.”

“ இல்லேம்மா, பெரியபொண்ணு நோய் பிடித்த அப்பனையும், வறுமை பிடித்த வீட்டையும் பாத்துக்குவா —நானும், என் சின்ன மவ்ளும் பாடுபடரோம் ”

“ சின்ன மகள் எங்கே வேலையிலிருக்கிறா ?”

"முதல்லே, பாப்பாரத் தெருவிலே வேலைக்கிருந்தா —இப்போ, மல்லிகையம்மன் கோவிலுகிட்டே ஒரு வீட்டில்"

"யாரது? மங்கம்மா வீட்டிலேயாவா?"

"ஆமாமம்மா"

எனக்கு அதற்குமேல் பேசமுடியவில்லை. வள்ளியின் மகளைக்கொண்டு, அவர்கள் குடும்ப நடவடிக்கைகளை அறிந்துகொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது.

*   *   *   *

ஒரு வீட்டு வாசற்படியிலிருந்து "வாங்க அத்தை" என்ற குரல் கேட்டது. திரும்பினேன். அது பாலன் வீடு. அவன் மனைவி சுந்தரிதான் என்னை அழைத்தாள். என்னை அத்தையென்று முறைவைத்து அழைப்பது வழக்கம். அவருக்கும், இந்தப் பெண்ணுடைய தகப்பனுக்கும் வியாபார சம்பந்தமாக மனவிகல்பம் வந்ததாலே, இந்தப் பெண்ணின் கல்யாணத்திற்குக்கூடப் போகக்கூடாது என்று தடுத்துவிட்டார். ஆனாலும், அந்தப் பெண்ணின் இனிய குணமும், எப்பொழுதும் சிரித்த முகமும் என்னால் மறக்கமுடியாதவை. சுந்தரியைப் பார்க்கிறபொழுதெல்லாம், என் மனதிலே என்னையறியாமலே ஒரு குதூகலம்—ஆகவேதான் அவளைக் கண்டாலே ஆனந்தப்படுவேன். அவளிடம் வேடிக்கையாகப் பேசிக் காலத்தை யோட்டுவேன். சுந்தரியைப் பார்க்கிறபொழுதெல்லாம் எனக்கு மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது. ஏனெனில் அவளைப்போல எனக்கொரு மருமகள் கிடைத்தால், என் குடும்பம் எவ்வளவு இனிமையாக இருக்கும் என்று எண்ணிடுவேன். உடனே என்னையறியாமல் ஆனந்தம் பீறிட்டுக் கொண்டுவரும்.

சுந்தரி, என்னை ஆசையோடு 'அத்தை' என்று அழைக்கிறபொழுது, என் கண்களை நானே மூடிக்கொள்வேன். வெதுவெதுப்பான ஒரு சுக எண்ணம் என் மனவலிக்கு இதமாக ஒத்தடம் தரும். அப்படித்தான், அன்று அவள் அழைத்த பொழுதும் இருந்தது. உள்ளே சென்

றேன். பாயை விரித்தாள்—வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள். நான் அமர்ந்தேன். அவளை யும் உட்காரும்படி கேட்டுக்கொண்டேன்.

"சுந்தரி, உன் மாமியில்லையோ?"

"இல்லாத வரையில் நல்லதுதான்"

"என்னடி, மாமியோடே ஏதேனும் மனக்கசப் போ?"

"கசப்புமில்லே, தித்திப்புமில்லே அத்தை, வயதான வங்கன்னு எதை வேண்டுமானாலும் பேசிவிடலாம்—வயது குறைந்தவங்க எதை வேண்டுமானாலும் கேட்டுச் சகிக்க வேணும்னு முடியுமா?"

"அப்படி என்ன நடந்துவிட்டது?"

"இன்னும் என்ன நடக்கணும்"

"நடந்ததைச் சொல்லு, சுந்தரி, நான் வேணுமின்னு உங்க மாமியைக் கேக்கறேன்"

"ஐயோ, இப்போதான் பத்து நாள் ராம ராவண யுத்தம் முடிந்திருக்கு—நீங்க போய் ஏதேனும் கேட்டு விட்டால், பதினெட்டு நாள் பாரத யுத்தம் ஆரம்பமாகி விடும்"

"பெரியவங்களை அப்படியெல்லாம் பேசாதே, சுந்தரி"

"பெரியவங்க, பெரியவங்களாட்டம் நடந்துகொள்ளல் லேயே அத்தை"

"வாய்த் துடுக்காகப் பேசாதே—என்னிடம் பேசுகிற மாதிரி அவர்களிடமும் பேசினா வருத்தம் வராதோ?"

"அத்தை, இந்த நியாயத்தைக் கேளுங்கோ. என் மாமியாகட்டும், மாமாவாகட்டும—இரண்டு பேரும் வய தானவங்கதானே. அவங்களுக்கு எந்தக் குறையும் நான் செய்கிறதில்லை. ஒருவேலைகூட என் மாமி செய்யவிட மாட்டேன். வயதான காலத்தில் ஏன் அவங்களை வேலை வாங்கிறது என்பதற்காக, அதற்குக்கூட சண்டைக்கு வந்துவிட்ராங்க"

"ஏன் ?"

"வீட்டு எஜமானியம்மா இவ-இந்த வீட்டிலே நான் எதையும் செய்யக்கூடாதாம் என்று ஒருநாள் ஆரம்பித்து விட்டாங்க. சரின்னு வேலை செய்யட்டும்னு விட்டுட் டேன்—அதுக்கும் யுத்தம் ஆரம்பிச்சுட்டாங்க"

"என்னன்னு"

"நான் என்ன இந்த வீட்டு வேலைக்காரியா என்ன, புழுக்க வேலை செய்தால்தான் நான் சாப்பிடலாமா? என்று ஒப்பாரியே வைத்துவிட்டார்கள்—இதிலே நான் எப்படிக் குடும்பம் நடத்துவது ?"

"நீ தாம்மா, எல்லாம் சகித்துக்கொள்ள வேண்டும்"

"அதுமட்டுமில்லே—இன்னும் கேளுங்க. அவங்க காலத்தைப் போல நான் நடக்கணுமாம். அவரோடே சிரித்துப் பேசினு, போதும். இந்தக் கிழங்கள் இங்கே முணுமுணுக்கும். 'மயக்கிரு, பயலை' என்பார் என் மாமா. 'ஒங்க கல்யாணம் ஆகி, மூணுமாசமாச்சு, உங்க முகத்தை நான் ஏறிட்டுப் பார்க்க-இந்தக் காலத்திலே, தாலிகட்டின அடுத்த நிமிடமே, தலைகீழாய் குதிக்குதுங்க,' என்று சாட்சியோடு என்மீது வழக்கு தொடுப்பாங்க என் மாமி—இவை என் காதில் விழாமலிருப்பதில்லை. அவர் காதிலும்தான் விழும். அவர் எப்படியோ சிரித்துக்கொண்டு சகித்துக்கொள்கிருர். என்னையும் அப்படியே இருக்கச் சொல்கிருர். முடிகிறதா ?"

"குடும்பம் என்பது அலையோசையே கேட்காத நடுக் கடலல்ல—அலைகள் புரளும் கடலோரம்—அங்கேதான் குழந்தைகளும் குட்டிகளும்போய் அலையில் நின்று ஆனந்தமாக ஆடுவார்கள். இதை மனதிலே வைத்துக் கொண்டால் உனக்கு வருத்தமே வராது, சுந்தரி. நானும் உங்க மாமிமாதிரி பழங்கால பாண்டந்தான். இருந்தாலும் என் பேச்சை நீ எப்பொழுதும் தட்டியதில்லை. இப்பொழுதும் அதைத்தான் சொல்கிறேன். என் பேச்சின்படி, எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, சிரித்துக்கொண்டேயிரு."

" அலைகள் எவ்வளவு பயங்கர விபத்துக்களை உண்டாக்கிவிடுகின்றன "

" ஆனால், அலைகள் இல்லாவிட்டால், கடலென்றே பெயரிருக்காது"

" அலைகள் இருக்கலாம்—கொந்தளிப்பு கூடாதே அத்தை"

" கொந்தளிப்பு நெடுநேரம் நிற்பதில்லை, சுந்தரி "

" அத்தை தாங்களே எனக்கு மாமியாக இருந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் "

" உம்.........நடக்க முடியாததைப்பற்றி ஏன் பேசுகிறாய், சுந்தரி—பெரியவர்கள் தான் இப்படி—உன் கணவன் அன்பாக நடந்துகொள்வதில்லையா ?"

" அவர் அன்பாக நடந்துகொள்கிறார்."

" ஏன் சலிப்பாக அதைச் சொல்கிறாய் ?"

" ஆனால், நான் அவரிடம் அன்பாக நடந்துகொள்வதில்லை."

" ஐயோ—இதென்ன கூத்து ?"

" அவர் அன்பில் எனக்கு நம்பிக்கையில்லை—அவர் அன்பாக இருப்பதாக நடிக்கிறார் என்றுதான் நினைக்கிறேன் "

" அன்பு—நடிப்பில் வராது, சுந்தரி "

" வருகிறதே, அத்தை '

" உன்னிடம் அன்பு காட்டாமல் வேறு யாரிடம் அன்பு காட்டப்போகிறான் அவன் ?"

" அவர் அன்பிற்குப் பாத்திரமானவள் எவளோ ஒருத்தி இருப்பதாக நான் எண்ணுகிறேன் "

" வீண் சந்தேகத்தால், அவன் மனதைப் புண்ணாக்கிவிடாதே "

"நான் பெண்ணுயிற்றே--எப்படி அத்தை, அந்தச் சந்தேகத்தோடு அவரோடு சரியாக நடந்துகொள்ள முடியும்?"

"உன் கணவன்தானே அவன்—அவனை நேரில் கேட்டுவிடு"

"திருடனை, திருடினுயா என்று கேட்டால், திருடி னேன் என்று ஒத்துக்கொள்வதுண்டா?"

"அப்பொழுது தீர்மானமாக, உன் கணவனைத் திருட னென்று முடிவுசெய்துவிட்டாய்"

"ஆமாம்"

"அப்படியானுல், அவன் திருடனுவதற்கு நீதான் காரணம்"

"ஐயோ, இதென்ன, திடீரென என்மீது பழி சுமத்து கிறீர்கள்!"

"இல்லாதவன்தானே திருடப்போவான்"

"ஆமாம்"

"நீ அவனுக்கு வேண்டியதையெல்லாம் தரவில்லை. ஆகவேதான் திருடப்போகிருன்"

"இந்த அத்தை, மகா பொல்லாத அத்தை!"

சுந்தரி சிரித்துக்கொண்டே உள்ளே ஓடினுள். ஒரு டம்ளர் நிறைய காபி கொண்டுவந்தாள். என்னுடன் பேசிக்கொண்டேயிருந்தாள் சுந்தரி. ஆனுல், இரண் டொரு தடவை உள்ளே சென்ருள்—அதற்குள் காபி கொண்டுவந்துவிட்டாள். குடும்பத்திற்கேற்ற குல விளக்கு இவளல்லவா? விருந்துபசரிப்பை எவ்வளவு கச்சிதமாகச் செய்தாள். இவளை வைத்து, குடும்பத்தை நடத்தமுடியாமல் மனக்கசப்பு வரும்படி செய்கிருர்களே என்று எண்ணினேன். எனக்கு இப்படியொரு மருமகள் கிடைத்தால் இப்படியா நடக்கவிடுவேன் என்று என் மன திற்குள்ளேயே ஒரு கேள்வியை எழுப்பினேன்—என் கண் களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

சுந்தரியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வெளியில் கிளம்பினேன. வெளியில், வள்ளியம்மாள், அந்த வீட்டு வேலைக்காரி விசாலாட்சியிடம் வம்பளந்துகொண்டிருந்தாள். என்னைக் கண்டதும், 'பூலோகத்திலே பிறந்தாலே இப்படித்தான், அதுவும் பெண்பிள்ளையா பிறந்தாலோ, சொல்லவே வேண்டியதில்லே' என்று கூறிக்கொண்டே எழுந்தாள்.

* * * *

வெளியில் கொஞ்சதூரம் நடந்து வந்தோம். எதிரில் வந்த பெண்ணோடு, வள்ளி, வழியை மறித்து நிறுத்திப் பேச ஆரம்பித்துவிட்டாள். அந்தப் பெண் யாரென்று முதலில் எனக்குத் தெரியவில்லை. வள்ளி பேசிய பேச்சிலிருந்துதான் புரிந்துகொண்டேன்.

"ஏம்மா, சிங்காரி ஒழுங்காய் வேலை செய்கிறாளா?"

"ஓ, அவள் நல்ல பெண்ணாயிற்றே-இட்ட வேலையைத் தட்டுவதே கிடையாது"

"ஏதோ, உங்க ஆதரவிலே, நல்லபடி பார்த்துக்குங்க —உங்க தங்கச்சி மாதிரி"

"அவளுக்கு இண்ணைக்கு என் புடவை ஒண்ணுகூட தந்தேன்"

"நீங்க நல்லாயிருக்கணும்—ஏம்மா, இப்போ எங்கே போறீங்க?"

"அடுத்த தெருவிலே என் சிநேகிதி சுந்தரி வீட்டிற்கு"

"அங்கிருந்துதான் நாங்களும் வருகிறோம்."

வள்ளியோடு பேசிக்கொண்டிருந்த அந்தப் பெண் என் பக்கம் திரும்பினாள். அவளாகவே பேசினாள்.

"அம்மா, ஏன் பேசாமலே நிக்கிறீங்க—நான்தான் மங்கம்மா மகள்—மூத்தவள் ரேவதி"

"எவ்வளவோ பெரியவளாய் வளர்ந்துட்டே—நான் உங்க வீட்டுப்பக்கம் போகலாமென்றுதான் கிளம்பினேன்"

" ஓ வாங்க, போகலாம் "

" அம்மா வீட்டிலிருக்கிருங்கல்லே—நான் போய்ப் பார்க்கிறேன். நீ போய்வாம்மா "

ரேவதி, சுந்தரி வீட்டிற்குச் சென்ருள். எனக்கு ஏதும் புரியவில்லை. சுந்தரிக்கும், ரேவதிக்கும் எந்த வகையிலும் நட்பு ஏற்படவழியில்லை, ரேவதி வீடே, ஊராருக்கு ஒரு அதிசய வீடல்லவா? அங்கே, போய்வருபவர்களையெல்லாம், காட்சிசாலையிலுள்ள மிருகங்களைப்போலல்லவா பார்ப்பார்கள். இவள் எப்படி சுந்தரிக்கு நட்பானுள் என்று எனக்குப் புரியவில்லை.

ரேவதி பாட்டு வாத்தியாராகிவிட்டாள் என்று கேள்வி. இந்த ஊரில் பாட்டு சொல்லிக்கொடுக்க யார் அவளை அழைப்பார்கள்? அந்தக் குடும்பத்தார் பட்ட இடம் அழுக்கு என்று பேசுபவர்கள், தங்கள் பிள்ளைகளுக்கா பாட்டு சொல்லிக்கொடுக்க அழைப்பார்கள்! அப்படியென்ருலும், சுந்தரிக்கு இப்பொழுதென்ன பாட்டு தேவைப்படுகிறது? குடும்பப் பெண், அவள். அவள் பாடக் கற்றுக்கொண்டு, கச்சேரி செய்யவா போகிருள்? அல்லது, இந்த ரேவதியைப்போல, பாட்டு வாத்தியார் அம்மாவாக பவனி வரப்போகிருளா?

இந்தப் பெண் சகவாசத்தால், அவள் குடும்பத்தில் குமுறல் வந்துவிடக்கூடாதே! இப்பொழுதுதானே கணவன்மீது சந்தேகம் என்று அந்தப் பெண் சொன்னுள். அந்தச் சந்தேகம், இந்த ரேவதியால் சங்கடமாக மாறிவிட்டால் அந்தக் குடும்பத்தில் கொந்தளிப்பல்லவா ஏற்பட்டு விடும்.

ரேவதியைப்பற்றி எண்ணிக்கொண்டே போகும் பொழுது, எனக்கு வேருெரு கவனம் வந்தது. 'மணியாகி விட்டது. வீட்டிலே அவரில்லை. வீட்டைப் பூட்டிக் கொண்டு வந்துவிட்டேன். கண்ணன் வந்து, கதவைப் பூட்டியிருப்பதைப் பார்த்துத் திரும்பியல்லவா விடுவான்! என்று எண்ணினேன். இன்று அந்த வீட்டிற்குப் போகாமல் திரும்பிவிடலாமா? நேராக என் வீட்டிற்குப் போய்விடலாமா? எனக்குச் சரியான முடிவுக்கு வரமுடியவில்லை. இன்றைக்கு எவ்வளவோ மனதைத் திடப்படுத்

திக்கொண்டு கிளம்பினேன். இந்த மனத் துணிவு நாளைக்கு இருக்குமோ, என்னவோ—அறியேன். ஆகவே நினைத்தபடி, அந்த வீட்டிற்குப் போய்த்தான் தீரவேண்டும். போய் அந்தப் பெண்ணைக் கேட்டுவிட்டே திரும்புகிறேன்.

* * *

தூரத்திலே அந்த வீடு தெரிந்தபொழுது, என்னையறியாமல், என் மனதில் ஒரு திகில் ஏற்பட்டது. பிள்ளை பாசத்திற்காக, இதுவரை, உள்ள சாதி முறைகளையெல்லாம் விட்டுவிடமுடியுமா? குடும்பம் என்றால், காட்டிலே உள்ள புலிக்குகை போலல்லவா? ஒரு நெருக்கமான சமூகத்தின் சந்தடிமிக்க ஒரு தனி அங்கமாயிற்றே! அதைப் பிய்த்தெடுத்து எங்கோ கண்காணாத இடத்தில் போடுவது போலல்லவா முடியும்! சமூகத்தார் எதிர்க்கிற காரியத்தைச் செய்துவிட்டு, தனியாகிவிட்டால், பாலைவனப் பறவையாகிவிடாதா என் குடும்பம்? நல்லது, பொல்லாதது நடந்தால் நாதியற்றவர்கள் போலாகி விடமாட்டோமா? பிறகு யார் இந்தக் குடும்பத்தைச் சீண்டுவார்கள்?

தங்க விக்கிரகம் மாதிரி பெண்ணை வளர்த்துவைத்துக் கொண்டு காத்திருக்கிறாரே, என் அண்ணன். அவருக்கு என்ன பதில் சொல்வேன்? தேவகியை நான்தான பார்த்து முடித்துவைத்தேன் என்று கூறிட என் நா குழறாதா? அதைக் கேட்க அவர் மனம் பதறாதா?

பிள்ளைக்காக, நான் இதைச் செய்தால், அவரின் அடங்காத கோபத்திற்கு யார் ஈடு கொடுக்கமுடியும்? இவைகளையெல்லாம் யோசிக்காமல், அங்கே போய் நான் என்ன செய்யட்டும்? என்ன பேசட்டும்?

ஐயோ, என் குடும்பத்திற்கு இப்படியொரு நெருக்கடி ஏன் வரவேண்டும்? நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? என்னை இப்படி வாட்டி வதைப்பானேன்? நான் எந்த சாமிக்கும் எந்தக் குற்றமும் செய்தவளல்லவே—எந்தக் குறை செய்தேனென்று என்னைச் சோதிக்க வேண்டும்?

உம், ஈசனை நொந்துகொண்டு என் செய்வது? நம்ம குடும்பத்தைவிட, அவர் குடும்பத்திலே கூடத்தான் இம்மாதிரி சங்கடம் வந்திருக்கிறது! முருகன், குறசாதிப் பெண்ணையே கட்டிக்கொள்வேன் என்று பிடிவாதம் செய்யவில்லையா—அதற்கு முருகனுடைய அண்ணன் விநாயகரே யானை வடிவெடுத்து உதவி செய்யவில்லையா? அப்படித்தான், என் பிள்ளைக்காக இந்தக் காரியத்தைச் செய்கிறேன்.

வேசித்தொழில் புரிபவளானலும், அவள் வீட்டில் அல்லவா என் பிள்ளையின் பித்தத்திற்கு மருந்திருக்கிறது—ஆகவேதான் போயாக வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், நான் ஏன் நாறிப்போன இடங்களுக்கெல்லாம் போகவேண்டும்? ரோஜாப்பூ மாலை கட்ட வேண்டுமானல், ராஜாத்திமாதிரி நான் இருப்பேன். அண்ணன் மகள் அஞ்சுகம் என்றைக்கோ மருமகளாகி என் வீட்டிற்கு வந்திருப்பாள். கதம்ப மாலையல்லவா, அவன் கேட்கிருன். அதனல்தான் தழைகண்ட இடங்களுக்கெல்லாம் போகவேண்டியிருக்கிறது.

கடைசியில், இந்த எண்ண பளுவுகளைச் சுமந்துகொண்டு, அந்த வீட்டிற்குள் நுழைந்தேன். மங்கம்மாள் என்னை அப்பொழுது எதிர்பாராததால், திகைத்து நின்ருள், சிறிது நேரம்—அடுத்த கணத்தில் அவசர அவசரமாக என்னை வரவேற்று உபசரித்தாள்.

நான் அங்கு என்ன பேசுவதென்று புரியவில்லை. ஏதோ பேசினேன்.

"கோயிலுக்கு வந்தேன்—அப்படியே, இங்கும் வந்தேன்"

நானகச் சொன்னேன். அவள் என்னைக் கேட்கவில்லை.

'உன் பெரிய பெண்ணைக்கூட வழியில் பார்த்தேன்"

இப்பொழுதும் நானகவேதான் சொன்னேன். அவள் சிரித்தபடி தலையை ஆட்டினள்.

"உன் இளையபெண் எங்கே?"

இந்தக் கேள்வியையும் தொடர்ந்து நான்தான் கேட்டேன். இடையில் அவள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நான் எங்கே பேசவிட்டேன் அவளை. நானே குழம்பிய நிலையில் அப்படிப் பேசினேன். அவள் அதற்குப் பிறகுதான் பேசினாள்.

" அம்மா சுகமா? "

" சுகமாகத்தானிருக்கிறேன் "

" தம்பிகூட இப்பதான் வீட்டிற்குப் போச்சு "

" இந்நேரம் இங்குதானிருந்தானா ?"

ஆமாம், தேவகியோடு பேசிக்கொண்டிருந்து......"

" தேவகியைப் பின்னே காணுமே !"

" மாடியிலிருக்கிறாள் "

" மாடியில் தனியாக என்ன செய்கிறாள் ?"

" தனியாக இல்லையே ?"

" கூட யார் ?"

"அவகூட காலேஜிலே படிக்கிற பிள்ளையாண்டான் "

" என்ன செய்யறாங்க ?"

" அடுத்த வாரம் பரீட்சையில்லே — அதுக்காக சேர்ந்து படிக்கிறாங்க "

" தேவகி என்ன படிக்கிறா ?"

" எம். ஏ. படிக்கிறா. "

" படிச்சு முடிச்சு, என்ன செய்யப்போறா ?"

" பள்ளிக்கூடத்தில் வாத்தியார் வேலை பார்க்கப் போறா ?

" அக்கா பாட்டு வாத்தியார், தங்கை, பள்ளிக்கூட வாத்தியார் "

"பின்னே, எங்களைப்போல, ஆண் துணையில்லாத குடும்பத்திற்குத் துணை — படிப்புதான். பெண்கள் இப்போ படித்தால் வாத்தியார், இல்லாவிட்டால் நர்ஸ்"—

"நல்லா படிக்கட்டும்—நான் வரட்டுமா?"

"அதுக்குள்ளாகவா?"

"மணியாச்சே!"

"எண்ணைக்கும் வராதவங்க, இண்ணைக்கு வந்து விட்டு, ஒண்ணும் சாப்பிடாமல் போகப்படாது—காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்"

"ஐயோ, இன்னொரு நாள் ஆகட்டும்—வள்ளி, வள்ளி —இவளைக் காணோமே"

"உள்ளே போயிருக்கிருள்—அவ மகள் இங்குதானே வேலைக்கிருக்கிருள்"

எனக்குத் தலை சுற்றுவது போலாகிவிட்டது. என் ஆயுளில் இந்தமாதிரி சந்தர்ப்பம் வருமென்று நான் கனவு கூடக் கண்டதில்லை. ஆனால் கண்ணன் எனக்குப் பிள்ளையாகப் பிறந்து இந்த நிகழ்ச்சியை சர்வ சாதாரணமாக்கி விட்டான். எனக்கு மருமகளாக வேண்டியவள், எவனோ ஒருவனோடு, மாடியில் தனியாகப் படிக்கிருளாம்—படிக்கிருளோ, பாழாய்ப்போகிருளோ யாருக்குக் கவலை? ஆனால், அவன், என் மகன்—அவன் மனதையல்லவா, அவள் திருடிக்கொண்டாள்.

நான் புறப்பட்டேன்—மாடியிலிருந்து கலகலவென சிரிப்பொலி. என் முகத்தில் அப்பொழுது ஏற்பட்ட விகாரத்தை நல்லவேளை, அவள் பார்க்கவில்லை. அவ்வளவு உணர்ச்சி மாற்றம் என் முகத்தில் ஏற்பட்டது.

"தேவகி, கீழே வாடி, இங்கு யார் வந்திருக்கிரு பார்" என்று அவள் கூறினுள்.

"யாரம்மா?" அவள் மாடியிலிருந்துகொண்டே கேட்டாள்.

"வந்துதான் பாரேன்" என்ருள் தாய் மீண்டும்.

தேவகி கீழே இறங்கி வந்தாள். அவள் பின்னாலேயே, ஒரு வாலிபனும் வந்தான். அவன் வெளியில் போய்விட்டான்.

"வாங்கம்மா, வணக்கம்"

"நல்லா படிம்மா—நல்லா படிச்சு, நல்லபேர் வாங்கிக் கொடுக்கணும் உன் குடும்பத்திற்கு"

"ஆகட்டுமம்மா"

"நேரமாய்விட்டது—இன்னொரு நாள் வருகிறேன். அப்போ உன்னிடம் நிறைய பேசறேன்"

"சரிம்மா"

நான் வெளியில் கிளம்பினேன். அவள் 'மூக்கும் முழியுமாய்' இருக்கிருள்—பார்க்கப் பார்க்கத் திகட்டாத அழகு அவளிடம் குடிகொண்டிருக்கிறது. நானே இப்படிச் சொல்கிறேன் என்ருல் கண்ணன் மயங்கியதில் தப்பில்லை.

வேக வேகமாக நடந்து வந்தேன். என் பெரிய உடலைச் சுமந்துகொண்டு எவ்வளவு வேகமாக நடக்க முடியும்? கொஞ்சம் வேகமாக நடந்தால் மூச்சு வாங்குகிறது. கோயிலுக்கென்று கிளம்பிய நான் இரண்டு குடும்பங்களுக்குத்தான் போய்த் திரும்பினேன். ஆனால் போனதால், என் மனச்சுமை நீங்கவில்லை. இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமும் அதிக சுமையை ஏற்றிக்கொண்டுதான் வீடுவந்து சேர்ந்தேன்.

நல்லவேளை, அவரும் இன்னும் வரவில்லை. கண்ணனையும் காணோம். கதவைத் திறந்து விளக்கை ஏற்றினேன். வள்ளி, சமையலுக்கு வேண்டியவைகளைச் சேகரிக்க ஆரம்பித்தாள்.

எனக்கு யாரோடாவது பேசிக்கொண்டிருந்தால் என் மனபாரம் குறையும் போலிருந்தது. என்னை அப்பொழுது தனியாக விட்டிருந்தால் அழுதுகொண்டுதா

னிருப்பேன். அழுதாவது, துயரத்தில் ஒரு பகுதியைக் கரைத்துக் குறைக்க முயற்சிப்பேன். வள்ளி உடனிருந்த தால் அவளோடு பேச்சு கொடுத்தேன்.

"ஏண்டி, வள்ளி, சிங்கப்பூரிலிருந்து மூனியப்பன் வந்தால்தான் சிங்காரிக்குக் கல்யாணமா?"

"அந்தக் கழுதை அப்படித்தான் நினைச்சுகிட்டிருக்கு-செல்லமாய் வளர்த்தோமே—ஏன் திட்டரதுன்னு பார்க்கிறேன். இல்லாவிட்டால் இன்னேரம் எவனுவது ஒருத்தன் கையில் பிடிச்சுக் கொடுத்துவிட மாட்டேனு?"

"பெரிய பெண்ணை என்ன செய்யப் போறே?"

"என்ன செய்யரது—அவ தலையெழுத்துப்படி நடக்கட்டும்னு விட்டுவிட வேண்டியதுதான்"

"சிங்காரி இஷ்டப்படிதான், மூத்தவள் கல்யாணத்தை முடிக்கிறதுதானே!"

"நீங்க வேறம்மா—அந்தக் குட்டிதான் வகை தொகையில்லாம வாய்க்கு வந்தபடி பேசிகிட்டுத் திரியுது—நீங்களும் அவமாதிரி பேசரீங்க—மொடத்திற்கு முடிச்சி போட்ரது, அவ்வளவு சுலபத்திலேயா இருக்கு"

"எப்படியும், நீதானேடி அதைச் செய்யணும்"

"செய்யமாட்டேன்னு சொல்றேன்?"

"என் கிராமத்திலே, கால்காணி நிலங்கூட இருக்கு-மானம் பார்த்த பூமி—அதையும் எடுத்துகிட்டு, என் பெண்ணையும் எந்தப் பாவியாவது கட்டிக்கிரேன்னு, இப்பவே தர சித்தம்—ஒருத்தனும் கிடைக்கல்லேயே!"

"மூணுவது வீட்டிலே வேலை செய்கிருளே, முத்தம்மா' அவளுடைய பெரிய பையன் ஒருத்தன்—நம்ம வீட்டிலே' ஒரு நாள், கிணற்றிலே முழுகி தவலையெடுத்துக் கொடுத்தானே, அவனை முடிக்கிறதுதானே-அவனுக்குச் சரியாய்ப் பேச்சு வராதாமே—அதைச் சொல்லியே கேளேன்"

"அந்தக் குளறுவாயனுக்குச் சிங்காரியே பிடிக்கல்லியாம்—அவனுக்கு இந்திரலோகத்துச் சந்திரலேகா வேணும்!"

"வள்ளியின் வாயைக் கிளறினாலே இப்படித்தான்—அவள் பேச்சே சிரிப்பை யுண்டாக்கும். எனக்கு ஏதாவது மனதிற்கு வேதனையென்றால், அவளோடுதான் பேசிக் கொண்டிருப்பேன்.

"ஏண்டி, சிங்கப்பூரிலிருந்து உன் அண்ணன் திடீரென்று திரும்பி வந்துவிட்டால் என்ன செய்வாய்?"

"வாடாப்பா, போராண்டி—அப்பன் அக்காளைக் கட்டிக்கோ, மகன் தங்கச்சியைக் கட்டிக்கோன்னு—இரண்டு சனியன்களையும எப்படியோ கையைவிட்டு ஒழித்துவிடுவேன்"

"போடி, வம்புக்காரி! அப்பனையும் மகனையுமே மருமகன்கள் என்கிறாய்"

"பின்னே என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வெளியில் ஏதோ வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. நான் எழுந்து எட்டிப் பார்த்தேன. என் வீட்டின் வாசற்படியில் தான் வண்டி நின்றது. முதலில் யாரோ ஒருவர் இறங்கினார். தெரு விளக்கைப் பொருத்தினேன். அவர் என் அண்ணன் அகிலாண்டம்பிள்ளை. அவருக்கு அடுத்து என் அண்ணியும், அண்ணன் மகள் அஞ்சுகமும இறங்கினார்கள். அண்ணன் குடும்பத்தோடே வந்திருந்தார். "வாங்க, வாங்க" என்று வரவேற்றேன்.

மாமன் :

தங்கை கல்யாணி, தாயில்லாத குழந்தையாகிவிட்டாள். வீட்டிலே பெரியவன் நான்தான். நான் கல்யாணியைத் தூக்கி வளர்த்தேன் எங்கள் தந்தை, எங்களை, மாற்றாந்தாய் கொடுமைப்படுத்துவாளோ என்றஞ்சி, மறுமணம் செய்து கொள்ளாமலேயே இருந்துவிட்டார்.

அப்பாவுக்கு வயதாகிவிட்டதால், அவர் பார்த்து வந்த வட்டிக்கடையை நானே பார்க்கத் தொடங்கினேன்.

கல்யாணியைத் தனியாக விட்டுச் செல்வதென்றால் எனக்குப் பிடிப்பதில்லை. ஆகவே வட்டிக்கடையை வீட்டிற்கே மாற்றிவிட்டேன் வீட்டிலேயே, வட்டிக்குப் பணம் வேண்டுமென்போர், வந்து வாங்கிப் போவார்கள். அப்பாவுக்கும் இந்த ஏற்பாடு திருப்திகரமாக இருந்தது.

அந்த வட்டிக்கடை மூலம்தான் அப்பா மாடி வீடு கட்டியது-எங்களுக்கு ஏராளமான சொத்து சேர்த்ததும்-வட்டிக்குப் பணம் கொடுப்பது தப்பு என்று என் மனம் எனக்குச் சொல்லும். ஆனால் சும்மா பணத்தைக் கொடுப்பதென்றால் எப்படி முடியும்? வட்டிக்குப் பணம் கொடுத்துக் கொழுக்கிறான் என்று பிரசங்கம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் கையில் பணத்தைக் கொடுத்தால் என்ன செய்வார்களோ?

வட்டிக்கடை வரதராசம் பிள்ளை என்றால் அந்த வட்டாரத்திலே யாரும் இருக்க முடியாது. அவர் நெற்றியிலே பட்டை தீட்டி, காலையிலே பெட்டியடியில் உட்கார்ந்தால் எத்தனை பேர்கள் வருவார்கள். வட்டிக்கடைக்கு அவ்வளவு பேர்கள் வருகிறார்கள் என்றால் எல்லாம் கடன்காரர்கள் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள் எங்கள் அப்பா, தருமம் செய்வதில் பெயர் பெற்றவர் தட்டுத்தூக்கி தம்பிரான்கள் எல்லாம் அங்கு வராமல்

போகமாட்டார்கள். மேலும், ஊர்ப் பெரிய மனிதர். அந்தப் பக்கத்தில் அவரில்லாமல் எந்தப் பஞ்சாயத்தும் நடக்காது.

* * *

அப்பா விலாசத்தில் என் கடையும் நடந்தது. அப்பாவுக்கு வயதாக, என்னைப்பற்றிய கவலைகூட இல்லை. என் தங்கையைப் பற்றிய கவலைதான் அதிகம்.

"தம்பி, அகிலாண்டம்" என்றார் ஒருநாள். "ஏன்?" என்று ஓடோடி கேட்டேன். "தங்கச்சிக்கு கல்யாணத்தை செய்துபுடு—என் கண்ணாலே பார்த்துவிட்டு சாகிறேன்" என்றார். எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. "கல்யாணத்தோடே, சாவை சேர்த்துவைக்காதீங்க—அதைக் கொஞ்சம் தள்ளிப்போடுங்க. கல்யாணிக்குக் கல்யாணம் பண்ணி, அவளுக்கொரு குழந்தை பிறந்து, அந்தப் பயல் படித்து முடித்து, அவன் ஒருத்தியைக் கல்யாணம் பண்ணி, அந்தப் பெண் வயிற்றிலே கல்யாணி மாதிரி ஒரு குழந்தை பிறந்து அதை மடியிலே வைத்துப் பார்த்துப்புட்டு சாகுங்க" என்றேன். "போடா, கற்ற வித்தையை பெற்ற தகப்பனிடமே காட்டுறான்" என்றார்.

அப்பாவுக்குள்ள கவலை எனக்கில்லையா? நல்ல மைத்துனன் வேண்டும். அதற்காகக் காத்திருந்தேன். கல்யாணி, கிராமத்திலே வளர்ந்து வருபவளானாலும், பட்டினத்து படித்த பெண்களையும், எடுத்து ஏப்பம் விட்டு விடுவாள் பேச்சில்.

"அம்மாதான் இல்லை—அண்ணியாவது வேணுமே" என்றாள் ஒருநாள், என்னிடம். அவள் என்ன சொல்கிறாள் என்று எனக்கா தெரியாது!

"எந்தக் கடையில் விற்கிறது—வாங்கித் தருகிறேன்" என்றேன் நான்.

"எப்போ அண்ணா" என்றாள் கல்யாணி குதூகலத்தோடு.

"உனக்குக் கல்யாணம் ஆகி உன் வயிற்றில் ஒரு ஆண் குழந்தை பிறந்து, அவன் விளையாடுகிறபொழுது

அவன் கையில் தருகிறேன்''

"என்ன ?"

"உன் அண்ணி பொம்மை !"

"போண்ணு, நீ ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கரே"

"உன் கல்யாணத்திற்கப்புறம்"

"ஏனும் ?"

"உன் பையனுக்கு என் பெண்ணைக் கட்டணுமே"

"அப்படின்ன ?"

"நான் இப்போ கல்யாணம் பண்ணின, என் மகள் மூத்தவளாகி விடமாட்டாளா ?"

"இதென்ன பைத்தியக்காரக் கதை"

"பாரேன், நடக்கப் போவதை"

இந்த மாதிரி கல்யாணியுடன் எத்தனையோ தடவை பேசியிருக்கிறேன். இம்மாதிரி நான் அதிகம் பேசினால், என் வாயை அடக்கிவிடுவாள். வேறு ஏதாவது பேச்சில் திருப்பிவிட்டு விடுவாள்.

*   *   *

சரவணனை, என் வட்டிக்கடைக்குக் குமாஸ்தாவாகத் தான் முதலில் அழைத்து வந்தேன். வந்த மூன்றுவது மாதத்திலேயே வீட்டு மருமகப்பிள்ளையாகி விட்டான். என்ன மயக்கப்பொடி போட்டானே, கல்யாணி, பிடிவாத மாக இவனையேதான் கல்யாணம் செய்து கொள்வே னென்று ஒற்றைக்காலில் நின்று முடித்துக்கொண் டாள்.

பிறகு அவளை சீரும் சிறப்புமுடன் அனுப்பிவைத் தேன். சரவணன் இப்பொழுது பெரிய மளிகை மண்டி முதலாளி. ஒரு பையனுக்கும் தந்தையாகிவிட்டான்.

கல்யாணியின் திருமணம் முடிந்து, ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் கண்ணம்மாவின் கழுத்தில் நான் தாலி கட்டினேன். அவள் வந்த பிறகு, என் வீட்டில் செல்வம் செழித்தது.

தன் குழந்தை அளாவிய கூழ், பெற்றோருக்கு அமிழ்தத்தைவிட இனிமை தரக்கூடியது என்று வள்ளுவர் மொழிந்தார். ஆனால் பிஞ்சுக் கரங்கள் பட்ட உணவு உண்ணும் பாக்கியம் எங்களுக்கு வெகுநாள்வரை கிட்டவேயில்லை. தம் மக்களின் மெய்பட்டால் பெற்றவருக்கு உடற்சுகமும், மொழிகேட்டால் செவியின்பமும் ஏற்படுமாம். எப்பொழுது அந்த நிலை எங்களுக்கு வரும் என்று ஏங்கிக் கிடந்தோம். கடைசியில் அஞ்சுகம் வந்தாள். எங்கள் ஏக்கத்தைப் போக்கினாள்.

அஞ்சுகம் பிறந்த அன்றைக்கே, அவள் கணவன் இந்தக் கண்ணன் என்று தீர்மானித்துவிட்டேன். கல்யாணியும் அதையேதான் சொன்னாள்.

* * *

ஆனால், இன்று பூத்துக் கூத்தாடும் புது ரோஜா மாதிரியிருக்கும் என் மகளைக் கட்டிக்கொள்ள இவன் தயங்குகிறானாம். ஏன்? அதைத் தெரிந்துகொண்டு போய் விடுவதென்றுதான் புறப்பட்டு வந்தேன். இந்தப் பையனின் போக்கு எப்படியிருக்கிறது என்று நேரில் கண்டுபிடித்துவிடவேண்டும் என்ற ஆவலால்தான், குடும்பத்தோடேயே கிளம்பினேன.

எங்களைக் கண்டதும் கல்யாணிக்கு மிகவும் ஆனந்தம். பெண்களுக்கே, தங்கள் உறவினர்கள் வந்தால் ஒரு மாதிரி கணவன் வீட்டு விருந்தினர்களாக இருந்தால் ஒரு மாதிரி நடந்துகொள்வதிலே ஒரு தனியான பிரியம்— அதைக் கணவன் இடித்துக் காட்டினால் மனத்திற்குள்ளாகவே சிரித்துக்கொள்வார்கள்.

அன்று இரவு தடபுடலாக சமையல் செய்துவிட்டாள். சரவணன்கூட வந்துவிட்டான். கண்ணனைக் காணோம்.

எனக்கு சாப்பாட்டைப் பற்றியா கவலை? கண்ணனைப் பற்றித்தான் கவனம்—சரவணன் உபசார விசாரிப்புகளுக்கு, தெளிவில்லாமல் பதில் சொல்லிக்கொண்டே வந்தேன்.

“கண்ணன் இவ்வளவு நேரம்வரை ஏன் வரவில்லை?”

“சினிமா, நாடகம் ஏதாவது பார்க்கப் போயிருப்பான்”

“அப்படிப் போயிருந்தால்கூட வந்துவிடலாமே, இந்நேரம்”

“வந்துவிடுவான்—வராமல் எங்கே போய்விடுவான்?”

சரவணனும், என் கேள்விகளுக்கு, ஒப்புக்குப் பதில் சொல்லிக்கொண்டு வந்தானே தவிர, அவன் முகத்தில் ஜீவன் இல்லை. பிரேதம் பேசினால் எப்படியிருக்கும்? அப்படித்தானிருந்தது.

கல்யாணி எங்களைச் சாப்பிடும்படி அழைத்தாள். நான் முதலில் மறுத்தேன். கண்ணன் வந்த பிறகு சாப்பிடலாம் என்று கூறினேன். சரவணன் வற்புறுத்தலுக்குக் கட்டுப்பட்டு சாப்பிடச் சென்றேன். எனக்கும், சரவணனுக்கும் பரிமாறியிருந்தது.

சாப்பிட்டுக்கொண்டேயிருக்கையில், அடுப்பங்கரையில் அஞ்சுகம், அவள் அத்தையுடன் வம்புப்பேச்சுப் பேசிக்கொண்டிருந்தது என் காதுகளில் நன்ருக விழுந்தது.

“அத்தை, உங்க பிள்ளையைக் கண்டிக்கிறதில்லையோ”

“நான் கண்டித்தால் அவன் அடங்கமாட்டேனென்கிருன். நீதான் வந்துட்டியே—கொஞ்சம் கண்டித்து வையம்மா”

“நான் கண்டிக்காம பின்னே வேறு யார் கண்டிக்கப் போரு”

"கட்டிக்கிறதற்கு முந்தியே, கண்டிக்க கிளம்பிட்டா"

"தாலி கழுத்தில் ஏறவேண்டியதுதான்—கையில் கம்புடன் கணவனை மேய்க்க ஆரம்பிச்சுடுவா"

"போம்மா, நீ வேறு சேர்ந்துகிட்டயா?"

"மணி பத்தாச்சே, ஏண்டி அவன் வரல்லே"

"அத்தான் வரட்டுமே, நானே கேக்கிறேன்"

"கேளடியம்மா, கேளு"

இந்த அடுப்பங்கரை உரையாடல் என் காதுகளில் இன்பத்தைப் பெய்தது. அஞ்சுகத்திற்கு, அவள் அத்தான் மீது எவ்வளவு ஆசை—அவன்தான் தன்னை மணந்து கொள்ளப் போகிறான் என்பதிலே எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள். அந்த நம்பிக்கையை, எந்தக் காரணத்தாலோ, சிதைத்துவிட்டால் அந்த பிஞ்சு மனம் வெம்பிப் போகாதா? பெண் உள்ளம் அனிச்ச மலராயிற்றே—பட்டால் கெட்டுவிடுமே! அதில் இத்தகைய எதிர்பாராத ஏமாற்றம் ஏற்பட்டால் என்னாகும்? என்னால் நினைக்கவே முடியவில்லை!

அத்தான்,—அந்த வார்த்தையிலேயே, தன் பிரேமை முழுவதும் கொட்டிக் காட்டுகிறாள். தன் உள்ளத்தில் பதுங்கியிருக்கும் ஆர்வம் முழுவதையும், மடையுடைத்துக் கொண்டு வெள்ளம் புறப்படுவதுபோல, அந்தச் சொல் உச்சரிப்பிலேயே வெளியிடுகிறாள்! இதைக் கேட்கக் கொடுத்துவைக்க வேண்டுமே! இந்தத் தங்கம் அவனுக்குப் பித்தளையாகப் படுகிறதாம்! வேண்டாம்—தயக்கமாம், தவக்கமாம்! வரட்டும் அவன் இரண்டிலொன்று பார்த்துவிடுகிறேன்.

அஞ்சுகம், குழந்தையிலிருந்து கனவு கண்டுகொண்டிருக்கிறாள். அந்தக் கனவை இப்பொழுது கலைத்தால், அவள் நினைவே கெட்டுவிடும். மனம் வெடித்துவிடும்—இதய ஓட்டம்கூட நின்றுவிடும். அவள் அவ்வளவு ஆசைக் கோட்டைகளைக் கட்டி அழகு பார்த்துவருகிறாள்.

அதில் அவளும், அவளது ஆசை அத்தானும் கூடி மகிழப் போவதை எண்ணி எண்ணி உள்ளம் பூரித்துக் கிடக்கிருள்.

சாப்பாட்டை முடித்துவிட்டு, திண்ணையில் உட்கார்ந் தேன். சரவணனும் நானும் பேசிக்கொண்டேயிருந் தோம். கல்யாணி இடையிடையே கலந்துகொண்டாள்.

"நான் இப்பொழுது ஏன் வந்தேன்—தெரியுமோ?"

"திருவிழா தொடங்குகிறது"

"திருவிழா பார்க்க வரவில்லை—மணவிழாவை முடித் துக்கொண்டு போகத்தான்"

"எப்படியும் அஞ்சுகத்தின் திருமணத்தை அடுத்த ஆவணிக்குள் முடித்துவிட வேண்டும்"

"அது உன் கையில்தானே இருக்கிறது"

"என் கையிலா?'

"பின், அந்தக் கண்ணன் இன்னமும் எதுவும் சொல்ல மாட்டேனென்கிருன் என்று நீதானே கூறிஞய்"

"அவன் கதையை நினைத்துக்கொண்டால் கண்ணீர் தான் வருகிறது"

"என்ன சரவணு, என்ன அவனுக்கு"

"அது தெரிந்தாலாவது தெம்பாக இருக்கலாம்"

"அண்ணு, கண்ணன் இப்படியெல்லாம் செய்வானு யாரும் எண்ணியதில்லை—அவன் இப்படிக் கெட்டுட் டான்னு ஊரே சொல்லுது"

"என்ன கல்யாணி, புரிகிறமாதிரி சொல்லு"

"கண்ணனைப் பற்றி ஊரிலே பேசுர பேச்சைக் கேட் டால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருக்கு"

"ஊரிலே யார் அப்படி, என்ன பேசுராங்க"

"ஊரிலே இருக்கிற பெருத்தவாயர்கள்தான்—கண்ணன் எங்கேயோ போருனும்—என்னென்னமோ செய்யரானும்"

"எங்கே போகிருனும்?"

"இந்த ஊரிலே மங்கம்மாள் தெரியுமோ?"

"எந்த மங்கம்மாள்"

"மதுரை மகாராணி மங்கம்மாவா—இல்லை அவதான் இந்த ஊருக்கே உள்ள ஒரே ஒரு மாதவி"

"அவள் வீட்டிற்கே இவன் போகிருன? அங்கு போய்........"

"அவளுக்கு இரண்டு பெண்கள்—அவர்களில் இளையவள் இவனேடு படித்தவள், சிறு வயதில்"

"படித்ததாலே, இப்பொழுது பட்டத்தரசியாக்க வேண்டுமென்கிருனே?"

என்னுல் ஆத்திரத்தை அடக்கமுடியவில்லை. கண்ணன் மீது நான் வைத்திருந்த அன்பு, ஆசை, நம்பிக்கையெல்லாம் கணநேரத்தில் பொடிப் பொடியாகிவிட்டன. கண்ணன் ஊருக்கு வந்துவிட்டால் எவ்வளவு ஆடம்பரமான வரவேற்பு செய்வேன். வயதில் சிறியவனுனுலும், அறிவில் அவன் பெரியவன் என்று எவ்வளவு பூரிப்போடு சொல்வேன். ஆளைப் பார்த்தால் அப்படியிருக்கிருன் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம்—அவன் அரசாளக்கூடியவன் என்று புகழ்ந்திருக்கிறேன். கண்ணம்மா, தன் வீட்டு மருமகன் வந்துவிட்டான் என்றுதான் விருந்து படைப்பாள். விதவிதமாக உபசரிப்பாள். அஞ்சுகத்தின் நெஞ்சு படபடக்கும். அத்தான் வந்துவிட்டால், அப்படி இப்படி நகரமாட்டாள். அத்தான் அத்தான் என்று அவனைச் சுற்றியபடியே வட்டமிடுவாள்.

நான் அப்பொழுதெல்லாம் நினைப்பதுண்டு—குடும்பம் என்ற வானத்திலே, கணவன்—மனைவி என்ற சிறகுகளைக் கட்டிக்கொண்டு, இந்த இரண்டு வெண்புருக்

களும் பறந்து செல்லும். புருக்களுக்குச் சொந்தக்காரர் களாகிய நானும், என் தங்கையும் மற்றவர்களும், 'அதோ மேகமண்டலத்தையும் தாண்டுகிறது எங்கள் வெண் புருக்கள்' என்று பேசிக்கிடப்போம், பெருமிதமடை வோம் என்று! ஆனால் அவன் சிறகை ஒடிக்கிறேன் என்கிறான். நான் எப்படி விடமுடியும்? என் அஞ்சுகம் என்னாவது? ஐயோ, இந்தப் படுபாவி, உண்மை யிலேயே, பிடிவாதம் பிடித்துத் திருமணத்தை நிறுத்தி விட்டால், என் மகள் அஞ்சுகம் நெஞ்சொடிந்து சாவாள்-- இது நிச்சயம்!

* * *

இந்த இக்கட்டான நிலையில் அவனிடத்தில் அஞ்சு கத்தின் நிலையைச் சொல்லித்தானாகவேண்டும். யார் சொல்வது? என்ன தானிருந்தாலும், நான் எப்படி அவனிடம் என் மகளைப்பற்றிச் சொல்ல முடியும்? என் மனைவி கண்ணம்மாவா சொல்வாள்? முடியாது. அஞ்சு கம் அத்தானிடம் ஆடுவாள், ஓடுவாள்—குறும்புப் பேச்சு பேசுவாள். குதர்க்கம் செய்வாள். வம்புக்கிழுப்பாள். வாயடி கையடியடிப்பாள். ஆனால் தன்னைத் திருமணம் செய்துகொள் என்று எப்படிக்கேட்பாள்? பருவப் பெண் அவள்—வெட்கம் அவளின் நாக்கை கைதியாக்கிவிடுமே! அவள் தான், தன் அத்தான் தன்னை மணந்துகொள்ள பறந்துகொண்டிருக்கிறான், நாங்கள் தான் நாள், நட்சத் திரம், சாஸ்திரம் சம்பிரதாயம் என்று நாளைக் கடத்து கிறோம் என்றல்லவா எண்ணிக்கொண்டிருக்கிறாள்? அவளிடம், அத்தான், இப்படி அக்கிரமமாக நடக்கிறான் என்றால் நம்பமாட்டாள். நம்பிவிட்டாலோ, அவள் வாழ்வு வெறும் அழுகையாகவே முடிந்துவிடும். கலகலவென வெங்கலச் சிரிப்போடு தொடங்கியிருக்கும் அவள் வாழ்வு கண்ணீரோடு கலந்து அழுகையோடு கடைசி கட்டத்தை யடைந்துவிடும்!

இதற்கொரு வழி காணவேண்டுமென்று நான் எண்ணிக்கொண்டிருக்கையில் கண்ணன் வந்து சேர்ந்து விட்டான். இரவு நெடுநேரத்திற்குப் பிறகு வந்தான்.

"மாமாவா? வாங்க—எப்போ வந்தீங்க"

"எட்டு மணி வண்டிக்கு!"

"அத்தை சுகமா?"

"ஆகா"

"அஞ்சுகம்......"

"அவளே வந்திருக்கிருள்!"

கண்ணன் உள்ளே சென்றதுதான் தாமதம்—தூங்கிக்கொண்டிருந்தாள் அஞ்சுகம் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன்-அவள் பேசுங்குரல் கேட்டது. அவன் வரவிற்காக அவள் அவ்வளவு நேரம் விழித்துக்கொண்டிருக்கிருள் என்பது தெரிந்தது. கொள்ளை ஆசை வைத்திருக்கும் இவளைத் தள்ளிவிட்டுத்தான், ஏதோ ஒரு 'கொம்பேரி மூக்கனை'த் தேடுகிருனாம்! அவனைத் திருத்தவேண்டும்.

சித்திரச்சாலைக்குள்ளே செல்கிறோம். அங்கு எல்லாச் சித்திரங்களும் ஒரே மாதிரி அழகுடன் இருந்துவிட்டால் எனக்குப் பிடிக்காது. இரண்டு படங்களாவது குறையுள்ளது இருந்தால், அதை இப்படித் திருத்திஞல் நன்ருக இருக்கும், அப்படிப் போட்டிருந்தால் அழகாக இருக்கும என்று நாம் சொல்லலாம். சித்திரக்காரர்களும், மேலும் அப்படங்களைத் திருத்தி எழுதி அழகு சேர்க்கலாம். அதைப்போலத்தான், குடும்பமும் சித்திரச்சாலை, யென்கிறேன். குறையுள்ள படங்களைத் திருத்தி எழுதுவதைப்போல, தவறு செய்பவர்களைக் குடும்பத்தில் திருத்தலாம். அதனல் திருந்துபவர்களுக்கு நன்மையும், திருத்துபவர்களுக்குக் குடும்பத்தில் அனுபவமும் ஏற்பட வழியுண்டு.

கண்ணன் இன்று குறையுள்ள படமாக இருக்கிருன். அவனைத் திருத்தவேண்டும். ஆனல், சில சித்திரக்காரர்கள், குறையுள்ள படங்களைக்கூட அவைதான் கலைப் பொக்கிஷம், அப்படித்தான் எழுதப்படவேண்டும் என்று சாதிப்பார்களே, அதுபோல் நடந்துவிட்டால் என்ன செய்வது?

கண்ணனை, நான் என் மகளைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கவேண்டும். அவன் மறுத்தால் புத்தி சொல்லவேண்டும். அவனிடம் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லித் திருத்தவேண்டும். திருந்துகிறவரை விடாது கண்டிக்கவேண்டும், கண்டிப்பிலும் சரியாக வில்லையென்றால், தண்டிக்கவேண்டும்—எல்லாம் சரி, இவைகளை பெண்ணின் தந்தையே எப்படிச் செய்யமுடியும்? தமிழ்நாட்டவர் பரம்பரைச் சரித்திரத்திலேயேகிடையாது. பெண் வேண்டி மடலேறு படலங்கள் நடத்தியதாகத்தான் இலக்கியங்கள் சாற்றுகின்றனவே தவிர, மணமகன் வேண்டுமென்று பெண் தீயை வளர்த்தாள் என்று கூறவில்லையே. பலாவில் ஈயைக் கொண்டு விடுவார்களா? மலரிடம், வண்டு வரவேண்டும், வரவேண்டும் என்று, மலரைப்பெற்ற செடிவேண்டுமா, என்ன! அப்படியென்ன அஞ்சுகம் அழுகிக் கிடக்கிறாளா—இன்றைக்கும் எத்தனையோ பேர் காத்துக்கிடக்கிறார்கள்—கேட்க வந்தவர்களுக்கெல்லாம் தட்டிக் கழித்துத் தள்ளி வருகிறேன்.

இப்படி எண்ணிக்கொண்டிருந்தேன்—அந்த எண்ணங்களை அணைத்துக்கொண்டே தூங்கிவிட்டேன்.

* * *

பொழுது விடிந்ததும், விடியாததுமாக வெளியில் புறப்பட்டேன். எப்படியும் கண்ணனின் நடவடிக்கைகளைக் கவனித்து, அவனைத் திருத்திவிடவேண்டும் என்ற பிடிவாத எண்ணத்துடன் நான் என் முயற்சியைத் தொடங்கினேன்.

கண்ணன் செல்வதாகச் சொல்லப்படும், அந்த 'மாதவி' வீட்டு 'மணிமேகலை'யைப் பார்த்துவிடுவது என்று முதலில் எண்ணினேன். அவளைச் சந்தித்து கண்ணனின் நிலை பற்றிச் சொல்வதால் பலன் ஏற்படக் கூடும் என்று நம்பினேன்.

அந்த நம்பிக்கை என்னை உந்தித் தள்ள, என்னையறியாமல், என் கால்கள், அந்த வீடிருக்கும் வீதிநோக்கி நடந்தன.

விலாசம் தெளிவாகத் தெரியாததால், வழியில் வந்த ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். அவர் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு, ஒரு கனைப்பு கனைத்துவிட்டு, 'எனக்குத் தெரியாது' என்று வெறுப்போடு கூறிவிட்டுச் சென்றார்.

அந்த வீட்டு விலாசத்தைச் சொல்லக்கூட வெறுக்கிறார் அந்த மனிதர் என்பதுமட்டும் எனக்குத் தெரிந்தது. ஆனால் பெண்ணைப் பெற்ற கொடுமைக்காக நான் அங்கேயே போகத் துணிந்தேன். அந்த வீட்டை எப்படியோ கண்டுபிடித்து, அதன் வாசலோரம் சென்றேன். அப்பொழுதுதான், தூங்கியெழுந்த ஒரு வாலிபன் அந்த வீட்டைவிட்டு அவசர அவசரமாக வெளியேறுவதைப் பார்த்தேன். திகைத்தேன்,

அவன் யாரென்று தெரிந்து கொள்ளலாம் என்று நெருங்கினேன், என் நெஞ்சு படபடத்தது.

அவன் வேறுயாருமில்லை. கண்ணனோடு, இணைபிரியாதிருக்கும் பாலன். அவனுக்கு அங்கென்ன வேலை? அதுவும்; இவ்வளவு காலையில் அந்த வீட்டிலிருந்து வேகவேகமாக வெளியேறவேண்டிய அவசியம் என்ன? அவனது நலிந்த உடைகளும், கலைந்த தலைமயிரும் அவன் இரவு அங்கு தங்கியிருந்திருக்கிறான் என்று காட்டிக் கொடுக்கின்றனவே!

என் மனதின் ஒரு மூலையில் பாலன் நினைவு இருந்தது. நண்பன் சொன்னாலாவது, கண்ணன் கேட்கக் கூடும். பாலன் அதற்கு ஏற்றவன். ஆகவே அவனை விட்டுச் சொல்லச் சொல்லலாம் என்றிருந்தேன். அவனோ இதோ போகிறான்! சாக்கடையைத் தூர்க்க, மலத்தை போடுவதா? ஐயோ, இந்தக்கால வாலிபர்கள் இப்படி யாவானேன்!

கண்ணனைத் திருத்த பாலனை நம்பினேன். பாலனோ, பகிரங்கமாகவே படுக்கை விரிக்கிறான்—கண்ணனோ, பாலனைவிட மேல். அவனாவது, பயந்து பயந்து நடக்கிறான். இவனோ பயமேயின்றி, விடிந்தபிறகு வீரன்போல் வெளியேறுகிறான். இவனைப் போய் நான் குணக்குன்று

என்று எண்ணினேன்—இவனைக் கூப்பிடுவது எப்படி முடியும்? மயிலுக்கு நாட்டியம் கற்றுத்தர மந்தியை அழைத்தது போலத்தானே யாகும்.

நான் ஏன் அவசர முடிவுகளுக்கு வரவேண்டும்? என் மனதில் அலைமோதும் ஆத்திரந்தான் என்னை இப்படி ஆட்டிப் படைக்கிறதோ! அவனை எனக்குத் தெரியாதா, என்ன! அவனைக் கேட்பது—அவன் என்ன பதில் சொல்கிறான் என்று பார்ப்பது—அதற்குள் என்ன அவசரம் பாருங்கள்!

அவன் சென்ற பக்கமே நானும் போனேன். கொஞ்ச தூரத்தில் அவனைக் கைதட்டி நிறுத்தினேன். அவன் திரும்பிப் பார்த்தான்—திகைப்போடு நின்றான். நான் அருகில் சென்றேன்.

"ஓ, கண்ணனின் மாமாவா?

"ஆமாம்பா'

"ஊருக்கு எப்போ வந்தீங்க?"

"இரவு"

"கண்ணன் சொல்லவில்லையே"

"அவன் எப்படிச் சொல்லமுடியும்-நான் திடீரென்று புறப்பட்டு வந்தேன்"

"காலையில் எங்கே?......"

"உன்னைப் பார்க்கத்தான்!"

"என்னையா? ஏன்?"

"உன் நண்பனைப்பற்றிப் பேசத்தான்"

"கண்ணனைப்பற்றியா?"

"ஆமாம்"

"என்ன பேசவேண்டும்?"

"பெண்ணைப் பெற்ற மாமன் என்ன பேசுவான்?"

" ஐயோ !"

" ஏன் அப்படிப் பதறுகிருய் "

" தங்கள் பெண்ணை, கண்ணனுக்கு கொடுப்பதாக இருக்கிறீர்களா ?"

" என் மகள் அஞ்சுகம் பிறந்த அன்றே அந்த முடிவு செய்துவிட்டதே !"

" சிக்கல் வளருகிறது "

" சிக்கல் ஏது இதில், சீக்கிரம் காரியம் ஆகவேண்டும் "

" கண்ணன் என்ன சொல்கிருன் ?"

" அதைத் தெரிந்துகொள்ளத்தான் உன்னைத் தேடிப் போகிறேன் "

" ஐயோ !"

" இந்த உதவி நீதான் செய்யவேண்டும் "

" மன்னிக்க வேண்டும் "

" எதற்காக "

" என்னல், இந்தக் காரியத்தைச் செய்ய முடியாமைக்கு !"

" தம்பி, நீயா இப்படிச் சொல்கிருய் ?"

" நானல்ல—நிலைமை அப்படிப் பேசச் சொல்கிறது "

" அந்தப் பாழாய்ப்போன நிலைமைதான் என்ன ?—அதையாவது சொல்லேன் "

" நான் எதையும் இப்பொழுது சொல்வதற்கில்லை—மாலையில் சந்திக்கிறேன் "

பாலன், என் பதிலை எதிர்பார்க்காமலே நடந்துவிட்டான். நானும், இதற்குமேல் அவனைத் தொடர்வதாக

இல்லை. அவனைப் போகவிட்டுவிட்டு, திரும்பினேன். திரும்பி, அதே வீடிருக்கும் வழியாக வந்தேன்.

* * *

மங்கம்மா வீடு என்று எனக்குக்காட்டப்பட்ட வீட்டின் வெளிவாயிலில் ஒரு வயதான பெண் நின்றுகொண்டிருந்தாள். அவளை உற்றுப் பார்த்தேன், எனக்கு மயக்கம் வரும்போலாகிவிட்டது. நான் நடுவீதியிலேயே கற்சிலையாக நின்றுவிட்டேன். ஐயோ. இவள் எப்படி இங்கு வந்தாள்? இவள்தான் மங்கம்மாள் என்ற பெயரில் இங்கு வாழ்பவளோ?

என் நினைவுத்திரையில், புழுதி படிந்த ஒரு பெண் உருவம் இப்பொழுது தெளிவாகத் தெரிந்தது.

அந்த உருவம் உரத்த குரலில் சிரித்தது. என் இதயத்தில், ஆயிரக்கணக்கான சிப்பாய்கள், துப்பாக்கி பிடித்து சுடுவதுபோல இருந்தது.

அந்தக் கலந்த பெண் உருவத்தின் பக்கத்தில் இரண்டு குழந்தைகள் வீறிட்டழுதன. அந்தக் குரல் என் செவிகளைக் குடைந்துகொண்டே போய்விட்டது. உலகமே திடீரென அமைதியாகிவிட்டது போல் தெரிந்தது.

நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை—நிற்கிறேனா, பறக்கிறேனா—எனக்குப் புரியவில்லை.

வாய் திறக்கமுடியவில்லை. கண்கள் திறந்திருந்தும் எதுவும் தெரியவில்லை!

சிறிது நேரத்திற்கு, என் நினைவு தெரிந்து பார்த்தபொழுது, ஒரு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தேன். என் அருகில் ஒரு நாற்காலியில் அவள் உட்கார்ந்திருந்தாள்.

நான் கண்களை விழித்ததும், அவள், உடனே, "சிங்காரி, காபி கொண்டுவா" என்றாள். ஒரு பெண் காபி கொண்டு வந்தாள். என்னை அருந்தும்படி கேட்டுக் கொண்டாள்.

"நான் இவ்வளவு அருகில் இருந்தும், இத்தனை வருடங்கள் உங்கள் கண்களில் படவில்லை யல்லவா? அன்றைக்கு, நீங்கள் கேட்டுக்கொண்டீர்களே, அதன்படி நான் நடந்துகொண்டேன்"

"எனக்கு கனவா, நினைவா—என்பதே புரியவில்லை

"நினைவுதான்—அதுவும் நினைத்தே பார்த்திராத திடீர் சம்பவம் இது"

"நீதானே மங்கம்மாள்"

"உங்களின் மனேகரிதான், இப்பொழுது மங்கம்மாள்"

"மனேகரி—ஐயோ, என் தலை சுற்றுகிறது!"

பிறகு நான் மயக்கமடைந்துவிட்டேன்—மயக்கம் தெளிந்தபிறகு, அவளை மன்ருடிக் கேட்டுக்கொண்டேன். மறைந்த சம்பவம் மறைந்ததாகவே இருக்கட்டுமென்று. அவள் 'ஆகட்டும்' என்ருள். அவளிடம் விடைபெற்று வெளியேறினேன்.

நான் இப்பொழுது நடைப்பிணம். என் ஜீவன் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது! நான் கண்ணனைக் கண்டித்தேன். பாலனைக் கண்டு பதறினேன். ஆனல் அவர்களுக்கு இப்பொழுதுள்ள வயதில், என்வாழ்வில் பட்ட கறையை அப்படியே மறைத்தேவிட்டேன்.

அப்படிச் சில விஷயங்கள் புதைக்கப்படாவிட்டால் எவ்வளவு விபரீதங்கள் விளைகின்றன! கண்ணம்மாவுடன், என் வாழ்வு, இவ்வளவு சுமுகமாக நடந்திருக்க முடியுமா? கணத்திற்குக் கணம் என்னை சித்திரவதை செய்திருக்க மாட்டாளா? நான் வாழ்ந்தாயிருப்பேன், தினந்தினம் செத்துக்கொண்டே வந்திருப்பேன்.

நான் மறைத்த செய்தி, மீண்டும் ஒரு முறை வெளியாகும் என்று எதிர்பார்க்கவே இல்லை. ஆனல், அது நடந்துவிட்டது. இனி என் மனம் குழம்பிக்கொண்டுதானிருக்கும்; தெளிவிருக்காது.

குடும்பம் தாமரை பூத்த குளம் என்ருலும், அதில் தண்ணீர்ப் பாம்புகளும் இருக்கின்றன. தாமரையைப் பார்த்தபொழுது மகிழ்ச்சியும், பாம்பைப் பார்க்கிற பொழுது, பயமும் வருவதைப்போலத்தான், இனி கண்ணம்மா எனக்கு தாமரை—மனோகரி—இன்றைய மங்கம்மாள் தண்ணீர்ப் பாம்பு அவள் தண்ணீர்ப் பாம்பு தான்—கடித்தால் விஷமிருக்காது. உண்மையில் நல்ல பாம்பாக அவள் இருந்திருந்தால், என்னை எத்தனையோ வருடங்களுக்கு முன்னலேயே கடித்துச் சாகடித்திருக்க முடியும்!

மனோகரி! என் வாழ்வின் மன்மத ஒளியாக இருந் திருக்கிருள். அதுவும், ஆண் பெண் கூட்டு வாழ்க்கையே, ஒரு இருட்டறையாக எனக்குத் தெரிந்தபொழுது, அப்படி யல்ல அது, அது முத்தும் பவளமும், நவரத்தினங்களும், பட்டும் பீதாம்பரமும் கொட்டிக் கிடக்கும் ஒரு சுரங்கம் என்று தனது விழியொளியால், எனக்குக் காட்டினுள்.

அந்த இன்ப நாட்கள், இன்றைக்கு எனக்கு நினை வில் வருவதற்கே நடுக்கந் தரும் நாட்களாக உள்ளன. இருந்தாலும், அவைகளை நினைவிற்குக் கொண்டுவ்ராமல் இப்பொழுது இருக்கமுடியவில்லை. மனோகரியை மீண்டும் பார்த்துவிட்டேனே!

பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை நான்—அகிலாண்டம், அடக்கமாக நட என்று போதனை புரிபவர்களுக்கெல்லாம் உதாரணம்—பெரியவர் வாக்கைத் தட்டி நடக்காத தம்பி, தங்கக் கம்பி, பிள்ளையென்ருல் அப்படியல்லவா இருக்க வேண்டும்—இப்படி ஊராரின் பாராட்டுமொழிகள் வேறு எனக்கு! நல்ல பையன் என்று எல்லோரும் புகழ்கிற நேரத்திலே, என் மனம் மட்டும் சுட்டெரிக்கும். என்னைப் பற்றி என் தந்தையே, வருவார், போவாரிடம் புகழ்ந்து பேசுகிற பொழுதெல்லாம், என் மனம் திக் திக் கென்றடித் துக்கொள்ளும். ஐயோ, கள்ளனைக் கனவான் என்று நினைத்துக்கொண்டிருக்கிருர்களே, என்ருவது ஒருநாள் கள்ளத்தனம் வெளிப்பட்டால், என்னகும் என்று எண்ணுவேன், என்னல் அந்தக் கற்பனையைக் கூடத் தாங்கிக்கொள்ள முடியாது!

அப்பாவின் மனங்கோணும்படி நான் நடந்துகொள்ள விரும்பவில்லை. அதே நேரத்தில் தங்கையின் திருமணத்தையும் முடித்த பிறகே, மணந்துகொள்ளவேண்டும் என்ற உறுதியிலும் நான் தளரவில்லை.

ஆகவேதான் வட்டிக்கடையே வாழ்க்கை என்ற முறையில் இருந்துவந்தேன்.

அந்த வட்டிக்கடைதான் என்னை வாழ்க்கையில் வழுக்கி விழச் செய்தது.

இருட்டறையில் விழுந்தேன். காதல் தீபத்துடன் அங்கு மனோகரி வந்தாள்.

மனோகரி, அப்பொழுதும் தனித்தே இருந்தாள். அவள் விதவை. வறுமையினால், வாடிக்கிடந்த அவளது பெற்றோர்களைக் கட்டாயப்படுத்திக் கட்டிக்கொண்டு போன, மோசூர் மிராசு மோகனவேல், அவளைத் தொட்டுப் பார்ப்பதற்குள்ளே மாரடைப்பால் மடிந்தார். அவருக்கும் வயதாகிவிட்டது. மூன்றாந்தாரமாக மனோகரி சென்றாள். அந்த மனோகரி காட்டும், இன்ப ஒளியில் மூழ்குவதற்குள்ளே அவர் மாண்டார்.

மனோகரி, தாயகம் திரும்பினாள்—மகளின் 'போராத காலத்தை' எண்ணி எண்ணி ஏங்கி, அவளின் தாய், தன் காலத்தை வெகு சீக்கிரத்திலே முடித்துக்கொண்டாள். அவளின் தந்தை, மகளின் துயரைப் பார்க்கவும் சகிக்காமல் எங்கோ ஓடிவிட்டார்.

மனோகரி தன்னந் தனியானாள். அவளிடம் இருந்த இரண்டொரு நகைகள் தான் அவளுக்கு சொத்து. அவைகளைக்கொண்டு வந்து என்னிடம் பணம் கேட்டாள்.

நான் அவளைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள். அவளோ, வாழ்க்கை மாளிகையின் முதற்படி ஏறியதும், அதிலிருந்து சருக்கி விழுந்துவிட்டவள். நானோ, வாழ்க்கை மாளிகை எப்படிக் கட்டுவது என்று தினந் தினம் திட்டம் போட்டுக்கொண்டிருக்கும் பருவக்காளை—

என்னிடம் அவள் சங்கிலியைத் தந்தாள்—அவளிடம் நானோ எதிர்பார்ப்பது......! அவள், கேட்ட பணத்துடன்

அன்று திரும்பிச் சென்ருள். அதன் பிறகு அவள் என்னைப் பார்க்க வரவில்லை. நான்தான் அவளைப் பார்க்கச் சென்றேன்.

அவள் என்னிடம் தன் சோகக் கதையைச் சொன்னுள். நான் என் ஆதரவைத் தருவதாகச் சொன்னேன்.

அவள் இசைந்தாள். அந்த இசைவின் அத்தாட்சி தான் இரண்டு பெண் குழந்தைகள்.

திருடனிலேயே, பலே திருடன் என்பதற்கு, வேறு சாட்சி தேவையில்லை. ஐந்தாண்டுகள் அவளோடு ஆனந்த வாழ்க்கை நடத்தியிருக்கிறேன். அழகு தெய்வங்களாக இரண்டு சொர்ணவிக்கிரகங்களைச் சிருஷ்டித்தேன். ஆனுல் இந்தச் செய்தி இன்னமும் எவருக்கும் தெரியாது.

எவ்வளவு பாதுகாப்பாக நான் அயோக்கியத்தனம் செய்திருக்கிறேன். என்னைத்தான் ஊரார் தங்கக்கம்பி என்று பாராட்டுகிருர்கள்.

மனேகரி கூடத்தான், என்னைத் தங்கத்தைவிட மேலாக எண்ணினுள்—போற்றினுள். தங்க நகைகளைப் பெட்டியில் வைத்துப் பூட்ட மறந்தாலும் மறப்பாள். என்னை அவள் எவருக்கும் தெரியாமல் அவள் வீட்டில் ஒளியவைப்பதில் எந்தச் சிறு மறதியும் அவளுக்குக் கிடையாது.

என்னையே நம்பியிருந்த அவளைத் திடீரென நான் நிரா கரிப்பேன் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

அன்றுதான் அவளுக்கு, ஆண் வர்க்கத்திற்கே, பரம்பரை பரம்பரையாக ஏறிப்போன அந்தக் குணத்தின் கொடுமை தெரிந்திருக்கும். அந்த நாளை நினைத்துக் கொண்டால் இன்னமும் எனக்கு பயமாக இருக்கிறது.

உள்ளே சென்றதும், அன்று, ஒரு வார்த்தைகூடப் பேசாமல், ஒரு நோட்டுக் கற்றையை அவள் கையில் கொடுத்தேன். அவளுக்கு எதுவும் புரியவில்லை.

"ஏன், இவ்வளவு பணம்?"

“ உனக்காகத்தான் கொண்டுவந்தேன் ”

“ பெரிய மகள் கல்யாணத்திற்காகவா, சிறிய மகள் சீமந்தத்துக்காகவா !”

“ உண்மையில் உனக்குத்தான் இந்தப் பணம் ”

“ யார் உங்களைக் கேட்டார்கள் ?”

“ நீ கேட்கவில்லை—ஆனால் நான் கொடுக்கிறேன் ”

“ எதற்காக ?”

எனக்கு அப்பொழுது பேச்சே வரவில்லை. அழுகை தான் வந்தது. என்னையுமறியாமல் அழுதுவிட்டேன். மனோகரி திடுக்கிட்டுப் போனாள். தேம்பும் என்னை அணைத்துக்கொண்டாள். படுக்கையறையினுள் அழைத்துச் சென்றாள்.

“ மனோகரி, நான் பெரிய பழியைச் செய்ய வந்திருக்கிறேன். அதைச் செய்யாமலும் இருக்கமுடியாது. இன்றோடு நம் உறவு அறுந்துவிடப்போகிறது. ஆமாம், இனி உன்னை நான் பார்க்கமுடியாது—பார்க்கக்கூடாது. உன்னைப் பிரிகிறேன்.”

“ என்ன சொல்கிறீர்கள்—என்னைப் பிரிகிறீர்களா ? இரண்டு செல்வங்களை எனக்களித்த பிறகும் பிரிகிறீர்களா ?”

“ வேறு வழியில்லை—என்னைக் காப்பாற்று மனோகரி. இந்த ஊரைவிட்டே நீ போய்விடவேண்டும். நம் தொடர்பு இதுவரை யாருக்கும் தெரியாது, இனி யாருக்கும் தெரியக்கூடாது ”

“ இம்மாதிரி நீங்கள் பேசுவதைவிட என்னைக் கொன்று போடுங்கள். அது இந்த வார்த்தைகளைக் கேட்பதைவிட கொடுமையானதல்ல ”

“ இனி பேசவும் நேரமில்லை. ஐந்தாண்டு நம் இன்ப வாழ்க்கை இதோ அஸ்தமித்துவிட்டது. இனி நீ யாரோ! இந்த ஐயாயிரத்தை வைத்துக்கொள்—தயவு செய்து

இந்த ஊரைவிட்டுப் போய்விடு—குழந்தைகளைக் காப் பாற்று—நான் போகிறேன்''

நான் ஓடோடி வெளியில் வந்தேன். அங்கு மனோகரி யின் துணைக்காக இருந்த வேலைக்கார வேலாயுதம், "என் னங்க இவ்வளவு அவசரங்க' என்றான். என் காதுகளில் அந்த வார்த்தைகள் விழுவதற்கு முன்பே நான் அந்த வீதியைக் கடந்து சென்றுவிட்டேன். அவ்வளவு விரை வாக நடந்து சென்றேன்.

அன்றைய மறுநாளே, மனோகரியைக் காணவில்லை அவள் எங்கு சென்றாள், என்ன செய்கிறாள் என்றுகூட அறிய முடியவில்லை.

என்னைப்போன்ற ஒரு துரோகியை அவள் மன்னித் ததை என் ஆயுளில் நான் மறக்கமுடியாது. என்னைக் காட்டிக் கொடுப்பதென்றால் எவ்வளவு நேரம் பிடிக்கும்? செய்யவில்லை. பெண்ணின் பெருங்குணத்தை அவளிடம் கண்டேன்.

கண்ணம்மாவின் கழுத்தில் தாலி கட்டுகிறவரை எனக்குச் சந்தேகந்தான். திருமணத்திற்கு, குழந்தை குட்டிகளுடன் யாரேனும் வந்துவிட்டால், எனக்குச் சுரம் அடிப்பதுபோலிருக்கும். மணப் பந்தலில் உட்காரும் மாப்பிள்ளைகள் மணப்பெண்ணைத்தான் திரும்பித் திரும் பிப் பார்ப்பார்கள். நான், திருமணத்திற்கு வரும் பெண் களையே உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். எங்கே, மனோகரி வந்துவிடுகிறாளோ, வந்து குழப்பம் விளைவிக் கிறாளோ என்ற எண்ணம், திருமண நாள் முழுவதும் என்னை ஆட்டிப் படைத்தது.

பெண்களைத் திட்டியும், குற்றம் சாட்டியும் பாடும் புலவர்களையும், கவிஞர்களையும் நான் மனமாரக் கண்டிக் கிறேன். அவர்கள் ஏதோ, ஆண்களை நெறிதவறி நடக் கத் தூண்டும் கருவிகளாக எண்ணிக்கொண்டு, பாடும், எழுதும் பழக்கம், இந்நாட்டு ஏட்டுலகத்திற்கு வாடிக்கை யாக இருந்தது—இருக்கிறது. இல்லை, அது தவறு. மனோகரியின் கண்ணியத்தை உலகத்திலேயே எங்கும் காணமுடியாது!

மனோகரியின் நினைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து கடைசியில் மறைந்தே விட்டது.

*   *   *

ஐயோ, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, அவள் என்னை ஏன் காணவேண்டும்? பழைய அன்பு மாறாதவள் போலப் பேசினாளே—என்னை அந்த வார்த்தைகள் குத்திக் கொல்கின்றனவே என் மனச்சாட்சி என்னை சித்திர வதை செய்கிறதே!

இவளின் பெண்ணைத்தான் கண்ணன் காதலிக்கிறானா? அந்தப் பெண் மட்டும் யாராம்! என் மகளே தான்! அஞ்சுகத்தை அவன் மணக்கவேண்டும் என்று இனி நான் எப்படி வற்புறுத்துவேன்! தாய்க்கும், மாறாத துரோகத்தைச் செய்தேன்—மகளுக்குமா, துரோகம செய்யவேண்டும்!

துரோகம் செய்தாலும் செய்யலாம்—இத்தகைய துரோகம் எந்த ஆணும் செய்யக்கூடாது!

மனோகரிக்கு நான் செய்த துரோகத்திற்குக் கழுவாய் தேடவேண்டும்—அதற்கு இது நல்ல சந்தர்ப்பம்! ஆமாம், மனிதப்பண்பு எனக்குக் கொஞ்சமாவது ஒட்டிக்கொண்டிக்கிறதென்றால், நான ஏதாவது செய்தாகவேண்டும்.

மனோகரி, என்க்காக இத்தனை யாண்டுகள் அஞ்ஞாத வாசம் இருந்திருக்கிறாள். நானோ, அவளைக் கெடுத்ததுமன்றி, மகளின் வாழ்விலும் மண்ணைப்போடக் கங்கணம் கட்டிக்கொண்டு வந்துள்ளேன். ஐயோ, இந்தக் கொடுமையை, உலகம் தாங்காது! பெற்ற மக்களையும், பிரிய காதலியையும், ஊருக்கும், போலிக்கௌரவத்திற்கும், அர்த்தமற்ற கட்டுப்பாட்டிற்கும் பயந்துகொண்டு விரட்டி விட்டேன். மனோகரியை நான் மணந்திருக்கக்கூடாதா? மணந்திருந்தால், மலை, கடலாகுமா? கடல், எரிமலையாகுமா? வானம் இடிந்து விழுமா? பூமி பிளந்துவிடுமா? அப்படியொன்றும் ஆகவில்லை. ரேவதி, தேவகி, என் மக்கள் என்று பூரிப்போடு உலவுவேன். விதவைத்

திருமணம் செய்த புரட்சி வீரன் என்று, பகுத்தறிவாளர்கள் பாராட்டியிருப்பர். தவறிவிட்டேன்.

அந்த ஒரு தவறு போதாது என்று, மேலும், அதை விடப் பயங்கரமான தவறு நான் செய்யவா? கூடாது, கூடாது.

தேவகியைக் கண்ணன் மணக்கட்டும். அந்தத் திருமணத்தைப் பெண் வீட்டுக்காரனுக இருந்து நடத்த முடியாது—ஊரின் வம்புப் பேச்சுக்கு அஞ்சிடும் கோழையாதலால்! பிள்ளை வீட்டுக்காரன் போலவாவது, இதை நடத்தலாமல்லவா?

என்னைப்பற்றி மட்டும் யோசித்துவிட்டால் போதுமா? என் மகள் அஞ்சுகத்தை எப்படி சமாதானப்படுத்துவது? அந்தப் பிஞ்சு நெஞ்சம் பஞ்சு பஞ்சாய்ப் போய்விடுமே! அவளிடம் எதைச் சொல்லி நான், கண்ணனை மறக்கடிப்பது? அவளை எப்படி, மற்றெருருவனை மணக்கச் சம்மதிக்க வைப்பது? பெண் மனம் மென்மையானது என்று கூறுவார்கள். நானும் அப்படித்தான் நம்புகிறேன். ஆனுல் மனேகரியை நினைக்கிறபொழுது, பெண் மனம் ஒரு இரும்புக் கோட்டை என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது. என் அஞ்சுகத்தின் மனமும் அப்படி இருக்கக் கூடாது!

மனேகரியிடமிருந்து, அவள் ஆசைக் காதலன் பிரிந்ததற்கு யார் காரணம்? இந்தக் கோழைதான் காரணம். அந்தக் கோழையை அவள் பழி தீர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பம் வந்துவிட்டது. என் மகளே, மனேகரி அடைந்த துயரை அடைய வேண்டி வந்துவிட்டது.

குடும்பம் என்பது ஓடும் வண்டி சக்கரம் போல— பழைய சம்பவங்கள் மீண்டும் புதிய வடிவெடுக்கின்றன.

மனேகரியைத் தவிக்கவிட்டேன். என் மகள் இன்று தவிக்கவேண்டியவளாகிவிட்டாள். இம்மாதிரி சம்பவங்களை வைத்துக்கொண்டுதான், நரகம், மோட்சம் என்று கதை கட்டியிருப்பார்களோ, என்னவோ! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதின் முழுப்பொருளுக்

கும் நான் இலக்கியமாகத் திகழ்கிறேன். தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான் என்பார்களே, நான் வினை விதைத்த உழவன் போலும்!

நான் பெற்றெடுத்த பெண் திலகங்களைப் பார்க்க வேண்டும் என்று எனக்குப் பேரவா—இந்தச் சமுதாய தொடை நடுங்கிக்கு எங்கே தைரியம் வரப்போகிறது? ஆகவேதான் ஓடோடி வெளியில் வந்தேன்.

சமூக அடிமையென்றாலும், என் மனதில் ஒரு உறுதி எடுத்துக்கொண்டேன். அதை இனி யாராலும் மாற்ற முடியாது—தாய்க்குச் செய்த துரோகத்தை, மகளுக்குச் செய்யும் தியாகத்தால் கழுவவேண்டும் என்று எண்ணினேன். அதன்படிதான் இனி நடப்பேன்.

இனி, அஞ்சுகம் கண்ணனை அடையமுடியாது—அடைய விடமாட்டேன். மனோகரியை விரட்டியடிக்க, என் நெஞ்சை எப்படித் தயார் செய்துகொண்டேனோ, அப்படி, என் நெஞ்சை திடப்படுத்திவிட்டேன்.

தேவகியை, கண்ணன் மணக்க என்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்வேன்—இது உறுதி! தேவகி என் முதல் மனைவிக்குப் பிறந்தவள்தான்—என் மகள்! அவள்வாழ்விலே மலர்ச்சியை உண்டாக்குவேன். அந்த மலர்ச்சி கண்டு நான் மன மகிழ்வேன்.

* * *

நல்ல வெயில் காய்ந்துகொண்டிருந்தது. வீட்டிற்கு வந்துசேர்ந்தேன்.

"என்ன அண்ணா, பொழுது விடிவதற்குள்ளேயே எழுந்து எங்கே போனாய்?"

"தபால் நிலையத்திற்கு"

"எட்டு மணிக்கு மேலேதானே தபால் தருவார்கள்"

"முக்கியமான விஷயம்பற்றி தகவல் தரச்சொல்லி விட்டு வந்தேன்"

" தகவல் கிடைத்ததா ?"

" தகவல் கிடைத்தது மட்டுமல்ல—உடனே ஊருக்குப் புறப்பட்டாகவேண்டும்"

" என்ன அண்ணு இவ்வளவு அவசரம் ?"

" ஆமாம் கல்யாணி—மிகவும் முக்கியம்—அவசரம்"

உள்ளிருந்து ஓடிவந்தாள் அஞ்சுகம். அவள் பின்னுலேயே, கண்ணம்மாவும் வந்தாள்.

" ஊருக்குப் புறப்படத் தயாராகுங்கள் "

" என்ன ?"

"ஆமாம் கண்ணு, அவசரமான கடைவேலை—போய், அடுத்த மாதம் வரலாம் "

கண்ணம்மா, திகைத்துப்போனுள். அஞ்சுகத்தின் கண்கள் கலங்கிவிட்டன. நான் வேறென்றும் பேசாமல், "வண்டி கொண்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டே, மீண்டும் வெளியில் நடந்தேன்.

மகன் :

எப்பொழுது பார்த்தாலும், திருமணம, திருமணம் என்று பாடாய்ப் படுத்துகிருர்கள்.

'என் மூச்சிருக்கிறபொழுதே உனக்கு ஒரு கல்யாணம் செய்து பார்க்கவேண்டாமா' என்கிருள் தாய். அவள் மூச்சுக்கொரு கல்யாணம் பண்ணியாகவேண்டும். 'என் கண்ணிருக்கிறபொழுதே, கல்யாணத்தைச் செய்துவிட வேண்டாமா?' என்கிருர் என் தந்தை. ஆகவே அவர் கண்ணுக்கு ஒரு கல்யாணம் பண்ணியாகவேண்டும்.

அப்பப்பா, இந்த நாட்டில்தான் திருமணம் என்பதற்கே அர்த்தமில்லாமலிருக்கிறது. திருமணம் செய்வது எதற்கு, ஏன், எப்பொழுது என்று யோசிப்பதே இல்லை. அப்பா, ஐந்து லட்சத்திற்கு அதிகாரியென்ருல், பையனுக்குப் பதினறு வயதிலே கல்யாணம். அம்மாவுக்கு, பிள்ளைபேரில் அபாரமான ஆசையென்ருல். பையனுக்கு வந்தது விபத்து—உடனே கல்யாணம்! பாட்டி சாகக் கிடக்கிருள் என்ருல், அவள் பாடை கட்டுவதற்குள், பந்தலைப் போட்டு, பேரனுக்குக் கல்யாணம் பண்ணியாக வேண்டும்! தாத்தாவுக்கு 'தத்துகுத்தலாக' இருக்கிறதென்ருல், பேரன் ஓடி ஒளிந்தாலும் விடமாட்டார்கள். உடனே கல்யாணம்!

திருமணம் என்பதின் பொருள் புரிந்துசெய்யவேண்டாமா? இந்த நாட்டில் அதன் பொருள் புரியாததால் தான் ஒன்று பால்யத்திலேயே திருமணம் செய்தார்கள். அதற்கு சட்டம் போட்டுத் தடுக்கவேண்டியதாகிவிட்டது. இன்னென்று, தட்டுத்தடுமாறும் கிழங்களெல்லாம், பதினெட்டு வயதாகப் பார்த்துக் கட்டிக்கொள்ளும் 'கருமாதி'யைப் பார்க்கிருேம்.

குடும்பத்திலே, எப்பொழுது திருமணப் பேச்சு தொடங்கும். குழந்தை பெண்ணுக இருந்தாலும் சரி,

ஆணுக இருந்தாலும் சரி, அப்பொழுதே, கோடிவீட்டுப் பாட்டி ஆரம்பித்துவிடுவாள். பிறந்திருப்பது பெண் குழந்தை என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பாட்டி சொல்வாள் 'குட்டி, அவ அத்தையை உரிச்சிக்கிட்டிருக்கா—ஏண்டி, கோபு பயலேக் கட்டிக்குவியோ!' என்று. இந்தப் பேச்சு—குழந்தை பிறந்த இரண்டொரு தினங்களிலேயே சொல்லப்படும். கோபு மாப்பிள்ளேக்கு வயது இரண்டிருக்கும். பெண் வளர்ந்து கவுன் போடுகிற பொழுது, அடுத்த வீட்டிலிருக்கும் சட்டைபோடும் வயதுள்ள குழந்தைக்கும் முடிச்சு போடுவார்கள். சிற்ருடை கட்ட ஆரம்பிக்கிற காலத்தில் வீட்டிலே யிருக்கிற பெரிய தாத்தா போட்டிக்கு வந்துவிடுவார். 'ஏம்மா, என்னேக் கட்டிக்குவியா?' என்பார் ஆசையோடு, பொக்கை வாயைத் திறந்தபடி, ஒழுகும் எச்சிலே உறிஞ்சியபடி. 'முடியாது' என்று பதில் சொன்னல், அதைப்பற்றி மூன்று நாட்களுக்கு, அந்தக்குடும்பத்திலே பேசுவார்கள். 'முடியும்' என்றுவிட்டாலும், அதைப்பற்றி பேசாமலிருக்கமாட்டார்கள். அது அந்த 'தேவி'யின் திருவிளேயாடல்களில் ஒன்ருகப் பேசுவார்கள். தாவணிபோட ஆரம்பித்துவிட்டால், சொல்லவே வேண்டியதில்லே. எங்கெங்கோ இருக்கிற எவனெவனேப்பற்றி யெல்லாம் பேசுவார்கள். அதுவும், அந்தப் பெண்ணுக்கு, முறையுள்ள மாமன் எவனுவது இருந்துவிட்டால், அந்தப் பெண்ணுக்கும் ஆபத்து— அந்த மாமனுக்கும் பைத்தியம் பிடித்துவிடும். அப்படிப் பேசுவார்கள். பெண் குழந்தையின் புத்திசாலித்தனத்தைப் பரீட்சிப்பதற்கு, குடும்பத்திலே கேட்கப்படுகிற கேள்வியே, 'யாரைக் கட்டிக்கிறே' என்பதுதானே! பெண் புடவை கட்ட ஆரம்பித்துவிட்டதோ, திருமணப் பேச்சு வேறுவிதமாகிவிடும். மணந்துகொள்ளவேண்டிய பெண்ணிடம் தவிர, மற்ற எல்லோரிடமும் அவள் திருமணத்தைப் பற்றிப் பேசுவார்கள்.

பிறக்கிற குழந்தை ஆணுக இருந்துவிட்டால் அப்பொழுதும் இப்படித்தான் பேசுவார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே, திருமணம் பற்றியேதான் பேசுவார்கள். கால்சட்டையும், அரைசட்டையும் போடுகிற சிறு

வன், ஒரு பெண் குழந்தையோடு விளையாட ஆரம்பித்தால், வீட்டுப் பெரியவர்கள், அந்தப் பெண் குழந்தையைப் பார்த்து 'ஏண்டி குட்டி, பயலை, மயக்கப் பார்க்கிறாயா?' என்று கேட்பார்கள். 'ஆண்பிள்ளைகளுக்கு, பெண் பிள்ளையோடு என்னடா விளையாட்டு' என்று சிறுவனைக் கேட்பார்கள். குழந்தை உள்ளத்திலே, குடும்ப ரகசியங்களையும் புகுத்துவார்கள். பிறகோ, கொடுமைப் படுத்தவும் பின்வாங்கவும் மாட்டார்கள்.

வீட்டிலே உள்ள மகன், படுக்கையில் இரண்டுமுறை புரண்டு படுக்கிறான் என்றால், தாய் மெதுவாக, தந்தையிடம் கட்டவிழ்ப்பாள். இரவில் கொஞ்சம் நேரம்கழித்து வருகிறானென்றால், தந்தையே, அவன் காதுபட, திருமணப் பேச்சை ஆரம்பிப்பார். இப்படி, திருமணம் என்பதின் பொருளுணராமலேயே, இந் நாட்டோர் நடந்து கொள்கிறார்கள்.

* * *

'இவளும் பன்னிராட்டை பிராயத்தாளாய், இவனும் பதினாறாட்டை பிராயத்தானாய்' என்று பேசும் இலக்கிய கர்த்தாக்களையே நான் குறை கூறுகிறேன். பன்னிரண்டு வயதுக்குள்ளே, பெண் எப்படி, குடும்பத்தின் இலட்சணங்களை அறியமுடியும்? பதினாறு வயதிலே ஆண் எங்ஙனம் குடும்பத்தை இயக்கமுடியும்? இதனை உணரவேண்டாமா?

ஒருவனுக்கு மணம் என்றால், அவனுக்கு மணத்திற்கு அவசியம் ஏற்பட்டுவிட்டதா என்று முதலில்பார்க்க வேண்டும். அவசியந்தான் என்றால், அவன், குடும்பத்தை நடத்தும் அளவிற்கு வருவாய் பெற்றுள்ளானா என்று ஆராயவேண்டும். அதன்பிறகு அவன் மனத்தை அறிய வேண்டும். திருமணம் என்பது ரோஜா செடியின்மீது மல்லிகைக் கொடியைப் படரவிடுவதாக இருக்கவேண்டும். எட்டியையும், எருக்கனையும் கயிறுகொண்டு கட்டிச் சேர்ப்பதாக இருக்கக்கூடாது!

ஆணின் மனதறிவதைப்போல, பெண்ணின் எண்ணம் அறிந்த பிறகு திருமணம் நடத்தப்படவேண்டும்.

இதைத்தான் ஒவ்வொரு குடும்பமும் உணரவேண்டும். இதை விடுத்து, அம்மாவின் ஆசைக்காகவும், அப்பாவின் கடமை கழியட்டும என்பதற்காகவும் திருமணம் என்ருல், திருமணமல்ல—கேலிக் கூத்து!

குடும்பம் என்ருல் ஒன்று பறையொலி கேட்கவேண்டும்—இல்லாவிட்டால் மேள சப்தம் ஒலிக்கவேண்டும் என்று நினைக்கிருர்கள். இரண்டு சப்தமில்லாவிட்டால், வீட்டிலுள்ள பாத்திரங்களைத் தட்டியாவது சப்தம் உண்டாக்குகிருர்களே தவிர, வீட்டுப் பெரியவர்கள் சும்மா யிருக்கமாட்டார்கள்.

என்னை எப்படி வாட்டியெடுக்கிருர்கள் தெரியுமா? முறைபோட்டல்லவா, வாட்டுகிருர்கள்! அம்மா ஒரு நாளைக்கு, அப்பா ஒரு நாளைக்கு! இப்படி என்னைக் கொத்தியெடுக்கிருர்கள்.

திருமணம் என்பது வாலிபர்களுக்கு வைக்கப்படும் விருந்து—வாயில் வைத்தாலே கசக்கும் மருந்தல்ல—இதையறிந்தும் பெற்ருேர்கள் ஏன் அப்படி தொந்தரவு செய்யவேண்டும்? விருந்துக்கு வாவென்ருல் வரமாட்டேன் என்கிருனே, காரணமில்லாமலா இருக்கும் என்று யோசித்துப் பார்க்கவேண்டாமோ? ஒருவேளை பசியில்லையோ அல்லது அஜீரணமோ, அல்லது வயிற்றுக் கோளாருே என்று சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

கண்ணன் எதைச் சொல்லித் தட்டி நடந்தான், இப்பொழுது மட்டும் பிடிவாதம் பிடிக்கிருனே, ஏன் என்று கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் போதும். என் பெற்ருேர்கள் என் நிலையை உணர்வார்கள். அதைத்தான் அவர்கள் செய்யவில்லை.

திருமணம் செய்துகொள் என்று சொல்கிருர்கள்—திருமணம் எனக்குத் தேவையென்று அவர்கள் முடிவுக்கு வந்துவிட்டதாலேயே! சரி, அப்படித் திருமணம் செய்து கொண்டால், அந்தப் பெண்ணை வைத்துக் காப்பாற்ற எனக்கு வருவாய் இருக்கிறதா? இதைக் கேட்டால், என் அம்மாவே, பதில் சொல்லிவிடுவார்கள். 'நான்

பெற்ற தங்கம், ஒருத்தனிடம் கைகட்டிச் சேவகம் பார்க்கணுமா, அப்பா சம்பாதிச்சு வைச்சிருக்கிறது போதாதா என்ன' என்று. எந்தப் பெண்ணை மணந்து கொள்வது? அதைப்பற்றி அவர்கள் பேசவே இல்லை. ஏனெனில் அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள், அஞ்சுகம் என்று! ஆகவே. அவளைத்தான் நான் மணந்து கொள்ளவேண்டும். இதற்குத் திருமணம் என்று பெயர். கமால்பாட்சா, திருமணம் செய்து கொள்வதற்கு முன், உடற்கூறு சிகிச்சை அறிந்த டாக்டரிடம், நற்சாட்சிப் பத்திரம் வாங்கவேண்டும் என்று சட்டமிட்டான். ஆனால் இங்கு சாதகம் பார்க்கும் புரோகிதன், நற்சாட்சிப் பத்திரம்தான் தேவை! இங்கிருக்கும் புரோகிதன், அஞ்சுகம், கண்ணன் என்று பெயர்களை எழுதிக்கொண்டு, அ, க, அக, அகக, ஆகா, திவ்யமான பொருத்தம் என்று சொல்லிவிடுவான். என்னைப் பற்றியோ, என் மனதிலுள்ள எண்ணங்களைப் பற்றியோ, அல்லது அஞ்சுகத்தைப் பற்றியோ, அஞ்சுகத்தின் மனதிலுள்ள கனவுகளைப்பற்றியோ அவனுக்குக் கவலையில்லை. அவன் கவனமெல்லாம், 'ஆகா' வந்ததே ஐந்து ரூபாய், என்பதிலேதான்.

இந்தத் திருமணத்திற்கு நான் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று ஓயாது, ஒழியாது என்னைத் தொல்லைப் படுத்துகிருர்கள்.

நான் என் மனதில் உள்ளதை எப்படிச் சொல்வேன்? தாயிடம் திருமணம் வேண்டாம் என்று சொல்லலாம். அஞ்சுகம் பிடிக்கவில்லையென்னலாம். ஆனால் மற்றவைகளை என்னல் சொல்லமுடியவில்லை. தந்தையிடம் இது பற்றி பேசவே என்னல் முடியாது!

* * *

எனமனதில்உள்ளதைக் கொட்டியளந்தாகவேண்டும். இல்லாவிட்டால், என் மனமே வெடித்துவிடும போலாகிவிட்டது. அப்படி நான் உணரும்பொழுதுதான் பாலன் என்னிடம் வந்தான். அவனுக்குத் திருமணமாவதற்கு முன்வரை, எங்கள் இருவரையுந்தான் எந்த இடத்திலும் பார்க்கலாம். சினிமா, எந்தச் சனியனாக இருந்தாலும், வாரத்தில் மூன்று நாட்கள் போய்விடுவோம்.

என் வாழ்க்கையில், நான் பார்த்த 'இரு சகோதரிகள்' என்ற படந்தான் பெரிய மாறுதலை உண்டாக்கிவிட்டது. அந்தப் படத்திற்கு நான் போகவில்லையென்ருல், என் மனதில் ஏன் இன்று வீசுகிற புயல் வீசப்போகிறது? அந்தப் படம்தான் என் வாழ்விலே ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கிவிட்டது

அந்தத் திருப்பத்தில் நான் நின்று தத்தளிக்கும் பொழுது எப்பொழுதும் என்னுடனிருக்கும் நண்பன் பாலன் இல்லை. அவன் திருமணம் செய்துகொண்டு, 'விநோதா ஸ்டோர்ஸ்' வேலையிலேயே, தன்னை ஒப்படைத்துவிட்டான். நானும் அவனைத் தேடிப்போய் தொல்லை தருவதில்லை. அவனுகவே வந்து என்னிடம் என் எதிர்கால வாழ்வைப்பற்றிப் பேச ஆரம்பித்தான். நான் என் மனதிலுள்ளவைகளை யாரிடம் கூறுவதென்று ஆளும், நாளும் பார்த்துக்கொண்டிருக்கையில் பாலன் வரவே, அவனிடம் என் மனதைப் புட்டு வைத்துவிடவேண்டும் என்று தீர்மானித்தேன்.

அவனிடம், என் மனதில் உள்ளதைக் கூறுவதென்ருல், முதலில் 'இரு சகோதரிகள்' தான் வருவர். முதலில் என்ன, முடிவிலும் அவர்களேதான்!

'இரு சகோதரிகள்' என்று சினிமாக் கதையை மட்டும் நான் குறிப்பிடவில்லை. என் வாழ்க்கையிலும், இரு சகோதரிகள் வந்துதான் என்னைச் சில சமயங்களில் எரிமலையாகவும், வேறு சில சமயங்களில் பனிமலையாகவும் ஆக்கிவருகிருர்கள்.

பாலன், பல நாட்களுக்குப் பிறகு, திடீரென்று ஒரு நாள் வந்து, வேறு எதுவும் பேசாமல், "கண்ணு உனக்கு மணம் எப்பொழுது?" என்ருன்.

"மணமா, மரணமா?" என்றேன், நான். அவன் கேட்ட அவசரத்திலேயே என் பதிலும் வந்தது.

'போடா, பைத்தியக்காரா" என்ருன். என் பதிலைக் கேட்டவுடன் அவன் அவசரம், ஆத்திரம் எல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிட்டன,

"காரியக்காரனுக இருக்க, உன் போன்ற கைகாரன் ஒருவன் வேண்டும்" என்றேன்.

"உன் மணத்திற்காக, என்ன செய்யவேண்டுமென்று நீ கூறினுலும் நான் செய்யத் தயார்" என்ருன்.

"அப்படியாஞல் இப்படி உட்கார்" என்று கூறி. அவனைத் தனியான இடத்திற்கு அழைத்துச் சென்று என் கதையைக் கூறினேன். அவன் அப்படியே அசைவற்று வீற்றிருந்தான்.

* * *

அந்த வீட்டாரை, ஊராரே, மிரட்சிக் கண்களுடன் பார்த்தார்கள்-அந்த வீடே, ஏதோ புராணங்களில் கூறப்படுகிற நரகம் போலவே, வருணிக்கப்பட்டது. ஊர்ப் பெரியவர்களால், அந்த வீட்டிலுள்ளவர்கள் அனைவருமே பாபாத்மாக்கள் என்று பேசப்பட்டனர். மங்கம்மாள் பெண்ணுலக ஒழுக்கத்திற்கே இழுக்கு செய்யப் பிறந்தவள் என்றும், அவள் பெற்ற மக்கள் அதைவிட மட்டமாகத்தானிருக்க முடியுமென்றும் கூருதாரில்லை.

அவர்கள் யார், எந்த ஊர், எங்கள் ஊருக்கு எப்பொழுது வந்தார்கள்—இந்த விபரங்கள் எனக்குத் தெரியாது. ஆனுல், நான் சிறுவயதில், ராமானுஜ தரிசன வித்தியாசாலையில் மூன்ருவது வகுப்பு படித்துக்கொண்டிருந்த பொழுதே தேவகியை எனக்குத் தெரியும். அந்தப் பள்ளிக்கூடம்வைணவ மதக்காரர்களால்நடத்தப்படுவது. ஆகவே அம்மத சம்பந்தமான பாடங்கள் நிறையச் சொல்லித் தருவார்கள். மார்கழி மாதம் வந்துவிட்டால், அது பள்ளிக்கூடமாக இருக்காது. பஜனைக்கூடமாக மாறி விடும். அதில் வேலை செய்யும் ஆசிரியர்கள், பாகவத சிரோன்மணிகளாகி விடுவார்கள். சிறுவர்கள் சிலேட்டும், புத்தகங்களும் எடுத்து வரமாட்டார்கள். சிறுகடலை, சுண்டல், வாழைப்பழம், புளியோதரை வாங்கவே வருவார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில், சிறுவர்களில் என்னையும், சிறுமிகளில் தேவகியையும் அறியாதவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். ஏனெனில் அங்கு கூடும் பெருங்கூட்டத்தில் திருப்பாவை முழுவதும் மனப்பாடம் ஆன

வர்கள் நாங்கள் இருவருமே. திருப்பாவை மட்டுமல்ல சித்திரை நட்சத்திரம் தோறும் கூட்டும் கூட்டங்களிலெல்லாம் எங்கள் இருவரின் பிரசங்கங்கள் இருக்கும். அவள் 'ஆண்டாள்' என்று பேசினால், நான் 'நம்மாழ்வரும் நாமும்' என்று பேசுவேன். பேசுவது என்றால், ஆசிரியர் எழுதித் தருவதை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்பு விப்பதாகும். அதில் இருவரும் கைதேர்ந்தவர்கள்— பஜனைப் பள்ளியில் படித்தவர்கள், பகுத்தறிவுவாதிகளாகி விட்டோம்.

தேவகியின் அக்கா ரேவதி எங்களைவிட ஒரு வகுப்பு அதிகம் படித்துக்கொண்டிருப்பவள். அவளோடு அதிக தொடர்பு எனக்குக் கிடையாது. இருந்தாலும் சாதாரணமாகப் பேசுவது உண்டு.

தேவகியின் நட்பு, வரவர வளர்ந்துகொண்டே வந்தது. நான் எப்பொழுதுமே அவள் வீட்டிலேயே இருந்து வந்தேன். அதனை முதலில் என் பெற்றோர்கள் கண்டிக்கவில்லை. 'குழந்தைகள் விளையாடுகின்றன' ஆரம்பத்தில் விட்டு விட்டார்கள். குழந்தைகள் வளர்ந்த பிறகு, அந்தத் தொடர்பைக் குறைகூற ஆரம்பித்தார்கள். ஆனால், அதனால் பயன் ஏற்படவில்லை. என்னைத் தேவகியின் வீட்டிற்குப் போகக்கூடாது என்று இப்பொழுது சொன்னால், எப்படிப் போகாமல் இருப்பேன்? மிகவும் கண்டித்தால் மறைவாகப் போவேன். அவ்வளவுதானே நடைபெறும்.

தேவகி என்னிடம் தன் உள்ளத்து ஆசை முழுவதும் தேக்கிவைத்திருந்தாள் என்றுதான் கூறவேண்டும். குழந்தையிலிருந்தே வளர்ந்து வரும் பாசமாயிற்றே— அதற்கு எவ்வளவு வலுவிருக்கும்? அவள் காட்டும் அன்பைப்போல், ஆயிரம் மடங்கு அதிக அன்பு நான் அவளிடம் காட்டுகிறேன். இந்த அன்பால் கட்டுண்டு கிடக்கும் இரண்டு அன்றில் பறவைகளைப் பிரித்துவிடுவது என்பது அவ்வளவு எளிதா? ஆனால், என்னைப் பெற்றவர்கள் அந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தேவகியை நான் மணந்து கொள்வதென்று முடிவு செய்து ஆண்டுகள் பலவாகிவிட்டன. திருமணம்தான் நடைபெறவில்லை. ஆனால், பெற்றவர்கள், வேறொரு பெண்ணை எனக்குக் கட்டிவைக்க முயற்சி யெடுக்கிறார்கள்! என்ன செய்வது?

தேவகியை நான் மணக்கக்கூடாது என்பதற்காகக் கூறப்படும் காரணங்கள் மிக விசித்திரமானவை—அவர்கள் சாதி தெரியவில்லையாம். ஏன் தெரியவில்லை? தேவகி பெண் சாதி—அதில் சந்தேகம் இல்லை. அவர்கள் பரம்பரை வழியைப் பற்றி புரியவில்லையாம். அது பற்றிய கவலை நமக்கு ஏன்? பரம்பரையையா, நான் மணந்து கொள்ளப் போகிறேன். அவள் தாய் ஒரு மாதிரியாம்—தாயைக் காட்டி, மகளுக்கு மாசு கற்பிப்பதை நான் ஒப்ப முடியாது. அந்த வீடே, ஒரு விபசார விடுதியாம்—ஐயோ இதை மட்டும் என்னால் சகித்துக் கொள்ளமுடியாது! என் படிப்பைத்தான் பாழ் செய்து கொண்டேன் என்றால், தேவகியும் ரேவதியும் விடாது தொடர்ந்து படிப்பதைக் கண்டு நான் பெருமையடைகிறேன். ரேவதி சங்கீதக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றாள். என் தேவகி இன்னமும் படிக்கிறார்கள். பள்ளித் தோழர்கள் யாரேனும் அந்த வீட்டிற்கு வந்தால், ஊரார், இப்படியா குற்றம் சாட்டுவது! அட, குணங்கெட்ட ஊராரே!

என்னைத் 'திருமணம் செய்துகொள் திருமணம் செய்துகொள்! என்று வற்புறுத்துகிற பொழுதெல்லாம், தேவகியை நான் மணக்கத் திட்டமிட்டுவிட்டேன் என்று சொல்லவேண்டும். ஆனால் அவர்களிடம் எப்படிக் கூறுவது? அவர்களோ, அஞ்சுகத்தை நெஞ்சில் வைத்துக்கொண்டு, என்னைப் பாடாய்ப் படுத்துகிறார்கள்!

அஞ்சுகத்தை வேம்பென்றும், தேவகியைக்கரும்பென்றும் நான்கூறத்தயாராக இல்லை. அஞ்சுகம் என் வீட்டில் பிறந்த குழந்தையைப்போல, என்னாலேயே, எடுத்து வளர்க்கப்பட்டவள். அவளிடம் நான் காட்டிய அன்பெல்லாம், குடும்பத்திலே, கணவன் மனைவியாகும் அன்பல்ல

சகோதரன் அன்புதான். ஆனால், குழந்தையிலிருந்து, அஞ்சுகத்தின் உள்ளத்தில் தவறான ஆசையைக் கிளப்பி விட்டுவிட்டார்கள். நான்தான் அவள் கணவன் என்று ஊராரும், உற்றாரும், ஓயாது ஒழியாது பேசிப்பேசி, அந்த மொக்கு உள்ளத்தில், பெரிய கனவுலகத்தையே படைக்கும்படி செய்துவிட்டார்கள். எனக்குக்கூட அஞ்சுகம் என்றால் நெஞ்சுருகுகிறது—என் செய்வது? அவளுக்குத் தக்க கணவனைத் தேடி, நானே மணம் முடிப்பது என் வேலை. அதனை நான் செய்கிறேன்.

அஞ்சுகம் அழகி. குடும்பத்திற்கேற்ற குலவிளக்கு—இல்லறத்துக்குகந்த எழிலரசி—எல்லாம் சரி. என் உள்ளத்தில் வேறொருவனுக்கு இடம் தந்துவிட்டேனே!

மேலும், எனக்குச் சில இலட்சியங்கள் உண்டு. பலர் பகட்டாகப் பேசி, காரியத்தில் கைவிட்டு விடுகிறார்கள். சிலர் சில உயர்ந்த இலட்சியங்களை மிக அழகாகச் சொல்வார்கள். ஆனால் செயலில் மிக விகாரமான முறையில், அந்த இலட்சியங்களை அலட்சியப்படுத்துவார்கள். எனக்கு இந்தப் பேச்சாளிகளைப் பிடிப்பதில்லை. பேச்சு உடலுக்குச் செயல்மூச்சாகவேண்டும். கலப்பு மணத்தால், சாதி வித்தியாசம் நீங்கும் என்று நான் நம்புகிறேன். அதனால், பிறருக்கு உபதேசம் செய்துவிட்டு, நான் மாமன் மகளைக் கட்டிக்கொள்ளமாட்டேன். நானே வேற்று சாதிப் பெண்ணை மணக்கிறேன்.

கொள்கை மட்டுமல்ல, இதில் காதலும் பின்னிக் கிடப்பதால், யார் தடை சொன்னாலும், எதுவும் நடக்காது. இதனை என்னைப் பெற்றவர்கள் உணரவேண்டும். இவர் சொன்னால் கேட்பான், அவர் கண்டித்தால் அடங்குவான் என்று தப்புக் கணக்குகளைப் போட்டு, என்னை மாற்றி விடலாம் என்று நினைப்பது தவறு.

அதுமட்டுமல்ல, என் மாமன் வீட்டு உறவு கூடாது என்று நான் திடமாக நம்புகிறேன். மாமனாக இருப்பதாலேதான், அவர் வீட்டுப் பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். நான் மாமனாக

இருக்கிறாரே என்பதற்காகத்தான் அவர் வீட்டில் சம்பந்தம் கூடாது என்கிறேன். என் தந்தைக்குத் திருமணம் செய்து வைத்தவர் அவர். கடை வைத்துக் கொடுத்தவர் அவர்—அந்த நிலைமையையே, நான் எங்கே, சொல்லிக் காட்டுவாரோ என்று அஞ்சுகிறேன். ஆனால் மாமா அப்படிப்பட்டவர் அல்ல. எனினும் நானும் போய் அங்கேயே, என்னை நானே மாட்டுவித்துக் கொள்வது மிகவும் வெறுக்கத்தக்கது என்று கருதுகிறேன்.

*　　　　*　　　　*

ஆகவே, அஞ்சுகம் எனக்கு வேண்டாம்—தேவகி போதும் என்றேன். இவைகளை பாலன் தான் பெற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்று குறிப்பிட்டேன். அவன் தான் என் வாயைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்துவிட்டானே!

அப்பாவும், அம்மாவும் அதிகமாக வற்புறுத்த வற்புறுத்த, நான் தேவகியிடம் நெருங்கினேன்.

"தேவகி புறப்படு பந்தலுக்கு"

"மாநாட்டுப் பந்தலுக்கா"

"இல்லை, மணப்பந்தலுக்கு"

"யாருக்கு, திருமணம் — அழைப் பொன்றும் காணோமே!"

"இனிமேல் அச்சாகவேண்டும்"

"மாப்பிள்ளை யார்?"

"கல்லூர் ஸ்ரீமான் சரவணப் பிள்ளையின் ஜேஷ்ட குமாரர், சிரஞ்சீவி கண்ணனுக்கு"

"வட்டியூர், ஸ்ரீமான் அகிலாண்டம் பிள்ளை அவர்களின் குமாரத்தி, சௌபாக்கியவதி அஞ்சுகத்தை......"

"ஐயோ"

"நிகழும் ஈஸ்வர வருடம், தை மாதம் 21-ம் நாள் அசுவினி நட்சத்திரம்......"

"போதுமே"

"பெரியோர்களால் நிச்சயித்து, திருமணம், வட்டியூர் 'வரத விலாஸ்' இல்லத்தில் நடைபெறுவதால் தாங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து மணமக்களை ஆசிர்வதிக்கக் கோருகிறோம்"

நான் சிரித்தேன். அவள் சிரிப்பதாகக் காட்டினாள்.

"தேவகி—என்னை மிகவும் தொல்லைப்படுத்துகிறார்கள்-நாம் பேசாமல், பதிவுத் திருமணம் செய்துகொள்வது தான் நல்லது"

"நம் மனதில் உறுதியிருக்கிற வரையில் யாரால் பிரிக்கமுடியும், கண்ணே"

"உறுதி யிருக்கட்டும்—இந்த உபத்திரவத்தைத் தடுத்தாகவேண்டும்"

"கொஞ்சம் பொறுங்கள்—என் படிப்பு முடிந்து விடட்டும்!"

"அதுவும் சரிதான், தேவகி"

அவள், எங்கள் திருமணத்திற்கு, அவளின் பரிட்சை முடிவையே, தேதி நிர்ணயிக்கும் சோதிடனாக்கினாள். சரியென்று தேவகியை வற்புறுத்துவதை நிறுத்தினேன்.

தேர்வு முடிந்ததும், தேவகி, ஒரு அணுகுண்டையே தூக்கிப் போட்டுவிட்டாள்! என் இதயமே, இடிந்து பொடிப் பொடியாகிவிட்டது என்றுகூட எண்ணினேன்!

* * *

அவள் திருமணம், அவள் அக்காளின் திருமணத்திற்குப் பிறகுதானாம்! நான் என்ன சொல்வது? இனி, அவள் அக்காளுக்குக் கணவன் தேடித்தந்த பிறகல்லவா, நான் கணவனாக வேண்டும்!

என் மனம் படும் பாட்டை அவள் உணரவிட்டாளா? எனது நெற்றிச் சுருக்கங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அர்த்தம் கூறி, அதன் மூலம், சிரிப்பை வரவழைத்துவிடுவாளே! அவளுக்கா, என் இதயச் சுருக்கம்

தெரியாது! பின் ஏன் இப்படிக் கூறிவிட்டாள்! என்னை வாட்டுவது அவளுக்குச் சுவையாக இருக்கிறதா? நம் நாட்டுத் தெய்வங்களைத் திட்டுபவர்களை, அத்தெய்வங்கள் எதுவும் செய்வதில்லை. பக்தனைத்தான் அதிகமாகச் சோதிக்கும். பெரிய புராணத்தைப் புரட்டியவர்கள், பக்திமான்களாகவா முடியும்? சும்மா மிரட்டியல்லவா வைத்திருக்கிறார்கள். பக்திமானாக ஆகிவிடுவாயா? ஆகிவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? மனைவியையே தானம் தரவேண்டும், பிள்ளையையே கறி சமைத்துப் போடவேண்டும் என்றால் எவன் பக்திமானாக ஆவான்? பக்திமான் கிடைத்துவிட்டால், இந்நாட்டுத் தெய்வங்கள் வாட்டி வதைவெடுத்துவிடும்—அந்தத் தெய்வங்களின் திருக்கல்யாண குணம், என் தேவகிக்கும் வந்துவிட்டதா, என்ன! காதலனைத்தான் கடுமையான சோதனைக்காளாக்குகிறாளா?

தமக்கையின் திருமணத்திற்குப் பிறகுதான் தங்கையின் திருமணம் என்று சொல்லிவிட்டாள். அது ஒரு வகையில் நியாயம் என்றால்கூட, என்னைப் பொறுத்த மட்டில் எவ்வளவு அநீதியானது! நான் எவ்வளவு சிக்கலுக்கிடையில் தேவகி தேவகி என்று பிடிவாதமாகக் கதறுகிறேன். அதனால் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறேன்.

ரேவதிக்கு இப்பொழுதே வயது முப்பதிருக்கும். அவள் திருமணம் செய்துகொள்வதென்றால், மணமகனை எங்கு போய்த் தேடி, யார் கொண்டுவந்து சேர்ப்பது? தேவகியைத் தேடி நான் எப்படி வந்தேன்? அப்படி அவளைத் தேடி யாரேனும் வரட்டும்—மணக்கட்டும். அவள் திருமணத்தோடு தேவகியின் திருமணத்தையும் சேர்த்து முடிச்சு போடவேண்டும்!

தேவகிக்கு புராணகாலக் கதைகளில் வரும் கதாநாயகிகள் போல ஆகவேண்டும் என்று ஆசை வந்துவிட்டதா, என்ன! பாதாளலோகம் போய், பவளமாலை கொண்டுவா, நாகலோகம் போய், நாகரத்தினம் எடுத்து வா—கொண்டுவந்தால் மாலையிடுவேன்—இல்லாவிட்டால் உன் தலையைச் சீவிவிடுவேன் என்று கூறிடும் ராஜ

குமாரிகள் போல பேசுகிருள். இப்படிச் சொல்லியிருந் தால்கூடக் கொண்டுவந்துவிடலாம். ஆனுல் ரேவதிக்கு கணவன் கொண்டுவருவதென்பது எப்படி?

ரேவதிக்குத் திருமணமே ஆகவில்லையென்ருல் என் கதை?—நான் இப்படியே திரியவேண்டியதுதாஞ! ரேவதிதான், எனக்குத் திருமணம் தேவையில்லை, சங்கீதம்தான் என் கருத்துணையென்று எத்தனையோ தடவைகள் சொல்லிவிட்டாள். அவள் சங்கீதத்தை பணிந்து, மகிழட்டும். என்னை ஏன் தேவகி வாட்டுகிருள்! அதுதான் புரியவில்லை.

குடும்பம், மயிலும் மானும் நடமாடும் இடம் மட்டுமல்ல, பாம்பும், புலியும் இருக்குமிடமாகும் என்பது போல, நானும் தேவகியும் மட்டுமல்ல, மணமே ஆகாத ரேவதியும், அவளைப் போன்ற வாழாதவரும், வாழமுடி யாதவர்களும் ஏராளம் இருக்கிருர்கள். நான் மயிலையும், மானையும் விரும்புகிறேன். ஆனுல் நான் விரும்புகிற மயிலே, பாம்பையும் மயிலாக்கு என்று கட்டளையிடு கிறது. நான் விரும்புகிற மானே, புலியையும் மாஞக்கு என்று உத்திரவு போடுகிறது. என் செய்வேன்!

ரேவதி வாழாதவள் என்று முடிவு கட்டிவிட்டார்கள். அதஞலேயே, அவள் பெயரில் அபாண்டங்கள் கூறினர் கள் ஊரார். அவளுக்கு மணம் முடித்துத்தான், தனக்குத் திருமணம் என்று கூறுகிருள் தேவகி. இது என்ன சங்கடம்!

இவ்வளவு நேரம் என் பேச்சை உன்னிப்பாகக் கேட் டுக்கொண்டிருந்த பாலன், திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டான்.

"ரேவதி மணந்துகொண்டால், உன் திருமணத் திற்கு வேறு தடங்கலே கிடையாதே!"

"இல்லை, பாலா—எங்கள் திருமணத் தேருக்கு ரேவதிதான் முட்டுக்கட்டையாகிவிட்டாள்!"

"கண்ணு, உன் திருமணம், இனி நிற்காது!"

பாலன் இப்படிக் கூறிவிட்டுப் போய்விட்டான். நானும் அவன் என்ன முடிவில் அப்படிப் போனுன் என்பதை யறிந்துகொள்ள முடியவில்லை.

* * *

பிறகு, இரண்டொரு முறை பாலன் என்னிடம், என் திருமணத்தைப்பற்றிப் பேசினுன். அவன் முகத்தில் தெளிவில்லை.

பாலன், திருமணமாவதற்கு முன்னல் எப்படி இணை பிரியாதிருந்தானே, அப்படி என்னுடன் இப்பொழுது நெருங்கிவிட்டான்.

அவன் என்ன முடிவு செய்தான் என்று பிறகுதான் எனக்குத் தெரிந்தது—தெரிந்ததா? தெரிவிக்கப்பட்டது. முதலில் அந்த அறிவிப்பு ஆத்திரத்தைத்தான் தந்தது.

"என்னங்க, கண்ணன்......"

"என்ன சேதி"

"சேதியா?"

ரேவதி அழுதாள். எனக்குப் புரியவில்லை.

"ஏன் அழுகிறீர்கள்?"

"அழாமல், சிரிக்கவா சொல்கிறீர்கள்?"

"நீங்கள் பேசுவது புரியவில்லை. விளங்கச் சொல்ல வேண்டும்"

"விளங்க நான் என்ன சொல்வது—உங்கள் சினேகிதர் எழுதியே விட்டாரே!"

ஒரு நீண்ட கடிதத்தை என்னிடம் கொடுத்தாள். அந்தக் கடிதம், பாலன் ரேவதிக்கு எழுதியது. அதில் அவன், தன் நண்பனுக்காகத் தியாகம் புரிவதாகவும், அவன் ரேவதியைத் தானே மணப்பதாகவும் குறிப்பிட்டிருந்தான். நான் முதலில் இது வீண் குறும்பு என்று எண்ணினேன். ஆனல், அந்த உருக்கமான கடிதத்தை

ஒரு முறைக்கு இரு முறை படித்த பிறகு எனது நெஞ்சமும் இளகத்தான் செய்தது.

தங்கள் குடும்பத்தைப்பற்றி ஊரார் பேசும் இழிமொழிகளை ஆதாரமாகக்கொண்டு, தனக்கு எழுதப் பட்ட கடிதம் அது—என்றாள் தேவகி கூறினுள்.

இந்தத் தகவல் ரேவதிக்கு எட்டியதும், அவள் என்னிடமே சீறினுள். இதற்கெல்லாம் காரணம் நீங்கள் தான். எங்கள் குடும்பத்திற்கு இருக்கும் கெட்ட பெயர் போதாதென்று, நீங்கள் வேறு புண்ணியம் கட்டிக்கொள்ள வேண்டாம் என்று கடிந்துகொண்டாள். தேம்பித் தேம்பி யழுதாள். அவள் அழுவதைக் காண என்னுல் சகிக்கமுடியவில்லை. வேகமாக வெளியேறினேன். நேராக பாலனிடம் சென்றேன்.

"பாலா......"

"வா, கண்ணு, உட்கார்"

"என் வாழ்வையே பாழாக்கிவிட்டாய்"

"என்ன ?"

"கடிதம் எழுதி புயலைக் கிளப்பிவிட்டாய்"

"மன்னிக்கவேண்டும், கண்ணு, மனப்பூர்வமாக, உனக்காக, அந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்திருக்கிறேன்."

"உன் துணிவு உண்மையானுல் நன்றி செலுத்துகிறேன்—ஆனுல் அந்தத் துணிவு, என் அன்புச் சித்திரத்தின் சீற்றத்தையல்லவா வரவழைத்துவிட்டது ?"

"என் கடிதம், அவர்கள் மனதில் களங்கமேற்படுத்திவிட்டதென்ருல், நான் மன்னிப்பு கேட்கிறேன்"

நான் காற்றுபோல அவ்விடத்தைவிட்டகன்றேன். பாலன் என்ன செய்தானே எனக்குத் தெரியாது. மறுநாளே தேவகியின் முகத்தில் பழைய சிரிப்பை நான் பார்த்தேன். ஆகவே மற்றவைகளைப் பற்றிய கவலை என்னைவிட்டுப் பறந்துசென்றுவிட்டது.

ரேவதி, முன்போல் என்னைப் பார்ப்பதில்லை. இப்பொழுது ஓரக் கண்களால் என்னைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையும், நான் அருகில் வந்துவிட்டால் மறைந்துவிடுகிறது. என்னைக் கண்டால் நாணம் ஏற்படுகிறது. அவள் முகத்தில் உணர்ச்சி மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இந்தப் புதுமை எனக்கு விளங்காத புதிராகவே இருந்தது. ரேவதி ஏன் இப்படி மாறிவிட்டாள்! என்னிடம் கலகலப்பாகப் பேசுவாள் இப்பொழுது பேசுவதில்லை. என்னைக் கண்டாலே உள்ளே சென்றுவிடுகிறாள்! ஏன்? வெட்கமா? வெறுப்பா? வெட்கம், எப்படி இப்பொழுது திடீரென்று ஏற்பட்டுவிட முடியும்? வெறுப்பிற்குக் காரணமும் இல்லையே!

பாலன், அந்தக் கடிதத்தைப்பற்றி நான் கடுமையாக அவனிடம் கேட்ட ஒருவாரம் வரை என்னைச் சந்திக்கவே இல்லை. பிறகு அவன் வழக்கம்போலவே என்னிடம் பழக ஆரம்பித்தான். அவன் முகத்தில் எப்பொழுதும் களிப்பு கூத்தாடிக்கொண்டிருந்தது. அவன் பேச்சில் வழக்கத்திற்கு மீறிய வேடிக்கைகளும், விளையாட்டுகளும் கலந்திருந்தன.

தேவகியைக் காணச் செல்கிறபொழுது அவன் எப்பொழுதும் கூட வருவதில்லை. எப்பொழுதோ ஒரு சமயத்தில் வருவான். அதுவும் என் வற்புறுத்தலின் பேரில் தான் வருவான். இப்பொழுது, அவன் நான் இல்லாமல் கூட, அந்த வீட்டிற்குச் செல்கிறான்.

எந்த ரேவதி அழுதாளோ, அவள் இன்று அவனுடன் சிரித்துப் பேசுகிறாள். எந்த தேவகி ஆத்திரப்பட்டாளோ, அவளே இன்று அவனுடன் அளவளாவுகிறாள்.

எனக்கு அந்த அளவில் மகிழ்ச்சிதான்—எங்கே அந்தக் கடிதத்தால் பெரிய விபரீதங்கள் ஏற்படுமோ என்று எண்ணியதுபோய், இவ்வளவு சுமுகமாக நிலை மாறிற்றே என்பதால்!

ஆனால், ரேவதியும், பாலனும் பழகுவதைப் பார்த்தால், இருவரும் ஏதோ ஒத்துப்போய்விட்டார்கள் என்று

தான் தோன்றுகிறது! அந்தக் கடிதத்தில் கண்டபடி, இருவரும் மணந்துகொள்வது என்ற முடிவின் பேரில் தான் இப்பொழுது இணைந்துவிட்டார்கள் போலும்!

அவர்கள் திருமணம், சீக்கிரமே சம்பவிக்கட்டும்! என் தேவகி என் வாழ்வில் கழிக்கும் இன்பநாள் மிக விரைவாக வரட்டும்!

* * *

இப்படி, என் வாழ்வில் புயலும், தென்றலும் மாறி மாறி அடித்துக்கொண்டிருந்த பொழுதுதான், என் மாமா திடீரென்று வந்துசேர்ந்தார். அவரை அன்று இரவு பார்த்தேன், திடுக்கிட்டுப் போனேன். ஆனால், அஞ்சுகத்தைப் பார்க்கிறபொழுது எனக்கு மிகவும் பரிதாபமாகத் தானிருந்தது.

அவர் ஒரு மாதகாலம் தங்கியிருக்கப் போவதாக அம்மா சொன்னவுடன் நான் அசந்துவிட்டேன். ஆனால் ஏனோ ஒரே நாளில் திரும்பிவிட்டார். வந்த மறுநாள் காலையில் பாலனுடன் ஏதோ பேசினாராம். மாலை அவன் தேடிச்சென்ற பொழுது, அவர் ஊருக்குச் சென்றுவிட்டார். அவர் அப்படிப் போவதற்குக் காரணமே இல்லை.

இப்படிச் சுழலில் சிக்கிய மரக்கலம்போல, என் மனம் தவிக்கும் பொழுது, அந்தச் சந்தேகமுமா வர வேண்டும்!

தேவகியின் உடன் படிப்பவன் நாராயணன். படித்தவர்கள் பழகும் முறையில் களங்கமிருக்காது என்று பெருந்தன்மையுடன் நான் நம்புகிறேன். ஆனால் என் மனதில் ஒரு மூலையில் சிறு சந்தேகம் இருந்துகொண்டு என்னை ஆட்டிப் படைக்கிறது! அவன் கூடப் படிக்கட்டும். வேண்டாமென்று யார் கூறுவார்கள்? அவள் படிக்கிற பொழுது ஏற்படுகிற சந்தேகங்களை விளக்கட்டும். என் காதலிக்கு, படிப்பு விஷயத்தில், அவ்வளவு அக்கறையுடன் உதவி செய்வதற்காக நன்றி செலுத்துகிறேன்.

அவன் அமைதி நிலவும் குடும்பத்தில் ஆந்தைக் குரல் கிளப்புவது போலல்லவா நடந்துகொள்கிறான்.

தினமும், அவனுக்கு இங்கென்ன வேலை? மாலை வரத் தவறியதென்றாலும் அவன் வரத் தவறுவதில்லை. அவன் வருவதற்கு முன்னாலேயே, எந்த வேலை எப்படிக் கிடந்தாலும், மாடிக்கு ஓடி விடுகிறாள். அவளின் ஆசைக் கண்ணனைக்கூட அனுப்பிவிட்டு, இந்த நடுத்தெரு நாராயணனுடன் அவளுக்கென்ன சகவாசம்?

முதலில் தேர்வு நேரத்தில் சேர்ந்து படிக்கிறோம் என்று கூறினாள் தேவகி. தேர்வு முடிந்து ஓய்வு நேரத்திலும் அவன் வந்துகொண்டுதானிருந்தான். ஓய்வு நேரத்தில் அடுத்த தேர்வுக்கு ஆயத்தம் செய்கிறார்களா, என்ன! என் மனம் எத்தனைச் சுமைகளைத்தான் தாங்கும்!

ஒருநாள் என்னுடன் தேவகி வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவளது தாயாரும் உடனிருந்தாள். அந்த நேரத்தில் நாராயணன் உள்ளே வந்தான்.

"வாங்க" என்று அவனை வரவேற்றபடி, தேவகி மாடிக்கு எழுந்து சென்றாள். என்னிடம் எதுவும் சொல்லவில்லை. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அழுதுவிடுவேன் போலிருந்தது. அவளின் தாயார் என்னிடம் எதையெதைப்பற்றியோ பேசினாள். நான் அவைகளுக்கு என்னென்னமோ பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். ஆனால் என் மனம் அப்படியே மரத்துவிட்டது. என் நினைவு மாடியிலேயே இருந்தது. மாடியிலிருந்து சிறு சலனமேற்பட்டாலும் என் செவி அதனை அப்படியே தாவிப் பிடித்தது.

கொஞ்ச நேரத்திலேயே, கலகலவென சிரிப்பு சத்தம் கேட்டது. என் காதுகள் ஏன் செவிடாகியிருக்கக் கூடாது என்று நான் தவித்தேன்.

மாடிப்படிகளில் அவர்கள் இறங்கி வரும் சத்தம் கேட்டது. நான் அங்கிருந்து எழுந்து ஓடிவிடலாமா என்று எண்ணினேன். எண்ணினேனே தவிர, என்னால் எதையும் செய்யமுடியவில்லை. என் கால்களை அசைக்கக் கூட முடியவில்லை!

நாராயணன் ஏதோ கையில் நோட்டுடன் வெளியேறினான். என்னிடம்கூட விடைபெற்றுக்கொண்டுதான் சென்றான். ஆனால் அவனை அப்படியே அடித்துக் கொன்றுவிடலாமா என்றுகூட என் மனம் ஒரு கணம் எண்ணிற்று.

தேவகியின் தாயார் எழுந்து சென்றுவிட்டாள். தேவகி மீண்டும் என் அருகில் வந்து உட்கார்ந்தாள். என் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டு பதறிப் போனாள்.

" கண்ணா, என்ன இது ?"

"......................."

"ஏன், உன் கண்களில் நீர் "

"..................."

" ஐயோ, என்— செய்தேன், நான் ".

அவள் கண்களும் நீரால் நிறைந்துவிட்டது. அவள் குரல் கம்மிவிட்டது. அவள் என் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். என் மனதில் நிறைந்திருந்த ஆத்திரம், அழுகையாகப் பீறிட்டுக்கொண்டு வெளியில் வந்தது.

" ஆண்களே, இப்படித்தான் !" என்றாள்.

" எப்படித்தான் ?" என்றேன்.

" எடுத்ததெற்கெல்லாம் சந்தேகம் "

" சந்தேகமில்லை தேவகி "

" பின்னர் என்னவாம்?"

" சங்கடம்."

" என்ன சங்கடம் ?"

" உன்னையொத்த படிப்பும், பட்டமும் நான் பெறாமல் போனேனே !"

" என்னை மகிழ்விக்கும் முறைகளை நன்றாகப் படித்திருக்கிறீர்கள்—என்னிடமே, என் அருமைக் காதலர் என்ற பட்டம் பெற்றுவிட்டீர்களே !"

வழக்கம்போலவே அந்த உரையாடலுக்கு, 'இச்' சென்ற இன்ப ஒலியோடு, முடிவுரை தந்தாள் தேவகி. நான் திருப்தியுடன் வெளியில் கிளம்பினேன்.

*　*　*

நேராக வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். உள்ளே நுழைந்ததும் என்னை வரவேற்றவள் எங்கள் வீட்டு வேலைக்காரி வள்ளியம்மை.

"அம்மா, அடுத்த தெருவுக்குப் போயிருக்கிருங்க—வந்துடுவாங்க—காபி சாப்பிடுங்க தம்பி" என்று ஒரு டம்ளரில் காபியை எனக்குத் தந்தாள்.

"தம்பி, இந்த வேலைக்கார நாயோட கதையைக் கொஞ்சம் கேளுங்க தம்பி—என் சின்ன மக சிங்காரி தெரியுமில்லீங்க"

"யாரது?"

"அதான் தம்பி, நீங்க போறீங்களே, மேம்படிப்பு படிக்குதே, மூக்குமேலே கண்ணாடி மாட்டிகிட்டு, பட்டு செருப்பு மாட்டி, பகட்டு சேலை கட்டி—அந்தப் பொண்ணு வீட்டிலே வேலை செய்யுது அந்தக் குட்டி"

"அவளுக்கு என்ன?"

"அவளுக்கு என்னவா? ஒட்டாரம் பிடிக்கிரு—அவளுக்கொரு அக்கா இருக்கிரு, அம்மன் கோவில் குத்து விளக்குமாதிரி—அவ கொஞ்சம் ஊனம்—அவளுக்குக் கல்யாணம் ஆனுல்தான் தனக்கும் கல்யாணம்கிரு—அக்கா மேலே இருக்கிற பிரியத்திஞலே இப்படி சொல்ரான்னு நினைச்சுப்படாதீங்க, தம்பி, அவ பெரிய ஆளு—அவ அத்தான் ஒருத்தன், கடல் கடந்த சீமை போயிருக்கிருன்—அவன் மேலே கண்ணு—அவன் வர்ரவரைக்கும் நாளைத் தள்ரதற்கு இப்படி சாக்கு போக்கு காட்டரா—இப்போ ஒரு மாப்பிள்ளை கழுக்கு முழுக்குண்ணு, அரவான் சிலையாட்டமா வாட்டசாட்டமா இருக்கான்—காபி ஓட்டலில் வேலை—மூணுவேளை சாப்பாடு, மாதம் பதினைஞ்சு சம்பளமாம்—கொஞ்சம் நீங்க, அந்தப் பொண்ணுகிட்டே சொல்லி, அந்தக் குட்டியை ஊன்னு சொல்லச் சொல்லுங்க"

"சிங்காரி அவ்வளவு கைகாரியா என்ன!"

"அதை ஏன் கேக்கிறீங்க—அவ பண்ற அழிக் காட்டியம் என்னால் பொறுக்க முடியவில்லை. மாப் பிள்ளையின்னு ஒருத்தனைச் சொல்லிட்டா போதும். அவன் கண்ணு கருப்பா, மஞ்சளா, மூக்கு நீளம் எவ்வளவு, பீடி குடிப்பானா, சிகரெட் குடிப்பானா, வேட்டி கட்டுவானா, வேட்டியே கட்டமாட்டானா, சுருட்டைக் கிராப்பா, சும்மா கிராப்பா, அவன் அது எப்படி, இது எப்படின்னு ......என் உயிரை வாங்கறா"

"பெரிய குறும்புக்காரி போலிருக்கு"

"குறும்போ, குதர்க்கமோ—எனக்குப் பிடிக்கல்லியே நீங்க கொஞ்சம் சொல்லுங்க தம்பி"

வள்ளியம்மை, சிங்காரியைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கையில், எனக்கு தேவகியைப் பற்றிய கவனந்தான் —அவளும், அக்காள் திருமணத்திற்குப் பிறகுதான், தன் திருமணம் என்று கூறுகிறாள். இதிலும் சிங்காரி கையாளும் சூதாக இருக்கமுடியுமோ என்று எண்ணினேன்—மீண்டும் என் மனதில் வேதனை வட்டமிட ஆரம்பித்துவிட்டது.

தேவகிக்கு எந்த அத்தான், எந்தச் சீமைக்குப் போயிருக்கிறான்? அவன் வரவிற்காக இவள் நாளை கடத்தவேண்டும்? அத்தான் சீமைக்குப் போயிருப்பதே காரணமாக இருக்கவேண்டுமா, என்ன! வேறு காரணங்கள் இருக்கக்கூடாதா, என்ன! அந்தக் காரணம் யாதென்றுதான் புரியவில்லை.

அக்காவிடம் அவ்வளவு பிரியம் வைத்திருக்கிற அவள், அவளுக்கு முப்பது வயதாகிறவரை விட்டு வைத்திருக்கக்கூடாதே! என்னிடம், எட்டு வருடங்களுக்கு முன்பே சொல்லியிருக்கவேண்டும். முதலில் படிப்பு முடியட்டும் என்று காரணம் காட்டிவந்தாள்—திடீரென்று இப்பொழுதல்லவா, தமக்கையின் திருமணம் என்று கூறிவிட்டாள்.

தேவகியும், சிங்காரிதானே! பெண்மனம், விடுவிக்க முடியாத விடுகதையாயிற்றே! என்ன காரணம்! என்னை ஒருவேளை இப்பொழுது வெறுக்கிருளா? நாரயணனைச் சந்தித்த பிறகு, தன்னைப்போலவே, படித்த அவன்மீது அவள் பார்வையைத் திருப்பிவிட்டாளா? அப்படி நான் நினைத்தது எவ்வளவு தவறு என்று அன்று உணரும் படி செய்துவிட்டாளே! அத்தகைய சிறு சந்தேகம் என் மனதில் புகுந்தது என்று தெரிந்தவுடன் அவள் அழுதுவிட்டாள். அவளை எப்படிச் சந்தேகிப்பது?

பின் ஏன் திருமணத்திற்கு நாளைக் கடத்தவேண்டும்? அவளுக்கு வயதாகவில்லையா? எனக்கு வய்தாகவில்லையா? உடற்கூறு சாஸ்திரத்தில் ஏதாவது கோளாரு? என்ன காரணத்தால் ஒத்திவைக்கிருள். ஒத்திவைக்க வைக்க, என் பாடல்லவா சங்கடமாகிறது? இந்தச் சங்கடம் அவளுக்குத் தெரியாததல்லவே!

இதோ, இன்னும் கொஞ்ச நேரத்தில் அம்மா வந்து விட்டால் இராமாயணம் ஆரம்பமாகிவிடும்! அப்பா வந்து விட்டால் பாரதமே தொடங்கிவிடும்! தினந்தினம் இத்தகைய சங்கடத்தில் மாட்டித் தவிக்கும் நான் தேவகியிடம் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்பதாக இல்லை.

பாலனிடம் இவ்வளவு துயர சம்பவங்களையும் சொன்னதின் விளைவாகத்தான், அவன் துணிகரமான முடிவிற்கு வந்தான். தான் மணமாகி, அற்புதமான மனைவி வீட்டிலிருக்க, வேருெரு பெண்ணை மணக்கிறேன் என்று முன் வந்தான். அவனைப் பின் தள்ளிவிட்டார்கள். தள்ளி விட்டதுமட்டுமா, அவன் செய்தது, ஏதோ பெரிய மன்னிக்கமுடியாத குற்றம்போலப் பேசினுர்கள்.

உண்மையில் நான் கேட்கிறேன், ரேவதிக்கு வேறு எப்படித்தான் கணவன் கிடைக்கமுடியும்? ஐம்பத்திரண்டு தேசத்து ராஜாக்களை அழைத்து சுயம்வரம் நடத்தவா முடியும்? அன்று என்னமோ தாண்டிக் குதித்தார்கள்— இன்றைக்கு அதே ரேவதி, அவனிடம் குசுகுசுவென்று பேசுகிருள்.

பாலனும் அதற்கப்புறம் நடந்தவைகளை என்னிடம் கூறவில்லை. நானும் கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால் அவன் அடிக்கடி இப்படிக் கூறுவதுண்டு, கண்ணு உன் கல்யாணத்திற்குத் தடையாக இருந்தது நீங்கிவிட்டது. இனி தேவகியும் நீயும் சேர்ந்து முடிவு செய்து கொள்ளுங்கள் என்று. எனக்கு அதன் அர்த்தம் புரிந்தாலும், அவர்கள் திருமணம்செய்து கொண்டாலல்லவா, தேவகி என்னை மணப்பாள்! பாலனும், ரேவதியும் கூடி மகிழ்கிறார்கள் — சரி, ஆனால் வெளிப்படையாகத் திருமணம் செய்துகொள்வது எப்பொழுது? அது அவ்வளவு சுலபத்திலிருக்கிறதா? பாலன் அக்கு தொக்கற்றவனா? அவன் பெற்றோர்கள் ஒப்புவார்களா? மனைவிதான் இடம் கொடுப்பாளா?

இப்படி, எண்ண மண்டலங்களிடையே, நான் அலைந்துகொண்டிருக்கும்பொழுது என் அன்னை உள்ளே வந்தவுடன், 'தம்பி உனக்கொரு கடிதம் இருக்கிறது' என்று கொடுத்தாள்.

அதைப்பிரித்தேன். படித்துக்கொண்டேயிருந்தேன். படிப்பதை நிறுத்தவே இல்லை. ஏன்? அந்தக் கடிதம் என்னை பிரமிப்பில் ஆழ்த்திவிட்டது. அந்தக் கடிதத்தை என் மாமா எழுதியிருந்தார். ஆச்சரியம்! அவர் என்னை, தேவகியை மணந்துகொள்ளும்படி வற்புறுத்தியிருந்தார். அதுமட்டுமல்ல, அஞ்சுகத்திற்கு வேறு மாப்பிள்ளை பார்த்துவிட்டாராம்—மாப்பிள்ளை மதுரையாம்— எம். ஏ. படித்தவனாம்! என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை!

—(●)—

இரண்டாம் பாகம்

காதலி:

எனக்கு, நினைவு தொடங்குகிற நாளிலிருந்து, என்னோடு இணை பிரியாதிருப்பது கண்ணன்தான். என் ஆயுளில் கண்ணனை நான் மறக்கமுடியாது. அவர்மீது நான் வைத்திருக்கும் பாசத்தை எவராலும், குறைக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது.

குழந்தையாக இருக்கும் பொழுதிலிருந்தே, எனக்கு குடும்பம் என்றாலே சலிப்பு—என் அக்காள், விளையாட அழைக்கிறபொழுதெல்லாம், 'அப்பா, அம்மா விளையாட்டு விளையாடலாம் வருகிறாயா?' என்றுதான் அழைப்பாள். எனக்கு அது பிடிப்பதில்லை. அப்பா என்று ஒருவரும், அம்மா என்று ஒருவரும், குழந்தையென்று ஒருவரும். இருக்கும் விளையாட்டுச் சாமான்களையெல்லாம், வீட்டிற்கு வேண்டிய சாமான்களாகவும், மணலைச் சோறாகவும், செங்கல்தூளை குழம்பாகவும், தழைகளை கறிவகைகளாகவும் வைத்து விளையாடுவதை நான் எப்பொழுதும் எதிர்ப்பேன். பள்ளிக்கூட விளையாட்டென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அதிலே நான்தான் ஆசிரியர். என் கண்ணன்தான் சட்டாம்பிள்ளை. மற்றவர்கள் மாணவர்கள். இந்த ஆட்டம்தான் எனக்குப் பிடிக்கும்.

குடும்பம் என்றாலே, எனக்கு பள்ளிக்கூடம்போல் இருக்கவேண்டும் என்று கூறத் தோன்றும். அதில் பெற்றவர்கள் ஆசிரியர்களாகவும், பிள்ளைகள் மாணவர்களாகவும் இருக்கட்டும். அந்தப் பிள்ளைகள் நன்றாகப் படிக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் குடும்பம் என்ற பள்ளிக்கூடத்தில் குதூகலம் இருக்கமுடியும். நெருக்கடி என்ற தேர்தல் வரும்பொழுதெல்லாம், நல்ல முடிவு ஏற்பட முடியும்!

அதனால்தான் நான் படிப்பிலேயே நாட்டமாக இருந்து வந்தேன். கண்ணன் படிப்பை நிறுத்தியதை

நான் மிகவும் வெறுத்தேன். ஒரு மாதம் அவரோடு அதற்காகப் பேசாமல்கூட இருந்தேன்.

அவருக்குப் படிப்பைவிட நானே முக்கியமாகப் பட்டேன். அதனால் நான் பெருமைப்பட்டுக்கொண்டாலும், அவர் முழுப் படிப்பற்றவராகப் போய்விட்டாரே என்று வருந்திடுவேன்.

அவர் என்னை மனதார நேசிக்கிறார். என் முகம் கோணிவிட்டால், அவர் இதயமே கோணலாகிவிடும். அவ்வளவு ஆழ்ந்த அன்பை வைத்திருக்கிறார். அவர் பார்வையில் படுமாறு என்றாவது, என் கண்கள் கலங்கியிருந்தால், அவர் கண்கள் குளங்களாகும். குரல் கரகரத்துவிடும். இதற்காக, நான் அவர் முன்னால் எப்பொழுதுமே சிரித்தபடியே இருந்து விடுவேன். அதனால் அவர் அடிக்கடி, நீ பூத்த ரோஜா—ஒருநாள்கூட மொக்காக இருந்ததில்லை யென்று கூறுவார். அத்தகைய அன்பரை நான் பெற்றிருக்கிறேன் என்பதை எண்ணும் பொழுது, என் உடம்பெங்கும் உணர்ச்சி ஓடி, உவகையை பரப்பும்.

*   *

என் குடும்பத்தை ஏதோ கூரையிழந்த வீடாகவே கருதி வந்தார்கள் ஊரார். ஆனால் அவரோ, எழில் மாடமென்றே எண்ணி வந்தார்.

எங்களை ஊரார், வேசிகள், ஒழுக்கங்கெட்டதுகள் என்று ஏசினர். அவரோ, அந்த வசைமொழிகளைத் தூசுகளெனத் தள்ளியே நடந்தார்.

சாதி கெட்டவர்கள் என்று பேசினர். நான் தேடுவது சாதியையல்ல, என் மனதில் வரும் சஞ்சலத்தையும், சந்தோஷத்தையும் புரிந்து கொள்ளும் ஒரு மங்கையை— அவள் என் தேவகி. ஆகவே அவளை நான் தேடிப் போகிறேன் என்று துணிந்து வந்தார்.

பெற்றவர்கள் எதிர்த்தார்கள். அவர் பின்வாங்கவில்லை. என்னை விட்டுப் பிரியவே இல்லை. சமயம் வந்தால், பெற்றவர்களைப் பிரிந்தாலும் பிரிவாரே தவிர, என்னை விட்டுப் பிரியமாட்டார்.

மாமன் மிரட்டினுர். அவர் மருளவில்லை. அஞ்சுகம் என்ற அழகு ஆயுதத்தை நீட்டியும் பயனில்லை.

அந்த அன்பரை நான் மணக்கப் போகிறேன் என்று எண்ணுகிறேன்; இறும்பூதெய்துகிறேன்.

கண்ணனை நான் மணப்பதில் எனக்கு இருக்கிற மகிழ்ச்சியைவிட என் தாய்க்கு அதிக மகிழ்ச்சி — ஏன்? எனக்குத் தெரியவில்லை. அவர் பெயர் கேட்டாலே, என் தாய் முகம் மலர்கிருள். அவரை நான் மணந்தால்தான், என் தாயின் உள்ளங் குளிருமாம். விரதம் நிறைவேறுமாம்— என்ன விரதமோ?

எனக்குக் குடும்பம் என்பதிலே பற்று அதிகம் ஏற்படாத காரணத்திஞல்தான், கண்ணன் திருமணம், திருமணம் என்று வற்புறுத்திய பொழுதெல்லாம் நான் தள்ளிப்போட்டேன். அதனுல் அவர் நெஞ்சொடியக்கூடாது என்பதற்குத்தான் தக்க காரணமாகத் தேடியெடுத்துச் சொல்லி வைத்தேன்.

முதலில் படிப்பு முடியட்டும் என்றேன். அதுவரைக் காத்திருந்தார். இப்பொழுது தமக்கையின் திருமணம் என்று சொல்லிவைத்தேன். இந்தத் தடவை அவர் மிகவும் வேதனைப்படுகிருர் என்று தெரிகிறது. எனக்கென்னமோ, இப்பொழுது இருப்பதுபோல எப்பொழுதும் வானத்தில் பறந்து திரியும் வெண்புருவாக இருக்கவே ஆசையாக இருக்கிறது. ஐயோ, வெண்புருவாக இருந்தால்கூட, அதிலே, ஆண், பெண் புருக்கள் என்று இணைந்தே பறக்கின்றன. பெண் புருவிற்காக ஆண் புரு இரை தேடுகிறது. பெண் புருவை வேடன் அடித்துவிட்டால், அவனைச் சுற்றிச் சுற்றி ஆண் புரு பறந்து வேடனையே எதிர்க்கிறது! புருவாக இருந்தால்கூட, அங்கேயும் குடும்பந்தாஞ?

எப்பொழுதும், மணமுள்ள மலராகவே இருக்கலாம் என்பது என் அபிப்பிராயம்—ஆனுல் பூக்களிலே மட்டும் ஆண், பெண் இல்லையா? மகரந்தஸ்பரிசம் இல்லாமலா காய் காய்க்கிறது! பூக்களில்கூட குடும்பந்தாஞ?

நான் மணந்து கொள்கிறேன் அவரை. அவரும் அதற்குத் தயார்—ஆனால் அவரின் பெற்றோர்கள் எதிர்ப் பார்களே! பெற்றவர்கள் எதிர்க்கட்டும் — அவர்களை உதறியடித்துவிட்டு மணக்கிறேன் என்று கூறினால் என்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. எப்படியாவது அவர்களையும் ஒப்புக்கொள்ளவைக்கவேண்டும். அதற்காக எவ்வளவு நாட்களானாலும் சரி—கவலையில்லை.

நான் இப்படியே நாளைத் தள்ளிக்கொண்டே போனால் அவர் கதி என்ன? என் வாழ்வுதான் எப்படிப்போவது? இவைகளைப் பற்றியும் சிந்திக்காமலிருக்க முடியுமா? அவர் எனக்காக, நரைதிரை மூப்பு வந்து தாக்கும்வரை காத்திருந்தாலும் எவரும் வியப்படைய வேண்டியதில்லை. அவருடைய அன்பின் ஆழத்தை யறிந்தே கூறுகிறேன்.

நான் அவரை மணக்கவில்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். வேறு பெண்ணை ஒரு நாளும் அவர் மணக்கமாட்டார். ஏன்? என்னைப் பிரிந்தார் என்றாலே அவர் உள்ளம் உலர்ந்து உருக்குலைந்து போவாரே! அவர் மனதில் மிச்ச சொச்சம் அன்பிருந்தால்தானே, இன்னொருவளிடம் அதனைச் செலுத்த! அத்தகைய அன்பின் பிம்பத்தை நான் வாட்டுகிறேன்.

* *

நான் திருமணத்தைத் தள்ளிப் போடுவதற்குக் காரணம், எனக்குக் குடும்பப்பற்று ஏற்படாதது மட்டுமல்ல, வேறு சஞ்சலமும் என் மனதிலே குடிகொண்டிருந்தது. ஊரார், எங்களைக் கண்டபடி திட்டட்டும். அந்த ஏசுதல் மொழிகள் எங்களை என்ன செய்துவிட முடியும்? ஆனால் என் மனமே, என்னைக் குத்திக் கேட்டபடி யிருந்தது. அம்மாவோ எதையும் சொல்லமாட்டேன் என்கிறாள். அந்தக் குடும்ப ரகசியங்களை உணரவேண்டும். அந்த ரகசியங்கள், வெளிப்பட்டால், என் காதல் ராஜ்யத்திற்கு ஆபத்தாக இருக்கலாம் என்று என் தாய் மறைக்கக்கூடுமோ? ஆனால் அவைகளை அறிந்தே யாகவேண்டும்.

இப்படி என் மனதிலே ஒரு உறுதி பதிய ஆரம்பித்தவுடன், நான் திருமணத்தைத் தள்ளிப்போட்டேன். இந்த

தாமதம் அவருக்கு மட்டுமல்ல, என் தாய்க்கும்தான் பிடிக்கவில்லை.

என் தாயை நான் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்கு என்னையறியாமலேயே வேதனை தோன்றும். அவள் முகத்தில் எப்பொழுதும் நான் தெளிவைப் பார்த்த தில்லை. சிரிக்கும் பொழுதெல்லாம், தாயின் சிரமம் தெரியும்; மகிழ்ச்சியிருக்காது. சிரிப்பதற்கே,முயற்சியெடுத்துக் கொண்டு, நடிக்கிற பரிதாபத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

என் தாய் ஏதோ பெரிய ஏமாற்றத்தினால்தான் இப்படி வேதனையே உருவமாக மாறியிருக்க வேண்டும். அந்த ஏமாற்றம் எதிர்பாராத நிலையில் ஏற்பட்டு, அதனை, மக்களாகிய எங்கள் பொருட்டு, தாங்கியிருக்கவேண்டும்.

தாயைப் பற்றி மகள் தெரிந்துகொள்ள முடியவில்லை. தாயும், மகளும் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள். இந்தக் குடும்பத்தில் உண்மை மகிழ்ச்சி எப்படி ஏற்படும்?

குடும்பம், ஒரு தறியில் நெய்யப்படுகிற பட்டுச் சேலை. கணவன், மனைவி என்ற குறுக்கு இழையும், நெடுக்கு இழையும் ஓடினாலும், நன் மக்கள் என்ற ஜரிகை முந்தி வேண்டும். ஆனால் ஜரிகையும், பட்டும் பரஸ்பரம் ஒத்து இருக்கவேண்டும். ஆனால் என் குடும்பத்தில் ஜரிகைக்குப் பட்டைப்பற்றித் தெரியாதே! இந்தக் குடும்பத்தில் எப்படி சுகம் காணமுடியும்?

தாயைப் பற்றி மகள் துப்பறிய வேண்டும். வேதனையான, இந்த துப்பறியும் நாவலை, யார் விரும்புவார்கள்? அதனால்தான் வெளியில் சொல்லிக்கொள்ளமுடியவில்லை. என் தாய் கெட்டவள் என்று ஊர் பேசுகிறது. ஆனால் என் தாய் அப்படிப்பட்டவள் என்று வீட்டிலேயே இருக்கும் என்னால் சொல்ல முடியவில்லை: ஆனால் ஊரார் தூற்றலை ஏற்றுக்கொண்டு நான் துப்பறிகிறேன்.

தாய் மகளிடம் மறைக்கிறாள்—மகளோ, தாயின் இரகசியத்தை அறிய முற்படுகிறாள், அந்த முயற்சியைப் பற்றிய குறிப்புகளை எழுதிப் படித்தாலே, ஒரு சுவையான கதை நூல் படித்த உணர்ச்சி ஏற்படுமே! ஆம், எனக்கே

அந்த முயற்சி ஒரு சமயம் வேதனையைத் தந்தாலும் வேறொரு சமயம் மகிழ்ச்சியைத் தந்தது.

*　　　*　　　*

நான் வீட்டிலுள்ள பழைய சாமான்களையெல்லாம், தாய் வீட்டிலில்லாத நேரத்தில் தேடிப் பார்த்தேன். பழைய பெட்டிகளை யெல்லாம், திறந்து பார்த்தேன்.

பரணைகளில் கிடந்த சாக்கு மூட்டைகளை இறக்கி, அவைகளில் என்ன இருக்கின்றன என்று அலசினேன்.

இதற்கெல்லாம் வேலைக்கார சிங்காரிதான் எனக்குத் துணை—அவளுக்குக் கூட ஏன் இம்மாதிரி செய்கிறேன் என்பது தெரியாது. ஆனால் அவள் நான் இடும் வேலைகளை தட்டவே மாட்டாள். சிங்காரியிடம் எனக்கு அதிக பிரியம்—ஏனெனில் இட்டவேலையை மிகவும் சூட்டிகையாகச் செய்து முடித்துவிடுவாள். சலசலவெனப் பேசிச் சிரிக்கவைப்பாள்.

சிங்காரி, தன் தாயைத் திட்டுகிற பொழுது, நான் அதட்டுவேன். அவள் அடங்கவே மாட்டாள். கொச்சைத் தமிழில் கண்டபடி பேசுவாள். அவள் தானாகவே ஆரம்பித்துவிடுவாள் பேச்சை. நான் நிறுத்தச் சொன்னால் கூட நிறுத்தமாட்டாள்.

"என் ஆத்தா மகா பொல்லாதவ"

"என்னடி, அம்மாவை அப்படிச் சொல்றே"

"அவ பண்றது அப்படிம்மா"

"பெற்றவளை அப்படிச் சொல்லாதே"

"ஏன் பெத்தாளாம்?"

"பெற்ற தனாலேயே திட்டணுமா?"

"அவ ஆசைக்கு என்னைப் பெற்று, அவ அவசரத்துக்கு என்னை வதைக்கணுமா?"

"உன் தாய் உன்னை வதைக்கிறாளா?"

"வதைக்காமே, வாழவா விடுவா"

"ஏண்டி, என்ன செய்ரா உங்க அம்மா?"

"செய்ரா சட்டியும், பானையும்—எனக்குக் கல்யாணம் பண்ணனும்னு உயிரை வாங்கரா"

"கல்யாணம் பண்ணுவதிலே என்னடி தப்பு"

"ஆமாம், எனக்குக் கருமாதி தான் பண்ணனும்"

"சிங்காரி, நீ என்னடி, எழுபது வயது பாட்டிமாதிரி பேசரே—உனக்கு இப்போ கல்யாணம பண்ணிக்கிற வயது வரல்லேயா, என்ன"

"எனக்கு வயது வந்தாச்சு—ஆனல் அந்தப்பாவி, வசவசன்னு புள்ளையும் குட்டியுமா வந்திருக்கிருன்-அந்தச் சண்டாளன் மேலே தான் ஆசை வைச்சேன்"

"யாரவன் ?"

"அவன் தான் என் அத்தான்—முனியப்பன்"

"எங்கிருந்து வந்திருக்கிருன்?"

"மேலச்சீமையிலிருந்து, ஒரு சிரங்கியை கூட்டிகிட்டு, பன்னி குட்டி போட்டமாதிரி, மூணு பொட்டையும், கடாவுமாக வந்திருக்கிருன்"

பேசிக்கொண்டேயிருந்த சிங்காரி அழுதாள். அவள் பேச்சிலிருந்து அவள் ஆசைக்குரியவன் செய்த துரோகத்தால் மிகவும் புண்பட்டிருக்கிருள் என்று தெரிந்தது. என்ன செய்வது? அவள் நடத்த இருந்த குடும்பம் அப்படி நாசமாகிவிட்டது! குடும்பத்தில் பல சந்தர்ப்பங்களில் நினைப்பவை நடப்பதில்லை. எதிர்பாராதவை நடந்து விடுகின்றன. இவைகளை சமுதாய சூதாடிகள் விதி, கர்மம், வேளை, தெய்வ சங்கல்பம் என்று ஆட்டின், கிளாவர், ஸ்பேட், டைமண்ட் என்று நான்கு சீட்டாட்டத்தில் வருகின்றனவே அதுபோல வைத்துக்கொண்டு விளையாடிவிடுகிருர்கள்.

சிங்காரி என்னைவிட வயதில் சிறியவள்—ஆனல் அவள் மிகவும் கெட்டிக்காரி.

என்னைப்போல அவளும் தந்திரமாக நடந்து வந்திருக்கிருள் என்பதையறிய நான் மகிழ்ச்சியடைந்தேன். அவளுக்கு, ஒரு தமக்கை. அவள் என்றைக்குமே, மணக்க

முடியாத மாதிரி ஊனம்! அவள் கல்யாணத்திற்குப் பிறகுதான் தனக்குக் கல்யாணம் என்று நாசூக்காகச் சொல்லி வைத்தாள். ஆனால், அவள் யாருக்காகக் காத்திருந்தாளோ, அவன், மணமாகி பிள்ளை குட்டிகளுடன் திரும்பி வந்தான். அவள் இலவு காத்த கிளியானாள்!

அவள் குடும்பம் என்றாலே கொத்தும் பாம்பாகிவிட்டாள்! அவ்வளவு ஏமாற்றம். அவள் கதையைக் கேட்ட எனக்கு என்னையறியாமலே ஒரு பயம்—என் நிலையும் இப்படி ஆகிவிடுமோ என்ற எண்ணம் தலை தூக்கும் பொழுதெல்லாம் என் மனதிலே, அர்த்தமில்லாத ஒரு சலனம் ஏற்படுவதுண்டு. என்னை நானே தைரியப்படுத்திக் கொள்வேன். என் கண்ணன் என்னைவிட்டு எங்கும் போகமாட்டார்!

இப்படி எண்ணங்களை மோதவிட்டு, அதனால் வேதனையும் சலிப்பும் ஏற்பட்டாலும், என் தாயைப்பற்றி யறியும் முயற்சியில் கொஞ்சமும் சலிப்பு ஏற்படவில்லை.

என் அம்மாவிடமே, நேரில் கேட்கலாம் என்றால், என் நா எனக்கு ஒத்துழைக்க மறுக்கிறது. இரண்டொரு சந்தர்ப்பங்களில், கேட்க நான் முயற்சி செய்தும் தோற்றுப் போனேன். ஆகவேதான், வீட்டுக் குப்பை கூளங்களைத் தேடி, அதன் மூலம் ஏதேனும் துப்பு கிடைக்குமா என்று பார்த்தேன். அதில் நான் தோல்விதான் கண்டேன்.

என் தாய் விபரம் அறியாமல், என்னை அப்படித் தேடுவதைத் தடுத்தாள்.

"தேள் இருக்கப் போகிறது!" என்றாள் ஒரு நாள், நான் பழைய பாத்திரங்கள் இருந்த சாக்கு மூட்டையை அவிழ்த்துக்கொண்டிருந்தபொழுது. தாய் வெளியில் சென்றிருந்த பொழுது, நான் அந்த முயற்சியிலீடுபட்டேன். மீண்டும் திரும்பி வருவதற்குள் எடுத்துவிடலாம் என்ற எண்ணத்தில்—ஆனால், இடையிலேயே தாய் வந்துவிட்டாள். நான் என் நிலைமையைச் சமாளிக்க வெகுபாடு பட்டேன். திருடிய சாமான்களை, போலீஸ் வந்து தேடுகையில், திருடன் தன் வீட்டில் ஒளித்து

வைத்துவிடுகிருன். ஆனால், சில எண்ணங்களை ஒளிக்க மட்டும் முடிவதில்லை! என் தாய் அன்று, மூட்டையை அவிழ்த்துக்கொண்டே யிருக்கும்பொழுது வந்துவிட்டாள். அப்பொழுது என் முகத்தைப் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும்—அவ்வளவு விகாரமாக மாறிவிட்டது!

தேள் இருக்கப்போகிறது என்று தாய் சொன்னது என் செவிகளில் சரியாக விழவில்லை. அந்த ஊரார், என் தாயே, அந்த ஊருக்கு வந்துள்ள தேள் என்றெண்ணியிருந்த நிலையைத்தான் நான் எண்ணினேன். அந்த எண்ணந்தான் என்னை எப்பொழுதும் தேளைப் போல கொட்டிக்கொண்டே யிருந்தது.

எங்கள் வீட்டில் மூலை முடுக்குகளில் கிடந்த பழைய சாமான்கள் அத்தனையிலும் ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டேன். எனக்கு எதுவும் தெரியவில்லை.

தாயைப் பற்றி ஆராய்ச்சி செய்கிற நான், என்னைப் பெற்ற தந்தையைப்பற்றி எதுவும் அறிந்து கொள்ள வில்லை. என் தாய், மிகவும் பக்குவமாக, தந்தை, எங்கோ தூரதேசம் போனவர் வரவே இல்லையென்று சொல்லி விட்டாள். ஆகவே அது பற்றி கேட்பதே இல்லை.

தந்தையாரின் படம் ஒன்றும் கிடையாது. தந்தை யாரின் பெயர் அகிலாண்டம் என்று மட்டும் சொல்லி யிருப்பது என் நினைவில் இருக்கிறது. ஆனால் தந்தை யைப்பற்றி வேறு குறிப்புகள் எதுவும் கிடையாது. என் அக்காவுக்கும், தந்தையைப் பற்றிய நினைவு கிடையாது.

கணவனைப் பிரிந்த என் தாய் தவறி நடந்தார் என்பதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. ஆனால் ஊரார் ஓயாமல் பேசுவதால் எனக்கும் அந்த அநாகரிகச் சந்தேகம் வந்துவிட்டது.

எனக்கு ஒரு யோசனை பட்டது. எங்கள் வீட்டிலிருக்கும் ஆண் துணை, எங்கள் தாத்தா வேலாயுதம் பிள்ளை. அவரைத் தாத்தா என்று நாங்கள் அழைப்போம். ஆனால் அவரும் எனக்குச் சொந்தத் தாத்தா இல்லையாம்! இதுவும் ஊராரின் வம்புப் பேச்சிலே ஒன்று.

என் தந்தை யாரென்று தெரியாது—தாயின் வாழ்க்கையும் இரகசியம் நிறைந்தது. தாத்தாவும் சொந்தமில்லை—இப்படி என்னைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றியே, நான் அறிந்து கொள்ளாமல் உலகத்தையே ஆராய்ச்சி செய்யக் கிளம்பிவிட்டேன்!

என் தந்தையார், இப்பொழுது இருக்கிறாரா, இல்லை, இருந்தால் ஏன் எங்களை வெறுத்துவிட்டார், இல்லாவிட்டால், ஏன் எங்களை விட்டுப்பிரிந்தார், என்ன செய்தார், எப்பொழுது இறந்தார், எங்கு இறந்தார், இவைகளை நான் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு மகளுக்கு, தன் தந்தையைப் பற்றி இந்த விபரங்கள்கூடத் தெரியாதென்றால் அவள் இருப்பதைவிட இறப்பதே மேல்!

என் தாய் ஏன் தன்னைப்பற்றிக் கூற மறுக்கிறாள்—தந்தையின் பேச்செடுத்தாலே பேச்சை மாற்றுகிறாள்—ஊரார் கூற்றுப்படி அவள் ஒழுக்கம் கெட்டவளா, எங்கள் சொத்தும், வீடும் எப்படிக் கிடைத்தன. இவைகளும் நான் கண்டுபிடிக்க வேண்டிய புதிர்கள்!

என் தாத்தாவைப் பற்றிக் கூறும் அவதூறு உண்மைதானா? அவர் யார்? ஏன் அவரைப்பற்றி ஊரார் வேறு மாதிரி சொல்கிறார்கள்? அவர் எங்கள் தாத்தாவாக இல்லாவிட்டால், எங்கள் வீட்டில் இத்தனை யாண்டுகள் இருப்பானேன்?—இவைகளும் நான் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய சந்தேகங்கள்!

* * *

குடும்பத்தில் இரகசியங்கள் இருக்கலாம். ஆனால் இப்படி பயங்கர இரகசியங்கள் கூடாது. மகளுக்குத் தாய் புதிர்-பேத்திக்குத் தாத்தா புதிர்-என்றால் இதில் எப்படிக் குடும்பம் நடத்த முடியும்? குடும்பம் என்பது ஓடும் பஸ் அல்ல—அதில் உள்ள உறுப்பினர்கள், இடம் அப்படியிருப்பதாலே இணைந்து உட்காரும் பிரயாணிகள் அல்ல! இதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

என்னைப்பற்றியே நான் புரிந்துகொள்ளாமல், எனக்கொரு குடும்பம் எதற்கு? என்னை மணக்கிற அவர், என்னைப்பற்றி என்றைக்காவது ஒருநாள் நினைக்கமாட்

டாரா? ஆகவேதான் திருமணத்தை, காலவரையறையின்றித் தள்ளிப்போட்டேன்.

எப்படியாவது என் தாத்தாவிடம் பேசி, விவரங்களைத் தெரிந்துகொள்வது என்று முடிவு செய்தேன். ஆனால் அதற்கு ஏற்ற சமயம் கிடைக்கவில்லை.

* *

என் தமக்கைக்கோ, இதுபற்றிய கவலையே இல்லை. தானுண்டு, தன் காரியங்கள் உண்டு என்று போய்விடுவாள். அதுவும், பாலன் வேறு இப்பொழுது புதிய உறவு கொண்டுள்ளார். அந்த உறவுதரும் வெதுவெதுப்பில், தன்னைப்பற்றிய நினைப்பே இன்றி இருக்கிறாள்.

என் சகோதரியென்பதற்காக, அவள் செய்யும் தவறுகளை நான் மறைக்கமாட்டேன். என் கையிலே புண் ஏற்பட்டுவிட்டால், ஐயோ, என் கைப்புண்ணாயிற்றே என்று யாரும் மறைப்பதில்லை. அப்படித்தான், நான் என் தமக்கையின் தவறையெடுத்துக் காட்டியிருக்கிறேன்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னாலேயே, அவள் ஒரு காதல் நாடகம் ஆடினாள். நல்லவேளை, அந்நாடகம், வெறும் காகிதத்திலேயே தொடங்கி காகிதத்திலேயே முடிந்தது. நான் ஆரம்பத்தில் தடுத்தேன். அவள் என்னை எதிர்த்தாள். அவளே பின்னால் வருந்தினாள். அந்தக் கடிதக் காதலன், கல்யாணம் என்றவுடன், தன் காதலைச் சுருட்டி மடக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டான்.

அதே முறையில்தான், பாலன் எழுதிய கடிதத்தை நான் கண்டித்தேன். அவளும் என்னிடம் காட்டினாள். அழுதாள். தேற்றினேன். கண்ணனிடம் சீறினேன், எல்லாம் நடந்தது.

ஆனால், இப்பொழுது பாலனுடன் அவள் கொஞ்சுகிறாள்—குலாவுகிறாள்—இது எங்கே போய் நிற்குமோ நானறியேன்! பாலன் உண்மையில் மிகவும் நல்லவர்—அவரைப்பற்றி நம்பிக்கை எனக்குண்டு? ஆனால் அவர்

மணமானவர். நான் முதலில் எதிர்த்ததற்குக் காரணமே அதுதான். அவர்கள் போக்கைப் பார்த்தால், என் ஆராய்ச்சிக்கு இன்னுமொரு புதிய அத்தியாயம் சேரும் போலிருக்கிறது!

இப்பொழுது தந்தை, தாய், தாத்தா—இவர்களைப் பற்றி ஆராய்ச்சி தொடங்கியுள்ளேன். இனி, தமக்கை பற்றியும் ஆராய வேண்டி வருகிறது! கல்லூரியில் படிக்கச் சென்றேனே நான், இந்தக் குடும்பக் கல்லூரியிலே படித்து, ஆராய்ச்சி செய்திருக்கலாம் போலிருக்கிறது! அத்தனை அரிய கலைகள் இங்கு உள்ளன!

* * *

என் உள்ளமே, ஒரு ஆராய்ச்சிக்கூடம்போல இருக்கிற நேரத்தில்தான், எனக்கு ஒரு துப்பு கிடைத்தது. ஒருநாள், காலையில் நான் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தேன். என் தாயுடன், யாரோ ஒரு ஆண் பேசுங்குரல் கேட்டது. நான் என்ன பேசுகிறார்கள் என்று உற்றுக் கேட்டேன். தெளிவாகக் காதில் எதுவும் விழவில்லை.

நான் அவர்கள் பேசிக்கொண்டிருந்த அறையை எட்டிப் பார்த்தேன். ஐயோ, என் தாய், யாரோ ஒருவரின் நெற்றியை மெதுவாக வருடிக்கொண்டிருந்தாள். என்னால் அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்கவில்லை! ஓடினேன். என் அறையில் படுத்தேன். புரண்டேன், புலம்பினேன். புழுவாய்த் துடித்தேன். எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. அந்த ஆசாமி யார், அவன் எங்கு வந்தான், ஏன் என் தாய் அவனைக் கட்டிலில் கிடத்தினாள், நெற்றியைத் தடவினாள், அன்பாகப் பார்த்தாள், ஆசையோடு பேசினாள்—என்னால், இந்தக் கேள்விக் கணைகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் இதயம் வெடித்து, இரத்தப் பிரளயமே நடந்துவிட்டது போலாகிவிட்டது. மீண்டும் அந்த அறையின் பக்கம் சென்றேன். அங்கே அப்பொழுது அந்த ஆசாமியில்லை. என் தாய் மட்டும் அழுதுகொண்டிருந்தாள்.

வெளியில் எட்டிப் பார்த்தேன். அப்பொழுதுதான் அந்த ஆசாமி எங்கள் வீட்டு வாசலைத் தாண்டிச் சென்றார். ஆள் அடையாளங்கூட என்னால் பார்த்துக்கொள்ள

முடியவில்லை. திண்ணையில் உட்கார்ந்திருந்த தாத்தாவும் கண் கலங்கியிருந்தார்.

நான் என்ன செய்வேன்? இந்த இரகசியப் படுகுழியில் நானே புதைந்து போகக்கூடாதா? ஏன் இப்படி, மனதைப் பிளக்கும், புதிர் நடைபெறவேண்டும்? அமைதியான வாழ்வில் காற்றடிக்க ஆரம்பித்தது—இப்பொழுதோ சுழல் காற்றல்லவா வீசுகிறது!

* * *

அன்று முழுவதும் நான் யாருடனும் பேசவில்லை. ஆனால், என் முகத்தை மட்டும், சாதாரணமாக வைத்துக் கொள்ள வெகு பாடுபட்டேன்.

கண்ணன் வந்தார், அவரோடும் கலகலப்பாய் பேசவில்லை. அக்கா, ஏதேதோ வேடிக்கையாகப் பேசினாள். நான் சரியான பதில் தரவில்லை. சிங்காரி, துடுக்காக என்னிடம் பேசினாள். நான் கண்டிக்கவும் இல்லை—அவள் பேசியது காதில் விழுந்ததாகவும் காட்டிக்கொள்ளவில்லை.

அன்று இரவு, சாப்பிட அழைத்தாள் என் தாய். அவள் திரைச்சித்திரம்போல இருந்தாளே தவிர, உயிருள்ள உருவமாகவே இல்லை!

இரவெல்லாம், எனக்குத் தூக்கமில்லை—பலவித நினைவுகள்—அந்நினைவுகள் என்னைச் சித்திரவதை செய்தன.

நாட்கள் ஓடிக்கொண்டே யிருந்தன. என் மனதில் சஞ்சலம் நிறைந்து வழிந்துகொண்டே யிருந்தது.

* * *

சிங்காரி என்னிடம் வந்தாள். அவசரம் அவசரமாகச் சொன்னாள். நான் சிரித்துவிட்டேன்.

"புது மாப்பிள்ளை வந்திருந்தான் அம்மா"

"எங்கேடி?"

"பொண்ணு வீட்டுக்கு"

"மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு வராம, எங்கே போவான்—எந்தப் பெண் வீட்டிற்கு, எந்த மாப்பிள்ளை?"

"இந்தப் பொண்ணுக்குத்தான், மாப்பிள்ளை வந்தான்"

"மாப்பிள்ளை பிடித்திருந்தானு?"

"ஓ, மைசூர் காட்டெருமை மாதிரியிருக்காம்மா— பேரு சங்கிலிக் கருப்பன்—வேலே, தட்டு கழுவுகி தர்பார் ராஜா—எப்படியம்மா, மாப்பிள்ளை?"

"என்னடி, மரியாதையில்லாமே, வாய்த்துடுக்காய் ...."

"போம்மா, இந்த எருமையை நான் கட்டிக்கணுமாம் —எங்க வீட்டிலிருக்கிற எருமை சொல்லுது!"

இப்படி அவள் பேசிவிட்டு, வீடு கூட்டச் சென்று விட்டாள். நான் மாடியிலிருந்து கீழே இறங்கி வாசற் படிப் பக்கம் வந்தேன்.

* * *

அப்பொழுதுதான், தபால்காரன் தந்த கடிதத்தை திண்ணையிலிருந்த தாத்தா வாங்கினுர். அதை நான் வாங்கிப் பிரித்தேன். அது, திருமண அழைப்பிதழ். அந்தத் திருமண அழைப்பிதழைப் படித்ததும், எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது.

கண்ணனையே மணப்பது என்று இருந்த அஞ்சுகத்தை திடீரென்று வேறு ஒருவருக்குத் திருமணம் செய்து வைக்க எப்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள், அதுவும் அவரது மாமன், பிடிவாதமாக இவருக்குத்தான் அஞ்சுகத்தைக் கொடுப்பது என்று இருந்தாரே! ஏன் அவர் அப்படி மாறிவிட்டார்!

அஞ்சுகத்தை மணக்கப்போவது வேறு யாருமில்லை. என்னுடன் படித்த, நாராயணன்தான். என்னேடு எப்பொழுதும் அவன் இருப்பதைப் பார்த்த கண்ணன் கூட சந்தேகப்பட்டார். ஆனுல், நாராயணன் அவர் சந்தேகப்பட்ட மாதிரியில்தான் என்னுடன் ஆரம்பத்தில் பழகினுர். நான் கண்டித்துவிட்டேன். என்னிடமிருந்து வாங்கிச்சென்ற, புத்தகத்திலேயே, காதல் கடிதம் எழுதி

யனுப்பினர். நான் அதற்குப் பதிலை நேரிலேயே கூறினேன். அவர் அதற்குமேல் என்னிடம் காதல் பேச்சு பேசவில்லை. ஒரு பெண், ஒரு ஆணோடு தாராளமாகப் பழகினலே, உடனே இப்படி கதை கட்டிவிடுகிருர்கள்—இந்தக் கொடிய வதந்தி பரப்பும் குணம் ஒழியும் நாள் எந்நாளோ?

அந்த நாராயணனுக்குத்தான் அஞ்சுகத்தைத் தருகிருர்கள்! கண்ணன் மிகவும் மகிழ்ச்சியடைவார். ஆனல் அவரின் பெற்றேர்கள் வேதனைப்படுவார்கள். எங்கள் திருமணம் நடந்துவிட்டது என்ருல், இமயமலைக்கும், பசுபிக் கடலுக்கும் திருமணம் நடந்துவிட்டதுபோல்தான் வியப்பார்கள்!

ஆனல், இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை—கண்ணனைக் கேட்கலாமென்று காத்திருந்தேன். அவரும், என்னைப்போல ஆச்சரியப்பட்டாரேயன்றி வேறு எந்த விளக்கமும் தர முடியவில்லை.

எனக்கு, இந்த ஆச்சரியமான முடிவிற்கு, காரணம் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆசை பலமாக வந்துவிட்டது.

"ஏன், உங்க மாமா இப்படி மாறிவிட்டார்".

"அவரே எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிருர்"

"என்னவென்று......"

"நான் உன்னையே மணக்கவேண்டுமாம்"

"என்மேல் அவ்வளவு அக்கரையா"

"அக்கரையில்லை, இந்தப் பழம் புளிக்கும் என்ற கதையைப் படித்திருப்பாரல்லவா—அந்தக் கதைப்படி காரியம் நடத்திவிட்டார்"

"உங்க மாமா, பலே ஆள்தான் போலிருக்கு!"

"அவர் அகிலாண்டமாயிற்றே—அண்டசராசரங்களையும் பைசாவுக்குப் பைசா வட்டிபோட்டு, ஆட்டிவைப்பவராயிற்றே!"

அவர், அகிலாண்டம் என்றவுடன், என் இதயம், புதிய வேகத்தில் சுற்ற ஆரம்பித்துவிட்டது. ஆம், அவருடைய மாமாவின் பெயரும் அகிலாண்டம். என் தந்தையின் பெயரும் அகிலாண்டம்! தந்தை அகிலாண்டந்தான், மாமா அகிலாண்டமா? இந்த எண்ணம் என் மனதில் புகுந்தவுடன் என் கண்களும் சுற்ற ஆரம்பித்து விட்டன.

அவருடைய மாமன் வந்திருந்தார் என்று சொன்ன அன்றுதான், எங்கள் வீட்டில், ஒரு புதிய ஆசாமி வந்திருந்தார்; கட்டிலில் கிடந்தார். தாயின் தடவலால் சுகம் கண்டார். அந்தக் காட்சியை நான் கண்டு மனம் நொந்து போனேன். என் எண்ணங்கள் வெந்து போயின. அவர் வீட்டிற்கு வந்திருந்த அவர் மாமாதான் என் வீட்டிற்கும் வந்திருந்தவர் என்று ஒரு கணம் நினைத்தேன். என் தலையே சுற்ற ஆரம்பித்துவிட்டது.

அவரும் அகிலாண்டம், இவரும் அகிலாண்டம்! அவர் இங்கு வந்து திரும்பிய பிறகேதான் மனம் மாறியிருக்கிறார்!

ஐயோ, அது உண்மையாக இருந்துவிட்டால், எங்களை இவ்வளவு இழிவிற்கும், ஏளனத்திற்கும் ஆளாக்கிய அவரை, என்ன செய்வது? இத்தனை யாண்டுகளுக்குப் பிறகு, அவர் அப்பா என்று வந்தால், என்னால் அவரைக் கட்டிப் பிடித்து அழ முடியாது. அவரைத் திட்டுவேன — தேள் எனக் கொட்டுவேன்—வாட்டுவேன்—வதைப்பேன்.

பிரிந்திருப்பதற்கு எது காரணமாக இருந்தாலும் சரி, மூன்று பெண்களின் மானத்திற்கே உலை வைத்த உத்தமர் அவர்! அவரைச் சும்மாவிடமுடியுமா? ஏன் என் தாயைத் தள்ளி வைக்கவேண்டும்—பெற்ற மக்களைக் கூடப் பார்க்காமல் இத்தனை யாண்டுகள் ஓட்டவேண்டும்?

இரண்டு அகிலாண்டங்களும் ஒன்றேயாகிவிட்டால், அகிலாண்டத்தை நான் சும்மா விடமாட்டேன். இன்றே எங்கள் தாத்தாவைக் கேட்கிறேன். அவர் உண்மையைச் சொல்லாவிட்டால், தாயையே கேட்கிறேன். அவளும்

சொல்லாவிட்டால், நேரே போய், அந்த அகிலாண்டப் பிள்ளையையே கேட்கிறேன்.

இனி நான் விடமாட்டேன். சமுதாயத்தில் சொரித் தவளைகளாக எங்களைக் குதிக்கவிட்டு விட்டு, அவர் மட்டும் தாமரைத் தடாக ஓரத்தில் அந்திநேரத்தில் ஆனந்தமாகச் சுற்றி வருவதா?

தாத்தா வந்துவிட்டார்—அவரைக் கேட்கிறேன். அவர் தட்டுத் தடுமாறினாலே கதை புரிந்துவிடும்.

"தாத்தா"

"ஏனம்மா"

"வட்டியூர் தெரியுமா, உங்களுக்கு"

"தெரியும்"

"வட்டியூர் வரதராசம்பிள்ளை மகன் அகிலாண்டம் பிள்ளை தெரியுமோ?"

"ஏனம்மா, இந்தத் திடீர் கேள்வி"

"தாத்தா, நீங்கள் சொல்லப் போகிறீர்களா? நானே தெரிந்து கொள்ளட்டுமா?"

அவர் கண்கள் கலங்கிவிட்டன, அவர் வாய் குழறி விட்டது. இனி அவரிடம் பேச்சு என்ன இருக்கிறது? அவரை விட்டுவிட்டு நேராக என் தாயிடம் சென்றேன்.

"அம்மா—ஆம், இல்லையென்று பதில் சொல்ல வேண்டும். அன்றொரு நாள், பட்டப்பகலில் வெளியறையில் கட்டிலில் படுத்திருந்தவர் அகிலாண்டம் பிள்ளை தானே?"

"என்ன?"

"அம்மா, நேராகப் பதில் சொல்லு--அவர் அகிலாண்டம் பிள்ளைதானே?"

"ஏன்?"

"சொல்லமாட்டாய்—சொல்லக் கூடாது—இத்தனை நாள் மறைத்து வைத்ததை எப்படிச் சொல்வாய்—அவன் தான் எங்களைப் பெற்று இத்தனை பழிகளுக்கும் ஆளாக்

கிய பாதகன் என்று எனக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியப்படுவாய்—ஆனால் தெரிந்துவிட்டது—இனி மறைக்காதே—தந்தையைப்பற்றி மகளுக்குச் சொல்ல லாம்—சொல்லம்மா, சொல்லு''

நான் உரக்கக் கூவினேன். என் தாயோ, என் வாயைப் பொத்தினாள். அவளும் பேசவில்லை. எப்படிப் பேசுவாள்—அழுகைதான் அவள் வாயை அடைத்து விட்டதே! என்னை, என் தாய் வேண்டிக்கொண்டாள். இத்தகைய அன்பின் இலக்கியத்தைத்தான் ஊரார் வேசியென்றனர். அப்படிப் பேசுவதற்கு இடம் கொடுத்த வர் அவர்—என் தந்தை!

தாய், இனி மறைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, உண்மைகளையெல்லாம் சொல்லிவிட்டாள். விதவையை, விருந்தாக்கிக்கொண்டார் என் தந்தை—ஆனால் அது வெளியில் தெரியக்கூடாது என்பதிலும் வெற்றி பெற்றுவிட்டார். விதவையைத் தொட்டார்—முத்தமிட்டார்—மகிழ்ந்தார்—இரண்டு வைரங்களைப் பெற் றெடுத்தார்—அப்பொழுது விதவையென்ற வீணுரை தடுக்கவில்லை. ஆனால் சமூகத்திற்கு அஞ்சி ஊரை விட்டே விரட்டினார்.

இந்தப் பழைய சம்பவம் என் நெஞ்சை தினமும் அரித்துத் தின்ன ஆரம்பித்துவிட்டது.

சமூகம், எவ்வளவு சாதாரணமானது என்பதை அவருக்குக் காட்டவேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்துவிட்டது.

என் காதல், எதிர்காலம், இன்பவாழ்க்கை இவைகள் எனக்குத் துச்சமெனப்பட்டன. சமூகத்தின் பெயரால், ஒரு பெண்ணின் வாழ்வையே, இழிவும், ஏளனமும் குடி கொண்ட பாழும் மண்டபமாக்கிவிட்ட கொடுமைக்குப் பதில் கொடுமை செய்தாக வேண்டும் என்ற உறுதிப் பாடே தலை தூக்கி நின்றது.

விதவையை மணக்க விடவில்லை சமூகம்—ஆனால் விதவை, இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிற வரை கருப்புத்திரை கட்டி, முரட்டு ஆணுக்குப் பாதுகாப்பு

அளித்துவிட்டது. பிரிந்த பிறகோ, அந்த விதவையை விரட்டி விரட்டியடித்திருக்கிறது.

இப்பொழுது, அந்த ஓரவஞ்சனை கொண்ட சமூகத்திற்கு ஒரு நல்லபாடம் கற்பிக்கவேண்டும்—நான் விடப்போவதில்லை. பழி வாங்கியே தீருவேன். நான் பெண் என்ருலும், பெண் மனத்தைச் சாகடித்துவிட்டு, 'பேய்' மனத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிறேன். ஆட்டி வைக்கிறேன், என் தந்தை அகிலாண்டத்தை—எதை, இருபதாண்டுகளுக்கு முன் செய்யப் பயந்தாரோ, அதை, அதைவிட பயங்கரமானதை செய்ய வைக்கிறேன். அப்பொழுது இந்த சமூகத்தையும் பார்க்கிறேன். இந்தச் சண்டாளத் தந்தையையும் பார்க்கிறேன்.

* * *

விதவை மணத்தையல்ல, கணவனை விட்டு, விவாக விடுதலை பெற்று வேறு திருமணத்தை அப்பா அகிலாண்டம் செய்ய வேண்டிவரப்போகிறது! ஆம், அந்நிலையை உண்டாக்குகிறேன். அதுதான் என் இலட்சியம், வாழ்க்கை—எல்லாம்!

அஞ்சுகம் என் சகோதரி. என்னைப் போல பெண் இனம். இருந்தாலும், அவள் வாழ்வில், நான் குறுக்கிட வேண்டியிருக்கிறது! தந்தைக்குப் பாடம் புகட்ட வேறு வழியில்லை. என் செய்வது? அஞ்சுகத்தின் அழுகையில்தான் அப்பா அகிலாண்டத்தின் பழிவாங்கு படலம் அமைகிறது!

நான் என்ன செய்வேன்?—எனக்கே தெரியாது. ஆனல் நிச்சயம், அவர் அழுவார், துடிப்பார், கதறுவார். அத்தகைய காரியத்தை நான் செய்யப் போகிறேன். அஞ்சுகத்தின் திருமணம் முடியட்டும்—பிறகு, அவள் அழுவாள், அவள் கணவன் எங்கிருப்பார், பார்ப்போம்.

இந்தக் குழப்பத்தில் என் கண்ணனை நான் மறக்க முடியவில்லை. அவர் கதி என்னுவது? அதைப்பற்றி சிந்திக்கவே என்னல் முடியவில்லை. நான் என்ன செய்வேன்? சமூகத்தோடு போர் தொடுக்கத் தீர்மானித்துவிட்டேன். போருக்குக் கிளம்பும் போர்வீரன், களத்திற்குச் செல்

லும் பொழுது, எவ்வளவு காரியங்களைத் தள்ளி வைத்து விட்டு நடக்கிருன். அப்படித்தான் நானும் நடக்க வேண்டும்.

கண்ணன் நினைவு வந்துவிட்டால் என் நினைவு மாறி விடும். இனி அவர் கவனத்தையே நான் குறைத்துக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, அவரோடு பழகு வதையே நிறுத்திக்கொள்ள வேண்டும். அது திடீரென்று முடியக்கூடிய காரியமா, என்ன! அவரே, என்னை வெறுக் கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலொழிய வேறு வழியில்லை. அந்த வழி எப்படி ஏற்படும்? ஆம், அவர் என் மீது கொண்ட சந்தேகத்தை வளர்க்கவேண்டும். நான் போட் டிருக்கும் திட்டத்தின்படி, என் வாழ்வை நான் முறித்துக் கொள்கிறேன். என் மனத்தை மரத்துப் போகச் செய்து விட்டுத்தான் காரியத்தில் இறங்கியிருக்கிறேன். இனி கண்ணன் சந்தேகத்தை வளர்ப்பதா கடினம்?

என் பேனவைத் திட்டி, பல ரக காதல் கடிதங்களை எழுதினேன். என் கையெழுத்தை மாற்றி, யாராரோ, எனக்கு எழுதியிருந்தவைபோல அவைகளைக் கண்ட இடங்களில், அவர் பார்வையில் படுமாறு போட்டு வைத் திருந்தேன்.

கண்ணன், வழக்கம்போல் வந்துகொண்டுதானிருந் தார். அவர் பார்வையில் நான் எதிர்பார்த்தபடி ஒரு கடிதம் தென்பட்டது. அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துச் சிரித்தார். அதில் ரங்க நாதன் என்று கையொப்பமிட்டிருந்தது.

"இந்த ரங்கனுக்கு எவ்வளவு பேராசை--என் தேவகி யையே தட்டிக்கொண்டு போய்விடப் பார்க்கிருன்" இப்படி அவர் சொன்னவுடன், நான், 'தேவகியைக் கண் டால், யாருக்கும்தான் ஆசைவரும். ஆனல் அந்தத் தேவகிக்கு ஒருவர்மீது தானே ஆசையிருக்கிறது!' என்று கூறுவேன் என்று எதிர்பார்த்தார். ஆனல் அவர் திடுக் கிடும் மாதிரியில் நான் பதில் சொன்னேன். "தகுதியுள்ள வன், தட்டிக்கொண்டு போனல், யாரால்தான் தடுக்கமுடி யும்?" என்று. திகைத்துவிட்டார்.

தோழி:

சுந்தரி யென்ற பெயர்தான் எனக்கு—சுந்தரமான வாழ்க்கை எனக்கில்லை. ஆனல் சுந்தரமான கணவன் உண்டு. ஏன் எனக்கு இந்த இளம் வயதிலேயே இவ்வளவு சலிப்பு ஏற்பட்டுவிட்டது என்று எனக்கே புரியவில்லை.

அவர் என்னிடம் எவ்வளவோ பிரியமாக நடந்து கொள்கிருர். ஆனல், அந்தப் பிரியம், வெறும் நடிப்பு என்றுதான் நான் கருதுகிறேன். அவரைப்பற்றி நான் எப்பொழுதும் சந்தேகிக்கிறேன். அவர் நடத்தையில் எனக்கு நம்பிக்கை ஏற்படவே இல்லை.

அவர் அப்படி என்ன செய்கிருர்? கோபிகாஸ்திரி களிடையே உலவும் கண்ணனு, அகலிகை வீடு தேடிச் செல்லும் இந்திரனு, சப்த ரிஷி பத்தினிகளை வேண்டி, தன் மனைவியிடமே கேட்ட அக்கினியா என்ருல் என்னல் பதில் சொல்லமுடியாது. அவர் எங்கோ, தகாத சகவாசம் செய்கிருர் என்று மட்டும் என் மனம் சொல்லிக்கொண்டே யிருக்கிறது. அவர், இந்த சந்தேகம் பொல்லாதது என்று பல தடவைகள் கூறியிருக்கிருர். ஆனல் நான் எண்ணத்தை மாற்றிக்கொள்ளவே இல்லை.

அப்படி அவர்மீது சந்தேகம் கொண்ட நான் அதற்கு கையாண்ட முறை அதைவிட மோசமானது. அவரை நான் கண்டிக்கவில்லை. அவர் செய்வதாக, நான் நம்பி யிருந்த, தவறுகளை எடுத்துக் காட்டி, தடுக்க முயற்சிக்க வில்லை. அவரை நான் பட்டினி போட்டேன். பட்டினி யென்ருல், அடுப்பங்கரைவேலை நிறுத்தம் என்று எண்ண வேண்டாம்.

இரவு நேரங்களில்தான், பள்ளியறை மறியல் நடக் கிறது என்ருல், விடிந்துவிட்டால் போதும். அப்பாடா, குடும்பமாம், குடும்பம்! அத்தை பொறித்துத் தள்ளு வாள். மாமா முணுமுணுத்துக்கொண்டே யிருப்பார்.

சுண்ணும்பு அறையில் பகல் முழுவதும் கிடப்பதுபோலத் தான் அங்கு இருக்கமுடியும்.

குடும்பம், குடுகுடுப்பாண்டி போட்டிருக்கும் ஆடை போல, ஒரே ஒட்டுபோட்டுத்தாஞ இருக்கவேண்டும். நிமிடத்திற்கு நிமிடம், நடக்கிற காரியங்கள், ஒன்றுக்கு ஒன்று நேர்விரோதமானவையாக இருக்கும். திட்டுகிற மாமி, ஒருசமயம் தட்டிக்கொடுப்பாள். அதட்டுகிற மாமா, அன்பாகப் பேசுவார். இந்த நேரத்தில் அவரோ எரிந்து எரிந்து விழுவார். அவர் அன்பாகப் பேசும் பொழுது, மற்ற இருவரும் கடிந்து கொள்வார்கள்.

நான் அவரை சந்தேகிக்கிறேன் என்பதை யறிந்ததுமே, அவருக்குச் சங்கடமாக இருந்தது. அந்தச் சங்கடத்தைப் பல நாட்கள் என்னிடம் சொல்லாமலிருந்தார். பிறகு மெது மெதுவாக என்னிடம் சொல்லவும் ஆரம்பித்தார்.

* *

ஒரு நாள் இரவு, அவர் சாப்பிட்டானதும், நானும் உண்டு, எல்லாவேலேகளேயும் முடித்துக்கொண்டு, படுக்கையறையினுள் சென்றேன். அவர் முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது; கண்கள் கலங்கியிருந்தன. அந்தத் தோற்றத்தைப் பார்த்து என்ஞல் சும்மா யிருக்கமுடியவில்லே. அவர் அருகில் சென்று அமர்ந்தேன். கலேந்து கிடந்த அவர் தலேமயிரை நான் மெதுவாகக் கோதிவிட்டு என் புடவை முனேயால் அவரது கண்ணீரைத் துடைத்தேன். அவர் சிணுங்கிடும் குரல் கேட்டது. நானும் கலங்கிவிட்டேன்.

“ஏன் இப்படி?”

“உன் கொடுமையை என்ஞல் தாங்க முடியவில்லே, சுந்தரி”

“நான் கொடுமை செய்கிறேஞே?”

“மனேவியே கொடுமை செய்தால் கணவன் என்ன செய்வான்? தேம்பிடுவதைத் தவிர வேறு மார்க்கம் என்ன?”

"நீங்கள் இன்று புதுமையாகப் பேசுகிறீர்கள்—நான் உங்களுக்குக் கொடுமை செய்கிறேனு—அல்லது நீங்கள் என்னைக் கொடுமை செய்கிறீர்களா?"

"என்ன, நானு உன்னைக் கொடுமை புரிகிறேன்—ஆச்சரியம்—நான் தினமும் அழுகிறேன். சுந்தரி—உன் அன்பிற்கேற்ற வகையில் நடந்து கொள்ளத் தெரியவில்லையே என்று தினமும் எண்ணி எண்ணி ஏங்குகிறேன்"

"நான், அன்பை மழையாகப் பொழிந்தாலும், அது போதவில்லையென்று தானே அலைகிறீர்கள்?"

"அப்படி, நீ எண்ணிக்கொண்டு என்னை வாட்டி, வதைக்கிறுய்?"

"அப்படி நானுக எண்ணிக்கொண்டேனு? உங்கள் குணம் எனக்குத் தெரியாதா?"

"சுந்தரி, உன்னிடம் சொல்வதற்கென்ன? நீ நினைப்பதுபோல ஒரு காலத்தில் காட்டுப் பன்றி போலத் திரிந்ததுண்டு. ஆனுல் இன்று திருந்திவிட்டேன். திருந்தி விட்டவனை மீண்டும் மீண்டும் சந்தேகிப்பதால், அவனை மறுபடியும் பழைய நிலைக்கு விரட்டுவதாகத் தான் முடியும்"

"அந்தக் கண்ணனேடு போகாதீர்கள் என்று எத்தனை தடவை சொல்வது? ஏன் அவரோடு நீங்கள் போகவேண்டும்"

"அவன் என் நண்பன்"

"அவர் நண்பராக இருக்கட்டும்—அவருக்கு நண்பர்களாக இருப்பவர்களிடமெல்லாம் நீங்களும் நண்பராக வேண்டுமா?"—அவர் சிரித்துக்கொண்டே, அருகில் அமர்ந்திருந்த என்னை அப்படியே அள்ளிக்கொண்டார். அவர் கழுத்தை என் கரங்களால் பின்னிக்கொண்டேன். இரவு கழிந்தது.

* *

கண்ணனுடன் அவர் நண்பராக இருப்பதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனுல் கண்ணன், அந்த இரு

சகோதரிகள் வீட்டிற்குப் போய்வருவதை நான் அறிவேன். அவர்கள் இருவரையுமே எனக்கு நன்ருகத் தெரியும். ஊரார் தூற்றுவதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. மணமாகாத இளம் வாலிபர், பருவ மலர்ச்சியோடு இருக்கும் பெண்கள் உள்ள வீட்டிற்கு அடிக்கடிப் போவானேன்? இவர்கள் உள்ளத்தில் களங்கம், கள்ளத்தனம் இல்லாவிட்டாலும் சூழ்நிலை மிகப் பயங்கரமான விளைவுகளைக் கொண்டு வந்து விட்டுவிடும். இதைக்கூட உணராமல், இவர் ஏன் அங்கு போகவேண்டும் என்றுதான் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இவர் அப்படியொன்றும் மனதைக் கட்டிக்காக்கும் மகா, திடசித்தக்காரரல்ல. மெழுகு நெருப்பில் பட்டால் தான் இளகும். இவர் மனம் அதைவிட மோசமான மெழுகு. நெருப்பு, படவேண்டியதில்லை. நெருப்பைப் பார்த்தாலே இளகிவிடும். இவரைப்பற்றி, இவர் வீட்டிற்கு மணமாகி வந்த பிறகு தெரிந்துகொண்ட உண்மைகள் எனக்கு அந்த முடிவைத்தான் தந்தன.

சின்னஞ்சிறு வயதிலேயே, இவர் கெட்டுவிட்டார் என்பது மட்டும் வெட்டவெளிச்சம். அதுவும், ஊரறிய கெட்டுப்போனுர் என்பது அவர் பெற்ருேர்களுக்கே தெரியும். அப்படித் தெரிந்த பிறகுமா, மணம் புரிந்து கொண்டேன் என்று கேட்கலாம். மன்னிக்கவேண்டும். அவரைப் பற்றி எனக்குத் தெரியாது, மணந்து கொள்கிறபொழுது. ஆனுலும், தவறுவது மனித இயற்கை--அதைத் திருத்துவதுதான் மனித முயற்சியென்று நான் கருதுகிறேன்.

தவறே செய்யாதவர்கள், உலகில் நிறைந்துவிட்டால், உலகத்தில் வேலையே கிடையாது. குடும்பம் என்பது, தவறும், தவறு நீக்கும் முயற்சியும் கலந்த ஒரு நீரோட்டம், அந்நீரோட்டத்தின் வேகத்தில், இரண்டு வகையான நீரும் போட்டியிட்டு ஓடும். ஆனல் எது வெல்லும் என்று யாராலும் சொல்ல முடியாது. அப்படித்தான் நான் கருதிக்கொண்டு போராடுகிறேன்.

அவரை மணந்துகொண்டு, இந்த வீட்டிற்கு வந்த பிறகு, அவரது, விருப்பு வெறுப்புகளை மிகத் தெளி

வாகப் புரிந்துகொண்டேன். என் கணவனைப்பற்றி, நான் விமரிசனம் செய்யாமல் வேறு யார் செய்யமுடியும்? எனக்குத்தான் அந்த உரிமை சொந்தம். என் கணவர் என்னை மிகவும் அன்பாகத்தான் நடத்திவருகிறார். என் விருப்பமறிந்து நடந்து கொள்ளப் பெரிதும் முயன்று வருகிறார்.

ஆனால், அவர் விருப்பப்படி நான் நடக்கக்கூடாது என்று திடமாக முடிவு செய்துவிட்டேன். ஏனெனில், அவரது, கெட்ட நடவடிக்கைகள் குறைய அதுதான் வழியென்று நான் திட்டமிட்டுக்கொண்டேன். அவருக்கு யானைத்தீ என்பார்களே, அத்தகைய வியாதியென்று சொன்னால் பொருந்தும். உணவுப் பசியைப்பற்றி நான் கூறவில்லை. உணர்வுப் பசியைத்தான் குறிப்பிடுகிறேன். அவர் நேரம், இடம், சந்தர்ப்பம், சூழ்நிலை இவைகள் எதற்கும் மதிப்பு கொடுப்பதில்லை. பசியெடுத்த போதெல் லாம், புசிக்கவேண்டும் என்ற மனித வளர்ச்சியின் முதல் கட்டத்திலிருந்த நிர்வாணக் கொள்கை கொண்டவர். இந்தக் கொள்கை நிறைவேற்றத்திற்கு ஆரம்பத்தில் நான் ஒத்துழைத்தேன். பிறகு வரவரக் குறைத்துக் கொண்டேன். இப்பொழுதோ, எதிர்ப்பே செய்கிறேன்.

அவர், மிகவும் பச்சையாக இந்த விஷயங்கள் பற்றி என்னிடம் பேசிப் பார்த்தார்—கெஞ்சினார்—மன்றாடினார். வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன்—சிவனாரின் சென்னி சிவந்திருந்ததாம்—ஏனெனில், பார்வதியை அழைத்த பொழுது, அவள் மறுக்க அவள் காலில் விழுந்து கெஞ்சினாராம்—அவள் மெல்லடிபட்டு சிவந்தது என்று பள்ளிக் கூடத்தில் ஒரு அடிக்கு பொருள் சொல்லிக் கொடுத்தார் தமிழாசிரியர்—அதுவும் பெண்களையெல்லாம் வெளியில் போகச் சொல்லிவிட்டு—பிறகு உடன் பயிலும் மாணவர் களின் குறிப்பேடுகளை வாங்கி நாங்கள் எழுதிக் கொண் டோம்—அந்த மாதிரி, அவர் மண்டியிட்டுக் கேட்டார்—அப்பொழுதும் விட்டுக் கொடுக்கவில்லை.

பெண்மனம் இளகினாலும், இளகிக் கொண்டே போகும் — இருகிவிட்டாலும் இருகியே போய்விடும். இரண்டு தீவிர முனைகளின் சந்திப்பிடமே, பெண்மனம்.

அப்படித்தான், மணந்த ஒரு ஆண்டு காலத்தில் அவர் விருப்பத்திற்குமேல், விருப்பம் வளர, நான் வழி வகுத்தேன். இப்பொழுது அவர் வேதனைப் புழுவாக நெளிய விட்டு வேடிக்கை பார்க்கிறேன்.

இதுதான் அவரைத் திருத்தும் மார்க்கம் என்று நான் மனப்பூர்வமாக நம்பினேன். இப்படிச் செய்தால் தான் அவர் அடங்கி நடக்கக்கூடும் என எதிர்பார்த்தேன்.

* * *

இப்படிப் படுக்கையறைப் போராட்டம் எங்களுக்கிடையில் நடந்துகொண்டிருக்கும்பொழுதுதான், அடுப்படிச்சண்டையும் ஆரம்பமாயிற்று. என் மாமிக்கும் எனக்கும் ஒத்துக்கொள்வதே இல்லை. அவர் வாய் ஓய்வதில்லை. ஏதாவது சொல்லிக்கொண்டேயிருப்பாள். நானும் துடுக்காகச் சொல்லி விடுவேன். அது சந்தர்ப்பங்களில் மிகச் சூடான வார்த்தைகளாகிவிடும். உடனே மாமா சண்டைக்கு வந்துவிடுவார். பிறகு இந்த வழக்கு, அவரிடம் போகும். அவருக்கு இம்மாதிரி சண்டைகள் வந்துவிட்டால், காது செவிடாகிவிடும்! அதாவது செவிடுபோலவே நடந்துகொள்வார். இப்பொழுது, என்மீது ஏற்பட்ட எரிச்சலைத் தீர்த்துக் கொள்ள இத்தகைய சண்டைகள் வாய்ப்பளித்தன. எனக்கும், அவரோடு, போராட்டத்தை தொடர்ந்து நடத்த, இத்தகைய குடும்பக் கோணல்கள் ஊக்கமளித்தன.

என் மாமியும், மாமனும் மிருகமாகவே மாறிவிட்டார்கள். நான் அவர்கள் வீட்டில் நுழைந்த நாளிலிருந்தே, அவர்களுக்குத் துன்பந்தானும்-இந்தச் சனியன் வீட்டிற்கு வந்து சேர்ந்தது, அன்றையிலிருந்து ஒரே துடைப்புத்தான்—தொட்டது துலங்கவில்லை யென்று என் மாமி சொல்லாத நாளில்லை. என் வாய் மட்டும் சும்மாயிருக்குமா? நான் வருவதற்கு முந்தியெல்லாம், இங்கு வைரமும், கோமேதகமும் கொட்டிக் கிடந்தது—இப்போதான் எல்லாம் துடைச்சுக்கிட்டுப் போய்ட்டுதாக்கும்—பிஞ்ச கூடை, தேய்ந்த முறத்திடம் பெருமை பேசுதாம்

என்று என் பாட்டில் நானும் சொல்லி வைப்பேன். அன்று வீட்டில் யுத்தந்தான் — இதைத்தான் 'இல்லற மல்லது நல்லறமன்று' என்று சொல்கிருர்கள் போலும்!

எங்களிடையே, இந்தக் குழப்பம் வளரவளர, அவர் வீட்டிற்கு வருவதைக்கூடக் குறைத்துக் கொண்டார். எனக்கு மேலும் கோபந்தான் வந்தது.

ஒரு நாள் கண்ணனின் தாயார் வந்தார்கள். அவர் களிடம் என் ஆத்திரத்தை யெல்லாம் கொட்டியளந்தேன்.

அவர் மீது ஆயிரம் குற்றங்களைச் சாட்டினேன். மாமா, அத்தை ஆகியோர் மீது இலட்சம் பழிகளைச் சுமத் தினேன். வீட்டில்தான யாருமே யில்லையென்ற தைரியத் தில் என் மனதிலுள்ளவைகளை உள்ளபடியே, சொன் னேன். வெளியில் சென்றிருந்த என் அத்தை, நான் பேசிக்கொண்டிருந்த பொழுதே வந்து விட்டிருக்க வேண்டும் போலிருக்கிறது. நான் பேசிய பேச்சுக்கள் அத்தனையும் கேட்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நான் பேசிய வாசகங்களையே திருப்பிக் கூறி சண்டை வளர்க்கவேண்டியதில்லை. நம் வீட்டுக் கதையை எப்படி நான் ஊராரிடம் கூறலாம் என்பதே என் அத்தையின் கேள்வி. நமக்குள் ஆயிரம் இருக்கும், அடுத்த வீட்டுக் காரியிடம் என்ன சமாதானப் பேச்சு என்று முதலில் தொடங்கி, என்னை இந்த வீட்டைவிட்டே துரத்தியடித்து விட்டுத்தான் மறுவேலை யென்ற சபதத்தில் முடிந்தது.

நான் ஊமையா என்ன, நானும் எதிர்த்து எதிர்த்துப் பதில் சொன்னேன். இப்படி எங்களுக்குள் பேச்சு முற்றிக் கொண்டிருக்கும் பொழுது மாமாவும வந்து சேர்ந்துவிட் டார். அவரும் அத்தையோடு சேர்ந்துவிட்டார். எனக்கு அழுகையும் வந்துவிட்டது, ஆத்திரமும் வந்துவிட்டது. இருந்தாலும் விடவில்லை. அவர்கள் வாயடைத்துப் போகும்வரை நான் பேசினேன்.

அவர் வந்தார். அப்பொழுதுதான் சோவென மழை பெய்து விட்டது போன்ற அமைதி--ஆனல் அத்தையின வாய் மட்டும் முணுமுணுப்பை நிறுத்தவில்லை. மழை விட்டும், தூவானம விடவில்லையே! அவர் தனது தாயா

ரிடம் என்ன நடந்தது என்று வினவினர். அவ்வளவு தான், அத்தை அழுகையும், விம்மலும் சேர்ந்து, என் வாயாடித்தனத்தை எடுத்து விளக்கினர்கள். அவர்கள் ஏதோ வாயில்லா பூச்சிக்கள் போலவும், நான் வாயே உருவமாக உள்ளவள் போலவும்!

நானும், அவரிடம் கூறினேன். கண்ணனின் தாயார் வந்ததும், அந்த அம்மாவோடு பேசிக்கொண்டிருந்ததையும் கூறினேன். ஒட்டுக் கேட்பது எவ்வளவு அநாகரிகமான பழக்கம் என்று இடித்துரைத்தேன். இவர்கள் தான் கணவனும், மனைவியும் அறையில் பேசிக்கொண்டால், அதை ஒட்டுக்கேட்பார்கள்—மனைவி, கணவனுக்கோ, கணவன், மனைவிக்கோ கடிதம் எழுதியிருந்தால் அவைகளைப் படித்து நெட்டுரு போட்டுக் கொள்வார்கள். சின்னஞ் சிறுவர்களாயிற்றே, வயதிற்கேற்ப நடந்துகொள்கிருர்கள் என்று ஒதுங்கிப்போகும் கண்ணியப் போக்கு இவர்களிடம் ஏது என்றேன். அவருக்கும் ஆத்திரம் வந்துவிட்டது.

"சுந்தரி, நாக்கை யடக்கடி நாயே" என்ருர். அவர் அன்றுதான் என்னை 'அடி' பட்டமிட்டு அழைத்தார். அதுமட்டுமல்ல, கன்னத்தில் ஒரு அறையும் அறைந்துவிட்டார். ஐயோ, அந்த அறை பட்ட கணத்தில் எத்தனை ஆயிரம் எண்ணங்களை எண்ணியிருப்பேன் தெரியுமா? எங்கள் வீட்டுத் தோட்டத்துப் பாழுங்கிணறுதான் உடனே என் மனதில் வந்து நின்றது. அதன் பக்கத்திலிருந்த புளிய மரம் என்னைப் பார்த்துப் பயங்கரமாக சிரித்தது. ஊர்க்கோடியிலே உள்ள வெள்ளைக் குளம், சிங்காரத் தோப்பிற்குள்ளிருக்கும் வண்ணன் குட்டை, ஊருக்கு இரண்டு மைல் தொலைவில் ஓடும் தேனுறு—இப்படி இவைகள்தான் மாறி மாறி என் மனதைக் குடைந்தன. என் உயிரை மாய்த்துக்கொள்வதென்று முடிவு செய்தேன். அதற்கு அவை மார்க்கம் காட்டின.

* * *

அப்பொழுது, ஒரு பெண் உள்ளே வந்தாள். அவளைப் பார்த்ததும், அவர் முகத்திலிருந்த கோபம் மறைந்துவிட்டது. சிரிப்பு, அவரை யறியாமலே, அவர்

உதட்டில் வந்துவிட்டது. புதியவர் வரும்பொழுது, குடும்பத்தில் பூசலிருப்பதையா காட்டிக்கொள்வார்கள்? நானும் என் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, வரவேற்றேன்.

"சுந்தரி, இந்த அம்மா யார் தெரியுமா?"

"எனக்குத் தெரியவில்லையே!"

"பாட்டு வாத்தியார் ரேவதி தெரியாதா?"

"ஆமாம், பக்கத்து வீட்டுப் பர்வதம் படிக்கிற பள்ளியில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறாள்"

"அதே ரேவதிதான் நான்"

"உட்காருங்க"

"இவள்தான் என் மனைவி சுந்தரி"

"மகிழ்ச்சி—இந்த வழியாக பக்கத்துத் தெரு பங்கஜத்திற்கு பாடம் சொல்லிக்கொடுக்கப் போனேன். அப்படியே, இது உங்கள் வீடென்றார்களே, பார்க்கலாம் என்று வந்தேன்"

"தினமும் வாருங்கள்—பழகினால் சுந்தரியின் குணம் உங்களுக்குத் தெரியும்"

இப்படிச் சொல்லிவிட்டு, அவர் போய்விட்டார். ரேவதி பேசுவதில் வெகு சாமர்த்தியக்காரி என்பது ஆரம்பத்திலேயே எனக்குப் புரிந்துவிட்டது. நானும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தேன். அவள் என்னிடம் விடைபெற்றுப் போகிறபோக்கில்தான் தெரிந்துகொண்டேன், அவர் அவளுக்கு அதிக நாட்களாக அறிமுகம் என்பது—எனக்குச் சந்தேகம் வளரத்தொடங்கியது.

மேலும், ரேவதியை நான் நேரில் பார்த்ததில்லையே தவிர, அவளைப்பற்றி எனக்கு அதிகம் தெரியும். அவளிருக்கும் பள்ளிக்கூடத்தில், இருபத்தொரு ஆசிரியைகள் வேலை பார்க்கிறார்கள். அவர்களில், இவளைப்பற்றி மட்டுமே, ஊரார் பேசினார்கள். அவள்தான், மங்கம்மாளின் மூத்த பெண் என்றாலே அதிலே எல்லாம் அடக்கம்!

ஆகவே எனக்கு மிகவும் பலமான யோசனை உண்டாகிவிட்டது. இவருக்கும், இவளுக்கு எந்தவிதத்தொடர்பு ஏற்பட்டிருக்கும் என்று என் மனம் என்னைக் கேட்டபடியே இருக்கிறது. நான் அதைத் தெரிந்துகொள்ளவே முடியாதா? அவரிடம் நேரில் கேட்டுவிடுவது என்று முடிவு செய்தேன்.

அவர் ஒருநாள் இரவு நெடுநேரம் கழித்து வந்தார். நான் கோபம் துளியும் காட்டாமல், அவருக்கு உணவு படைத்தேன். பிறகு அவர் படுக்கையறைக்குச் சென்றார். நான் வேலைகளை விரைவில் முடித்து, அவர் தூங்குவதற்கு முன்னாலேயே, அறையினுள் நுழைந்தேன். எனக்கென்று தனியாக உள்ள கட்டிலில் உட்காராமல், அவர் கட்டிலில் உட்கார்ந்தேன். அவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார். அவர் என் அருகில் நகர்ந்து அமர்ந்து மெதுவாக, என் தலைமயிரைக் கோதிவிட்டபடி, பேசினார். நானும் மனங்குழைந்து பேசினேன் என்பது அவர் நினைப்பு!

" சுந்தரி, இந்தமாதிரி நாம் மனமொத்திருந்து இரண்டாண்டுகள் இருக்குமல்லவா ?"

" உப்பில்லாத பண்டம் குப்பையில்தானே "

" திருக்குறள் படிக்கிறாயோ? ஊடல் உப்புபோல, ஆகவே ஊடல் இல்லாத கூடல், உப்பில்லாத உணவு!"

"உப்போ, ஊடலோ, குறலோ, மருளோ—எனக்குத் தெரியாது"

" சுந்தரி, மகா கெட்டிக்காரி—என் மனைவியைப்பற்றி எனக்குத் தெரியாதா—என்ன"

"அதனால்தான் என்னையே ஏமாற்றப் பார்க்கிறீர்களா—என்ன"

" உன்னை ஏமாற்றவா—நானா—இல்லையே, சுந்தரி"

" ரேவதிதான் சொன்னாளே "

அவர் முகம் திடீரென சிவந்துவிட்டது. அவர் உடலெங்கும் ஓடிக்கொண்டிருந்த எல்லா இரத்தமும்,

அவரது முகத்திற்கே வந்து சேர்ந்துவிட்டதுபோலாகி விட்டது. அடுத்த நிமிடத்தில், அவர் முகம் வியர்த்து விட்டது.

"ரேவதி......சொ.......ன்......ளு......ளா...என்ன ?"

"என்ன சொல்லியிருப்பாள்? உள்ளதைத்தான்"

"உள்ளதை......"

"பின்னே இல்லாததையா சொல்லியிருப்பாள்"

அவர் குமுறுகிருர் என்பதைப் புரிந்துகொண்டேன். உண்மைகளை வாங்கும் முறை இதுதான் என்று மேலும் விடாப்பிடியாகப் பேசினேன்.

"சுந்தரி, அவள் சொல்லியதை என்னிடம் சொல் லேன்"

"வீணுக ஏன் என்னிடம் உண்மையை மறைக்கிறீர் கள்—ஒரு பெண்ணிற்கு இருக்கிற துணிவுகூட ஒரு ஆணுக்கில்லையென்றுல், எனக்கு வெட்கமாக இருக் கிறது"

"சுந்தரி, என்னை மன்னித்துவிடு—அவள் என்ன சொன்னுள் என்பதை மறைக்காமல் சொல்லிவிடு"

"நானே சொன்னுல்தான் உங்களுக்குப் புரியும்— அவள் ஊரில் கச்சேரிகள் செய்ய நீங்கள் ஏற்பாடு செய்ய வில்லையா ?"

இப்படி நான் கூறியதும், அவர் ஏதோ பெரிய பாரத்தை கீழே உருட்டி விட்டு விட்டு, நிமிர்ந்து நிற்பவ ரைப்போல என்னைப் பார்த்தார். உடனே, நான் தொடர்ந் தேன்.

"கச்சேரி ஏற்பாடு மட்டுந்தானு—திருமண ஏற்பாடு... ...."

"ஐயோ..........."

"ஏன் பதறுகிறீர்கள்—அவளது சகோதரி தேவகி யின் திருமண ஏற்பாட்டை........"

"அப்பாடா......"

அவர் இன்னமும் திருப்தியடைந்தவர் போலிருந்தார். நான் இனி வேடிக்கை கூடாது என நிறுத்திக்கொண்டு. அவரை வாட்டத்தொடங்கினேன். அவருடைய அணைத்த கரங்கள் என்னை நெருங்கிப் பிடித்தன.

"உண்மையைச் சொல்ல பயப்படாதீர்கள்—ரேவதி சொன்ன மற்ற விஷயங்களை நீங்கள் சொல்லப் போகிறீர்களா—இல்லையா?"

"வேறு விஷயம் எதுவும் கிடையாது சுந்தரி"

"சுந்தரியை ஏமாற்றுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல"

"சுந்தரி என்னைத் தொல்லைப்படுத்தாதே"

அவர் செல்லக்கோபத்தோடு, என் கன்னத்திலடித்து முத்தமிட்டார். முத்தத்திற்கு பதில், பதிலுக்கு அவருக்குக் கிடைத்ததுபோல், அவர் வார்த்தைகளுக்கு வார்த்தை கொடுத்தபடி இருந்தேன்.

"தொல்லையா? எது—ரேவதி சொன்னதா?"

"சுந்தரி, என் கோபத்தைக் கிளறுதே!"

"கோபமா, குதூகலமா!"

இப்பொழுது அவர் என்னை அணைத்த கரங்களை பின் வாங்கிக்கொண்டார். அவருக்கு அதிக கோபம் வருகிறது என்பதைப் புரிந்துகொண்டேன்.

"சுந்தரி, என்னை அனலாக்காதே—அதன் ஜுவாலையை நீ தாங்கமாட்டாய்!"

"எதையும் தாங்கும் இரும்பு இதயத்தைத்தான் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டார்களே—சொல்லுங்கள்—அதையும் கேட்கிறேன்"

"என்னை விடமாட்டாய்"

"உங்களை விட்டு விட்டு, நான் என்ன செய்வது?"

"தூங்குவது"

"தூங்குவது என்று சொன்னீர்களே—தூக்கு போட்டுக்கொள்வது என்று சொல்லலாம்"

"அதிகப் பிரசங்கி, பேசாதே"

"உங்களிடம் பேசாமல் வேறு யாரிடம் பேசுவது—நீங்கள் உண்மையைச் சொல்லப்போகிறீர்களா, இல்லையா?"

"சுந்தரி—உண்மையைச் சொல்கிறேன்—கேட்டுக்கொள்—நான் ரேவதியை மணந்துகொள்ளப்போகிறேன்"

"என்ன........."

"அதுவும் உன்னுல்தான்"

"என்னுலா"

"ஆமாம்"

என் ஆத்திரத்தை என்னுல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் கட்டிலில் போய் குப்புறப் படுத்துவிட்டேன். அங்கிருந்த தலையணையில் என் முகத்தைப் புதைத்தபடி அழுதேன்—எவ்வளவு நேரம் அழுதேன் என்று எனக்குத் தெரியாது.

நான் கண்ணனுடைய தாயாரிடம், என் கணவனைத் திருடனென்று கூறியபொழுது, அந்த அத்தை, அவன் திருடனுனதற்குக் காரணம் நீதான் என்றவுடன் சிரித்தேன்—இதோ, அவரே சொல்லிவிட்டார், அவரது போக்கிற்கு நான்தான் காரணமென்று. இனி நான் என் செய்வேன்?

அவர் போக்கு மாறவேண்டுமென்ருல், என் போக்கு மாறவேண்டும். குழந்தைக்கு நோய் என்ருல், தாய் மருந்துண்பதுபோல!

நான் மாறிவிட்டாலும் அவர் மாறவேண்டுமே—என் தவறுதான், அவரது இந்த நிலைக்குக் காரணமென்ருல்; என் தவறைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. நான் அப்படிப் பிடிவாதமாக நடந்துகொண்டால் அவர் தவறு செய்யமாட்டார் என்றல்லவா எண்ணிக்கொண்

டேன். என்ன பைத்தியக்காரத்தனம்! என் பிடிவாதம் தான், அவரை என்னைவிட்டு வெகு தொலைவிற்கு விரட்டி விட்டதா? ஐயோ, நான் இனி என்ன செய்வேன்?

விடியும் வரை, என் மனதிலே ஒரு பெரிய சுழற் காற்று புகுந்து ஓயாது அடித்துக்கொண்டேயிருந்தது.

விடிந்ததும், என் மனதிலேயும், இருள் போய் விடிந்ததுபோன்ற ஒரு ஒளி தென்பட்டது.

* * *

காலையில் அவரை நானே எழுப்பினேன். என் கோபம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது. இரவு நடந்த நிகழ்ச்சியை நான் கட்டாயமாக மறக்க முனைந்தேன். அதுதான் முடியவில்லை. அவரும், எதுவும் வேற்றுமை காட்டாமல் நடந்துகொண்டார்.

பகல், கடையிலிருந்து திரும்பி வந்ததும், வழக்கத்திற்கு மாறாக அதிக உபசரிப்புகள் புரிந்தேன்.

அன்று இரவு, என் கட்டில் காலியாகவே இருந்தது. அவர் கட்டில்தான் பளு தாங்கமாட்டாமல் விடியும்வரை பெருமூச்சுவிட்டது.

நான், அவரிடம் அதிக அன்பாக, அதுவும் அளவிற்கு மீறிய அன்பாக நடந்துகொண்டேன். அவர் என்னிடம் பேசும்பொழுதெல்லாம் அவர் குரல் தழதழத்தது. அதிலிருந்து, என் அன்பு வெள்ளத்தில் அவர் மூழ்கித் திளைக்கிறார் என்று புரிந்துகொண்டேன். என்னிடம் அந்த அன்பு கிடைக்காதென்றுதான் அவர் வேறிடம் ஓடினார் என்று நான் கருதினேன் இப்பொழுது—ஆடுகளைப் பார்த்திருப்பீர்கள்—ஒரு இடத்தில் பசுமையான புல்வெளி இருந்தால் அங்கு மேய்ந்துகொண்டிருக்கும்—திடீரெனத் தலையைத் தூக்கிப் பார்க்கிறபொழுது, தூரத்தில் புல்வெளி தெரிந்தால், அங்கு ஓடும். தூரத்துப் பச்சையென்றுகூட கேலியாகச் சொல்வார்கள். சில மாடுகள், புல்தரையொன்று கிடைத்துவிட்டால், அங்குள்ள புல் அத்தனையும் தின்று தீர்த்துவிட்டு, ஒரு மரத்தடியில் படுத்துக்கொண்டு, தின்றதை யெல்லாம் மீண்டும்

வாய்க்குக் கொண்டு வந்து, நன்ருக, மீண்டும் மென்று உள்ளே தள்ளும். பிறகுதான் வேறு புல்தரையை நாடும். என் கணவனை நான் ஆடென்றும் சொல்லவில்லை, மாடென்றும் குறைகூறவில்லை. என்னை நானே குறை கூறிக் கொள்கிறேன். நான்தான், காலியான புல்தரையாகி விட்டதாக நடந்துகொண்டேன். புல் மேயமேய வளரும் என்ற இயற்கை நியதியைக்கூடப் பொய்யாக்கிக் கொண்டேன். வேறு புல்தரை தேடுகிறபொழுது நான் ஆத்திரப்பட்டு என்ன செய்வது? நானும் செழுமையான புல்தரை என்று காட்டிக்கொள்வது தவிர வேறு வழியில்லை!

அவர் என்னைப் பார்க்கிறபொழுது, மிகவும் பரிதாபத்தோடு பார்த்தார். ஒருநாள் என்னை அணைத்துக்கொண்டு, தேம்பித் தேம்பி யழுதார். ஏனே தெரியவில்லை.

அவர் விருப்பத்திற்கு மாருக நடக்கக்கூடாது என்ற முடிவில் நானிருப்பதால், ரேவதி வந்தால் அவளிடம், மிகவும் பரிவோடு நடந்துகொண்டேன். அவளோடு, நாடகம், சினிமா இவைகள் பார்க்கக்கூடச் செல்வேன். அவள் அடிக்கடி வருவாள். அவளை, நான் முறை வைத்துக்கூட அழைக்கத் தொடங்கிவிட்டேன். அக்கா என்றே அழைத்துவந்தேன். ஆனல், அவளை என் வீட்டில், உரிமை உள்ளவளாக நுழையவிட முடியாது—முடியும் என்று யார்தான் கூறமுடியும்!

இப்பொழுது, என் அத்தை, சண்டை போடுவது கிடையாது. என்னிடம் பிரியமாக நடந்துகொள்ள ஆரம்பித்தது கண்டு நானே ஆச்சரியப்பட்டேன்,

"அவளுக்கு, எங்களைத் தவிர வேறு யார் இருக்கிரு—தாய், தகப்பன் எல்லாரையும் விட்டுவிட்டு, நம்மை நம்பித்தானே வந்திருக்கிரு" என்று என் அத்தை, அடுத்த வீட்டுக்கார அம்மாளிடம் கூறிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். என் மனம் பூரித்தது. இத்தகைய தங்கக் குணம் கொண்ட மாமிமார்களல்லவா, ஒவ்வொரு குடும்பத்திலும் தலைமை வகிக்க வேண்டும். குடும்பம் என்ற வைரத்திற்கு, இத்தகைய குணங்கொண்ட அத்தையென்ற பட்டை சேர்ந்துவிட்டால், அந்த ஒளியில் மயங்காதார் யாரே!

இந்த முறையில் ஆரம்பத்திலேயே நடந்துகொண்டிருந்தால் எந்த விபரீதமும் ஏற்பட்டிருக்காதே என்று எண்ணினேன்—அந்த எண்ணம் தலைதூக்குகிற பொழுதெல்லாம், என் மனந்தான் புண்ணாகிறது. என் புண்ணை ஆற்றிக் கொள்ள வழியே இல்லை.

* *

ரேவதி, ஒருநாள் என்னிடம், பேசினாள். அவள் பேச்சில் ஆத்திரம் கலந்திருந்தது.

"கள்ளி"

"என்ன அக்கா......"

"வஞ்சகி......"

"யாரை இப்படி......"

"படித்தவளாம்—படுமோசக்காரி"

"மிகவும் கோபமாக......யாரை, ஏன், அக்கா, திட்டுகிறீர்கள்"

"உன்னையல்ல, சுந்தரி. என்னுடன் பிறந்தாளே, ஒரு கபடவேடக்காரி, அவளைச் சொல்கிறேன்"

"தேவகியையா......?"

"அந்தத் தேளைத்தான்"

"என்ன செய்துவிட்டாள்"

"நம்பியிருந்தவனை நட்டாற்றில் விட்டுவிட்டாள்—பாவம், அந்தக் கண்ணன்......இன்னமும் பைத்தியமாகவில்லை, அவ்வளவுதான்"

"என்ன சொல்கிறாயென்று எனக்குத் தெரியவில்லை—விளக்கமாகச் சொல் அக்கா"

"சுந்தரி, என் தங்கை தேவகியிருக்கிறாளே, அவள் மேல், அவர்தான் கண்ணன் உயிரையே வைத்திருந்தார். இவளை நம்பி, மாமன் மகளையே வேண்டாமென்று பிடிவாதமாகத் தள்ளிவிட்டார். பெற்றோர்களைக்கூட இந்தப் பாவியால் பகைத்துக் கொண்டார்—இப்பொழுது, அவள் என்ன சொல்லிவிட்டாள் தெரியுமோ, கண்ணனுக்கு

அவளைப்போல படிப்பில்லையாம் — ஒத்துவராதாம் — மணந்துகொள்ள முடியாதென்று கூறிவிட்டாள்''

''உம்......''

''அவர் மனம் வெடித்துச் சாகவில்லை—நடைப் பிணம்போல் இருக்கிறார். இன்னமும் எங்கள் வீட்டிற்கு வருகிறார்—போகிறார்.''

எனக்கு, இந்தச் செய்தியைக் கேட்டதும், இன்னமும் வேதனையாகப் போய்விட்டது. மணந்து கொள்ளவே இல்லை, இருவரும்—அவள் மறுத்துவிட்டாள் என்றவுடன் அவர் பித்தனாகத் திரிகிறார் என்றால், மணமான நான் அவரைத்தள்ளி வைத்தேனே, அவர், நல்லவேளை பித்தனாகாமல், என் வாழ்விற்கு இன்னமும துணையாக இருக்கிறாரே !

ரேவதி போய்விட்டபிறகும், அவள் சொன்ன நிகழ்ச்சி மறக்கமுடியவில்லை. தேவகி மாபெரும் துரோகம் செய்துவிட்டாள் என்றே பட்டது. அவர் வந்தவுடன், தேவகியைப் பற்றிக் கேட்டேன். அவர் கண்கள் குளங்களாயின. எனக்குப் புதிராக இருந்தது, அவர் செய்கை—ஆனால், கண்ணன் அவருக்கு உயிருக்கு உயிரானவர் என்பது எனக்குத் தெரியும். அதற்காக இப்படி அழுவதா ? நான் அவருக்கு ஆறுதல் கூறினேன்.

''எல்லாம் பாழாகிவிட்டது—இனி எதுவும் உருவாக முடியாது'' என்றார். அதன் உட்பொருள் எனக்குத் தெரியவில்லை.

''திரிந்த பால், இனி தெளிந்த பாலாக முடியுமா ? கெட்டது, கெட்டதேதான்'' என்றார் மீண்டும். ஏன் அவர் அப்படிக் கூறுகிறார், யாருக்காக அதைக் குறிப்பிடுகிறார் என்று எனக்குப் புரியவில்லை.

குடும்பம்கூட, உருப்படாத சர்க்காராகத்தானிருக்கிறது. உருப்படாத அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் என்று போடுகிறது. ஆனால் அத்திட்டங்களை ஆரம்பத்தில் என்ன நன்மையைக் கருதிப் போட்டார்களோ அதற்கு எதிரிடையான தீமையை விளைவிப்பனவாகவே முடியும். குடும்பத்திலும், நாம் ஒன்று

நினைத்துச் செய்ய முயல்கிறோம். நடப்பதோ வேறொன்றாக முடிகிறது'' என்றார். அவர் ஏதோ பெரிய ஏமாற்றத்தினால் அடிபோட்டவர்போலக் காணப்பட்டார்.

"நீங்கள் கூறுவது விளங்கவில்லையே!" என்றேன், நான்.

"விளங்காமலிருப்பது நல்லது சுந்தரி-அப்பொழுது தான் நீயாவது நிம்மதியாக இருப்பாய்" என்றார் அவர்.

"எனக்கு எதுவும் புரியவில்லை—புரியாமல் அவதிப்படும் வேதனையைவிட, புரிந்து படும் துன்பம் குறைவாகத்தானிருக்கும்" என்றேன்.

"பிள்ளையார் பிடிக்க, மண்ணைப் பிசைந்தான் பக்தன்—அது பொம்மையாக்கப்பட்டதும், குரங்காக இருந்தது என்றால் என்ன செய்வான்? அப்படித்தான் நம் கதை முடிந்துவிட்டது" என்றார் அவர்.

அதற்கு மேல், அவர் என்னுடன் பேசவே இல்லை. நான் என்னைப்பற்றியே எண்ணிக் கொண்டேன். எனது வாழ்க்கையில் இப்படியெல்லாம் சம்பவங்கள் குறுக்கிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ரேவதி வருவாள், அவளால் எனக்கு, வாழ்வில் விளைவு ஏற்படுமென்று, நான் நினைத்திருப்பேன். மணந்து கொள்கிறபொழுது, மகிழ்ச்சியுடன்தான் மணந்து கொண்டேன். மணந்த பிறகு மட்டும், அழுது கொண்டா யிருந்தேன். ஆனந்த கீதமே பாடிக்கொண்டிருந்தேன்.

என்னையறியாமலே, அவசியமில்லாத சந்தேகமும், அதன் விளைவாகப் பிடிவாத முடிவும் ஏற்பட்டது. அந்த முடிவுதான், இன்று என்னை ஆட்டி வைக்கிறது. வாழ்வைக் கெடுத்தவளை, வரவேற்கச் சொல்கிறது—வம்புப் பேச்சிலே வல்லவள் என்று பெயர் பெற்ற நான் வாய் மூடிக் கிடக்க வேண்டியிருக்கிறது! என் செய்வது? என்னை நானே நொந்துகொண்டு, அவர் மனதிலே மீண்டும், அன்பொளி ஏற்ற முயற்சி செய்கிறேன். என் முயற்சியில் வெற்றி பெறுவேனோ இல்லையோ, அதுபற்றி இப்பொழுது நினைத்து என்ன செய்வது?

அவர்கூட, வாழ்க்கையில் தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட திருப்பங்களைக் கண்டு, மனம் புழுங்கும்படியிருக்கிறார் என்பது அவரது நொந்துபோன பேச்சிலிருந்து தெரிகிறது. அவரும் வேதனைப்படுகிறார். நானும் துடித்துச் சாகிறேன். இந்நிலைக்கு ஒரு முடிவே இல்லையா என்பது தான் என் கேள்வி—அதற்கு பதில் யார் கூறுவது?

குடும்பம் என்பது, தூண்டாமணி விளக்கென்று கூறுவர். எனக்கு அதில் உண்மையிருப்பதாகத் தெரியவில்லை. அந்த விளக்கு அவியாமல் எரியவேண்டுமானால், எண்ணெய் குறைந்தாலும் எண்ணெய்யும், திரி எரிந்து விட்டால் திரியும் போடவேண்டும். என் குடும்பவிளக்கில், அப்படி இருவரும் கவனியாதிருந்ததால், ஒளி மங்கி, இருள் பரவிவிட்டது. நான் மீண்டும் அந்த விளக்கிலே ஒளியேற்ற முயல்கிறேன். அது முடியுமா, முடியாதா—எனக்குத் தெரியவில்லை.

—(●)—

வேலைக்காரி :

எனக்கு, அந்த வீடு மிகவும் பிடித்துவிட்டது. காரணம், அந்த வீட்டுப் பெரியம்மாள், என்னைத் தன் மகள் போல பாவித்து நடந்து வந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அம்மாளுக்குப் பிறந்த இரண்டு பெண்களில், என்னிடம் மிகவும் பிரியமாக நடந்து கொண்டது, இரண்டாவது மகள் தேவகிதான்.

அந்த அம்மா, என்னைக் கூப்பிடாத நேரம் கிடையாது. அந்த அம்மாளுக்கு வேலை செய்வதென்றால் எனக்கு சலிப்பே தட்டாது. அன்பு காட்டுமிடத்தில் தானே அன்பு பிறக்கும். எந்தவேலைக்கும், சிங்காரி, இங்கு வாயேன் என்று கூப்பிடாமலிருக்கமாட்டாங்க. பீரோவிலிருக்கும் புடவையை எடுப்பதிலிருந்து, காலேஜ் போக புத்தகங்கள் எடுத்துத் தருவது வரையில் எல்லாம் என வேலைதான்.

காலையில், அந்த அம்மா, காலேஜுக்கு புறப்படுவதற்குள், நூறு தடவையாவது, சிங்காரி பெயர் தேவகி வாயிலடிபடும்.

செருப்பு காணவிட்டால் நான்தான். புடவை, சரியாக வெளுக்காவிட்டால் நான்தான். எல்லாவற்றிற்கும் நான் தான் போய் நிற்கவேண்டும்.

அது மட்டுமா? தேவகியம்மாளுக்கு பேச்சு துணையே நான்தான். மகிழ்ச்சி, பிறரிடம் கலந்து பேசப் பேசப் பெருகும். துன்பம், பிறரிடம் சொல்லச் சொல்லக் குறையும் என்பார்கள். அதனால்தான் போலும், அந்த அம்மா என்னிடம் எந்த நிலையிலும் கலகலவெனப் பேசுவாங்க. நானும் வேடிக்கையாகப் பேசுவேன்.

எனக்கு, சொந்த வீட்டிலிருக்கிற உணர்ச்சிதான அங்கு—ஆகவே மிகவும் மகிழ்ச்சியோடு வேலை செய்து வந்தேன். என் அம்மா, வேறொரு இடத்தில் வேலை

செய்து வந்தாள். அங்கு எப்பொழுதாவது ஒரு சமயத்தில் போய் வருவதுண்டு. அந்த வீட்டு சின்ன ஐயா தான் நான் வேலே செய்யும் வீட்டிற்கு வருகிறூர்.

வேலேக்காரி யென்றல் அவளுக்கும் இருதயம் உண்டு—அதில் பல எண்ணங்கள் குடிகொள்ளும் எனக்கு, ஏறத்தாழ தேவகியம்மாள் வயது பருவம், நினைப்பு—இருக்கும் என்பதை இருவரை ஒருமுகமாக பார்ப்பவர் சொல்வர். ஆனல் தேவகியம்மாள் எஜமானி. நான் வேலேக்காரி. இந்த வித்தியாசம் தவிர, வேறில்லே. இரண்டு பேருக்கும் உள்ள ஒற்றுமை, எல்லாவற்றையும் கடந்தது—நானும் பெண்—தேவகியம்மாவும் பெண். ஆகவே பெண் உள்ளம், இருவரிடத்திலும்—அதுவும் பிஞ்சு உள்ளம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

என் நிலேக்கு ஏற்ற அந்தக் கனவு நினைவுகள் அமைந்திருந்தன. அந்த அம்மாவின் தரத்திற்கேற்ப, அந்த இன்ப நினைவுகள் உருவெடுத்திருந்தன.

நான், நல்ல சுருள் கிருப் விட்டுக்கொண்டு, கலர் சட்டை மாட்டிக்கொண்டு, மைனர் நடை நடக்கும் மணவாளன் வேண்டுமென்று விரும்புகிறேனென்றல், அவர்கள், சூட்டு, ஹேட், மூக்குக் கண்ணுடி மாட்டி, 'டா, டு' என்று வெள்ளேக்காரன் மொழியிலே பேசும் ஒருவர் தனக்கு வேண்டுமென்று விரும்பக்கூடும்.

அதாவது, இருவரும் ஒரே படகில், ஒரு சமயத்தில் பிரயாணம் செய்கிறோம். அந்த பருவப் படகு, வாழ்க்கைக் கடலில், சந்தர்ப்பப் புயலில் சிக்கி, திக்கு தெரியாமல் தவிக்க ஆரம்பித்த நேரத்தில்தான், நானும் தேவகியம்மாவும், அந்தரங்க வாழ்க்கையைப் பற்றிக்கூட மனம் விட்டுப் பேச ஆரம்பித்தோம்.

* * *

என் குடும்பத்தைப் பற்றியும் முதலில் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். என் அப்பா கண்ணுயிரம் எப்பொழுதும் லொக், லொக்......தான். எழுந்திருக்க முடியாது. என் அக்காள் சிவகாமி, ஒண்ணரைக் கண்ணுள்—ஊனக் காலாள்! அவள் வீட்டு வேலேகளேக் கவனித்துக் கொள்கிருள். நானும், என் அம்மாவும் உழைத்து, இந்தக்

குடும்பத்தைக் காப்பாற்றுகிறோம். குடும்பம் என்ற புத்தகத்திற்கு, ஆண்தான் முன்னுரை எழுதுவான் என்று சொல்வார்கள்—இந்தக் குடும்ப புத்தகத்திற்கு, பெண் முன்னுரை மட்டுமல்ல, முடிவுரை வரை எல்லாமும் எழுத வேண்டியிருக்கிறது. இப்படியும் சில குடும்பங்கள் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்த இலட்சணத்தில் என் அம்மா வள்ளியம்மைக்கு தன் கடமையை முடித்துவிட வேண்டுமென்று ஒரே ஆசை—அதாவது தான் பெற்ற குழந்தைகளுக்கு, கல்யாணத்தைச் செய்துவிட வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தி வந்தாள்.

நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன்—எனக்குத் திருமணம் செய்து கொள்ள கொள்ளை ஆசை—அதுவும் தேவகியம்மாள் வீட்டிற்கு வந்த பிறகு அந்த ஆசை நிமிடத்திற்கு நிமிடம் வளர்ந்தபடியே இருந்தது. தேவகியம்மாவும் அந்த ஐயா கண்ணனும் கூடிக் கூடிப் பேசுவதை நான் ஓரக் கண்களால் பார்க்கிற பொழுதெல்லாம், என் மனதிலே புல்லரிப்புத்தான் ஏற்படும். அதுவும் தேவகியம்மா மகா குறும்புக்காரி—அவர் மெதுவாகப் பேசினாலும், இந்த அம்மா 'அரட்டை' அடிக்கும்பொழுது எனக்கு என்னையறியாமலே, ஒரு ஆவேச ஆசை கிளம்பும்.

இந்த ஆசை என்னை ஆட்டிவைக்கும் பொழுதெல்லாம், என் நினைவு கடல் கடந்து செல்லும். கடல் தாண்டி சென்றுள்ள என் மாமன் மகன் முனியப்பன்தான் என் கண் முன்னால் தெரிவான். அவனைத்தானே நான் சின்னஞ் சிறு வயதிலிருந்து எண்ணிக்கொண்டிருந்தேன்.

ஆரம்பத்திலே, தேவகியம்மாவையும், அவரையும் பார்க்கிறபொழுது, முதலில் முனியப்பன் நினைவு வந்தாலும், நாளாக நாளாக அந்த நினைவு மங்கிவிட்டது. உண்மையை மறைக்காமல் சொல்ல வேண்டுமென்றால், அவரைப் பார்க்கிற பொழுதெல்லாம் எனக்கு ஒருவித மயக்கம்தான். அவர் சிரித்துப் பேசினால், நான் போதை கொண்டவள் போல்தான் நடந்து கொள்வேன். ஆனால் எட்டாத பழம்—அதற்கு நான் கொட்டாவிவிட்டு என்ன

செய்வதென்று என் மனதை அதட்டி அடக்குவேன். அந்த, சொன்ன பேச்சு கேட்காத மனம், என்னையே எதிர்த்துக் கொள்ளும்!

என் தாய், என்னைக் கல்யாணம், கல்யாணம் என்று தொல்லைப்படுத்தும் பொழுதெல்லாம், என்னபதில்சொல்வது என்று தெரியாமல்தான், அக்காவுக்கு ஆகட்டும், பிறகுதான் எனக்கு என்று சொல்லி வைத்தேன். திடீரென்று வந்த யோசனை அது வென்றாலும் அதைப் போலவே தேவகியம்மாளும் சொல்லியிருப்பாங்க என்பது மட்டும் எனக்குத் தெரியாது.

என் அக்காள் கல்யாணம் நடக்காத காரியம். பொட்டைக் கண்ணிக்கு எவன் மாப்பிள்ளையாக வருவான்? அதைப்போல, ரேவதியம்மாளுக்கு மாப்பிள்ளை கிடைப்பது கடினம் என்றுதான் நான் எண்ணிக்கொண்டேன். ஆனால், என்னிடம் அவ்வளவு நெருங்கிப் பழகும் தேவகியம்மா, தன் திருமணத்தை ஒத்திப்போட 'சாக்குபோக்கு' சொல்லவேண்டிய அவசியம் என்க்குத் தெரியவில்லை. கற்கண்டைச் சுவைக்க, பஞ்சாங்கமா பார்ப்பார்கள்? இந்த அம்மா, கண்ணனை மணந்துகொள்ள காலண்டரை யல்லவா முட்டுக்கட்டையாக்கி வேடிக்கை பார்க்கிறாங்க-- இது என்ன விசித்திரம்!

என் தாய், எனக்குத் தேடுகிற மாப்பிள்ளைகளைப் பார்க்கிறபெழுது, எனக்குச் சிரிப்பதா, அழுவதா என்றே புரியவில்லை. அதனால் நான் ஏதோ பொய்க் காரணம் காட்டி, தப்பித்துக் கொள்கிறேன். தங்கமான காதலன் பக்கத்திலிருக்க, இந்த அம்மா, ஏன் இப்படி தகிடுதத்தம் செய்யவேண்டும்? வெண்ணெய் கையிலிருக்க, நெய்க்கு அலைவானேன்? இந்தப் புதிர் எனக்குப் புரியவே இல்லை.

* * *

நான் என் குடிசைக்குள் நுழைந்தபொழுது அப்படியே மூர்ச்சையாகி கீழே விழுந்துவிடுவேன் போலிருந்தது. அங்கு பழக்கமான பேச்சுக்குரல் கேட்டது. நான் உள்ளே நுழைந்ததும், என் அம்மா, பேசினாள்.

"பார்த்தியாடி, சீமையிலிருந்து, உன் அத்தான் வந்திருக்கிறான்"

எனக்கு கொஞ்சம் மகிழ்ச்சி—ஆனால் அங்கு குழந்தைகளும், தாயுமாக ஒரு புதுக் குடும்ப மிருப்பதைப் பார்த்தேன்.

"இவங்கெல்லாம் யாரம்மா?"

"யாரா—உன் அத்தானோடே பொண்டாட்டி—அவன் புள்ளை குட்டி"

இதைக் கேட்டதும், என் பேச்சு, மூச்சு எல்லாம் அடங்கிவிட்டது போல, நான் அப்படியே, சிறிது நேரம் நின்றுவிட்டேன். மனதைத் திடப்படுத்திக் கொண்டு, சாதாரணமாகப் பேசினேன். வெளியில் சென்றிருந்த என் அத்தான் முனியப்பனும் வந்து சேர்ந்தான். அவனோடும் வேடிக்கையாகப் பேசினேன். என் ஏமாற்றத்தை மறைக்க வெகு பாடுபட்டு வெற்றி பெற்றேன்.

* * *

என் முகம் வாடியிருப்பதைப் பார்த்துவிட்டால் தேவகியம்மா விடமாட்டாங்க—என்ன செய்தியென்று கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகுதான் என்னை வேறு வேலை செய்ய விடுவாங்க--அப்படித்தான் அன்று என்னை விசாரித்தாங்க—நான் படபடவென மனதிலுள்ளதைக் கொட்டிவிட்டேன்.

தேவகியம்மாவுக்கு, கொஞ்ச நாட்களாகவே மனம் சரியில்லையென்று மட்டும், புரிந்தது—ஏன் என்று மட்டும் என்னால் கண்டுகொள்ள முடியவில்லை—கேட்டுப் பார்த்தும் பலனில்லை.

திடீரென ஒரு நாள் என்னை அழைத்து, "ஏணியைக் கொண்டுவா" என்பாங்க—ஏணி கொண்டு வந்தால் அதைவைத்து பரணியிலே ஏறி, அங்குள்ள மூட்டைகளைத் தள்ளிடுவாங்க—அவைகளைப் பிரித்துப் பார்ப்பாங்க --ஏன்?—எனக்குத் தெரியாது

இப்படி, அந்த அம்மா செய்கிற சில காரியங்களை என்னால் விளங்கிக் கொள்ளவே முடிவதில்லை. ஆனால், அந்த அமமா, போக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறிவரு

கிறது என்பதை யறிந்ததும் என்னால் பொறுக்க முடிய வில்லை.

அந்த அம்மாளோடு கூடப் படிக்கிறவன் என்று ஒருவன் வீட்டிற்கு முன்னெல்லாம் வருவதுண்டு—அவனோடு, இந்த அம்மா, சிரிப்பதும், விளையாட்டாகப் பேசுவதும் எனக்குத் தெரியும்—அதை நான் மிக வெறுப்போடு சகித்துக்கொண்டு வந்தேன். ஒரு நாள் தேவகியம்மா, சொன்ன வார்த்தைகள் தான் அந்த வெறுப்பைப் போக்கின.

"சிங்காரி, ஆண்கள் எல்லோரும், பெண்களை மிக மட்டமான மதிப்பே போடுகிறார்கள்."

"எங்க முனியப்பனைப் பாத்தாலே தெரியுமே—சத்தியம் பண்ணினான் -சிங்காரி நீ இல்லாவிட்டால், தூக்குப் போட்டுகிட்டுச் செத்துவிடுவேன்னான்—இப்போ, ஐந்தாறு பெத்து, அவைகளைத்தான், தோளிலே தூக்கிப் போட்டுகிட்டு வந்திருக்கிறான்."

"இங்கு என்னோடு படிப்பதற்கு வருகிறாரே, ஒருவர்—அவரைத் தெரியுமா?"

"என்னமோ, வர்ராரு—உங்களோடு பேசிகிட்டிருக்கிறாரு—போறாரு— அவ்வளவுதான் எனக்குத் தெரியும்"

"அவர், எனக்கு காதல் கடிதம் எழுதிவிட்டாரடி—பெண்கள் சிரித்துவிட்டால், சரிந்துவிட்டார்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள்."

"ஆமாமம்மா, ரொம்ப ஜாக்கிரதையா யிருக்கணும்"

"போடி பைத்தியக்காரி, இன்று அவர் பாடம் படிக்க வந்தார்—அவருக்கு நல்ல பாடம் நான் சொல்லிக் கொடுத்தேன்."

"அப்படியா?"

"மன்னிப்பு கேட்டுக் கொண்டார்"

"செய்வதைச் செய்து விடுவது—பலித்தால் பார்ப்பது—இல்லாவிட்டால், மன்னிப்பு கேட்டுவிடுவது—இது ஆண்குலம், பெண்குலத்தோடு போடும் சண்டை திட்டம் போலிருக்கம்மா"

"அதைவிட, இவர் கதையைக் கேள்--இவர் அழுதே விட்டார்—அவர் அழ, நான் அழ—பிறகு ஒருவருக் கொருவர் தேறுதல் சொல்லிக்கொண்டோம்"

"ஆமாம்மா, உங்கமேலே, உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறாரே, அவர் மனம் எபபடியிருக்கும், நீங்க இன்னொரு ஆடவனோடு சிரித்து விளையாடுவதைப் பார்த்தா—அவர் மனமறிந்து நடந்து கொள்ளவேண் டாமா?"

"போடி, பெண் மனம் தெரியவில்லை யென்றால், ஆண் அமைதியோடு வாழமுடியுமா?"

இப்படி, தேவகியம்மா, கூறிய பிறகுதான், என் மனதிலேற்பட்ட அருவருப்பும், வெறுப்பும் மறைந்தன. பழையபடியும் அந்த அம்மாவுடன் மனம் விட்டுப் பழகி னேன்.

* * *

ஆனால், அதற்குப் பின்னால், அந்தக் காலேஜ் மைனர் வரவில்லையே தவிர, அந்த அம்மாவின் நட வடிக்கை மீண்டும் மாறுதலாகவே நடைபெற்றுக்கொண் டிருந்தது என்றறிய என் மனம் மிகவும் வேதனைப் பட்டது.

என்னுடன் வேடிக்கையாகப் பேசுகிற அவர், என்னை மிகவும் பரிதாபத்தோடு பார்த்தார். அவர் பார்வையே, 'நீயாவது அவளுக்குச் சொல்லக்கூடாதா?' என்று கேட்பது போலிருக்கும். எனக்கென்னமோ, அவர் முகம் வாடியிருப்பதைப் பார்க்க சகிப்பதில்லை. அவர் முகத் தில் சிரிப்பை வரவழைப்பதற்காக என்னை எதைச் செய்யச் சொன்னாலும் செய்வேன். அதனால்தான் தேவகி யம்மா, கொஞ்சம் 'ஏறுமாறாக' நடந்தாலும் என் மனம் துடித்தது.

அன்பே உருவான அவரை, இந்த அம்மா இப்படி சித்திரவதை செய்கிறார்களே என்று எண்ணியவுடன் என்னை யறியாமல் அழுது விடுவேன். என் மனதில் மட்டும், ஒரு பைத்தியக்கார எண்ணம் வரும். நான் மட்டும், தேவகியம்மாவாக இருந்தால், இப்படியா நடந்து கொள்வேன்? என் கண்களை என் இமைகள் எப்படி

பாதுகாக்கின்றனவோ, அப்படியல்லவா, அவரை வைத்துப் போற்றுவேன் என்று நினைப்பேன். அந்த நினைப்பு தரும் சுகத்திலேயே நான் சொக்கிப் போவேன்.

அவர் வீட்டிற்கு வேண்டுமென்றே, என் தாயைப் பார்ப்பது போலப் போவேன். அங்கு அவரில்லாவிட்டாலும், அவரது புகைப்படம் மிகப் பெரிய அளவில், மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே நிற்பேன். ஒருநாள் அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது, என் தாய், "என்னடி, சின்ன ஐயாவை அப்படியே கண்ணாலேயே முழுங்கிடுவே போலிருக்கு" என்று கூறிக்கொண்டே போனாள். நான் அப்பொழுதும் அசையவில்லை.

அவருக்காக, காத்திருந்த அஞ்சுகத்தையும், வேறு யாருக்கோ திருமணம் முடித்துவிட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டதும், அவர் உறுதியைக் கண்டு பிரமித்துப் போனேன். அவரைப் பார்த்தாலே, கோவிலுக்குள் இருக்கும் சாமியிடம் காட்டும் பக்தியை, இவரிடமல்லவா காட்ட வேண்டும் என்ற எண்ணம் வரும். எவ்வளவு திடசித்தத்துடன் இருக்கிறார் என்று எண்ணி மகிழ்வேன். நான் வேலைக்காரி யென்றாலும், எனக்கும் நினைத்துப் பார்க்கும் உரிமையுண்டல்லவா? அவரைப் பார்க்கும் பொழுதெல்லாம், காணக் கிடைக்காத பெருஞ் செல்வமென்றே எண்ணினேன்.

தேவகியம்மா, முதலில் படிப்பு முடியட்டும், மணம் செய்துகொள்வோம் என்று சொல்லியிருந்தார்களாம்—பிறகு அக்காவுக்குத் திருமணமானால்தான் எனக்கு மணவாழ்க்கை யென்றார்களாம்—அதற்காக, அவரின தோழர் பாலன் தனனையே பலியிட வந்தார்—அவரை முதலில் காலி எனறு கடிந்துகொணடனர். பிறகு ரேவதிக்கு அவரில்லாவிட்டால், வாழ்வில்லையென்று பேசிடத் தொடங்கினர்.

அந்த வீட்டுக் கதையே வேடிக்கையம்மா—ரேவதியம்மா, பாட்டுவாத்தியாராகப் போய், இப்பொழுதுதான்

சிரித்துப் பேசிப் பார்க்கிறேன். பாலன் ஐயா, வந்துசேர்ந்தார். அந்த அம்மா, சிரிக்கிறாங்க—அவர்கள், வானத்திலே திரியும் குருவிகள் மாதிரி திரியறாங்க—பகல், இரவு எப்பொழுதும், அந்த அம்மா, அறையில் சிரிப்பும், கேலியும்தான்—இப்படி அவங்க குடும்பமாயிட்டாங்க—இந்த தேவகியம்மாவோ, இன்னமும் திருமணத்தைத் தள்ளிப் போடுறாங்க—ஏனோ தெரியவில்லை!

* * *

கண்ணன் ஐயாவிடம் தேவகியம்மா, வெறுப்பாகப் பேசும் இரண்டொரு சந்தர்ப்பங்களில் நான் இருக்க வேண்டி வந்துவிட்டது. அந்த அம்மா பேச்சை என் காதுகள் தாங்க மறுத்துவிட்டன. அப்படியே, ஓடிப் போய், இரண்டு அறைகள் கொடுத்து விடலாமா என்று எண்ணினேன். என்னை நானே அடக்கிக்கொண்டு, குடத்தை எடுத்துக்கொண்டு, தோட்டத்துக் கிணற்றடியில் நின்று தேம்பித் தேம்பியழுதேன். ஏன் அழுதேன்? எனக்குக் காரணம் சொல்லத் தெரியவில்லை.

ஒரு நாள் இவர்கள் இருவரும் மாடியில் பேசிக்கொண்டார்கள். நான் மாடிக்குப் போகவேண்டி வந்துவிட்டது. அவர்கள் பேசிக்கொண்டிருந்த பேச்சைக் கேட்கவேண்டுமென்ற சபலம் எனக்கேற்பட்டது. 'ஒட்டுக்' கேட்டேன்.

"கள்ளியும், குண்டு மல்லியும் சேரமுடியுமா?"

"சேரமுடியுமென்று, யாரால் சொல்லமுடியும்"

"குண்டு மல்லியின் மணம் எங்கே? கள்ளியின் தரம் எங்கே? இரண்டும் எப்படிச் சேரமுடியும்?"

"பூக்களுக்கு மட்டும் இந்த நீதியா?"

"இல்லை. பூவுலகில் வாழும் எல்லோருக்கும் இதே விதி தான்"

"அப்படியானால் ஆணும், பெண்ணும் சேருவதென்றால், அதற்கும் இதுதானே விதி"

"சந்தேகமென்ன தேவகி"

" சந்தேகமென்ன என்று நீங்கள் சுலபமாகக் கேட்டு விட்டீர்கள். எனக்கு அந்தச் சந்தேகம் வந்து, என் நெஞ்சையே கொஞ்சம் கொஞ்சமாக அரித்து வருகிறது "

" என்ன சந்தேகம்? "

" கள்ளியும், மல்லிகையும் சேருவது எப்படியென்று "

" புரியும்படி சொல், தேவகி "

" பெண்ணும், ஆணும் சேர்வதென்றால் ஒத்த தகுதி இருக்கவேண்டுமென்று சொன்னீர்களல்லவா? "

" ஆமாம் "

" பெண் படித்தவள் "

" ஆணும் படித்துத்தா னிருக்கவேண்டும் "

" அப்படித்தானே, எனக்கும் கணவன் அமைய வேண்டும் "

" என்ன......! "

" ஊருக்கு ஒரு நீதி—உங்களுக்கொரு நீதியா? "

" அப்படியானால்...... "

" நாம் மணந்து கொள்வது சரியல்ல என்கிறேன் "

" தேவகி...... "

" ஆம், என்னை யொத்த படிப்புள்ளவரை நான் மணந்து கொள்வதுதான் நீதி? "

இந்தப் பேச்சைக் கேட்ட என்னால், பொறுமையுடன் இருக்க முடியவில்லை. ஒளிந்திருந்த இடத்தை விட்டு வெளியிலே வந்தேன். பேய் பிடித்து ஆடுகிறார்கள் என்று சொல்வார்களே, அப்படித்தான் ஆடினேன். நான் என்ன செய்கிறேன் என்பது எனக்குத் தெரியாது. ஒரே கூச்சல்—இருவரும் திடுக்கிட்டு என் பக்கம் திரும்பினர்.

"அடிபாவி, பெண்குலத்திலே பிறந்து, பெரிய பழியைச் செய்கிருயே, சண்டாளி-காலமெல்லாம் உனக்காகத் தவங் கிடந்தவரை இப்படிச் சித்திரவதை செய்கிருயே—இது உனக்குத் தகுமா—நீயும் ஒரு பெண்ணு?"-இப்படிக் கூவிவிட்டேன்.

"சீ, வேலைக்கார கழுதை—உன் வேலையைப் பாருடி, தடிமாடு" என்று அந்த அம்மா என்னைத் திட்டினுங்க. அப்பொழுதும் நான் அடங்கவில்லை. ஆத்திரமும், அழுகையும் கலந்த குரலில், "இது தகாதம்மா" என்றேன்.

அவர் என்னைத் தொட்டு, கரத்தைப் பிடித்து, "சிங்காரி, சிறு பெண் நீ. போ—உன் வேலையை நீ பார்" என்று சொல்லி என்னை அனுப்பினர். பிறகு அவரும் நடந்துவிட்டார்.

அவர் போனபிறகு, தேவகியம்மா என்னை மாடியிலிருந்து அழைத்தது என்காதில் கேட்டது நான் முதலில் போவதா, வேண்டாமா என்று யோசித்தேன். அதற்குள் ஐந்தாறு தடவை கூப்பிடுங் குரல் கேட்டது. என்னை 'வேலையை விட்டு நின்று கொள்' என்று சொல்லத்தான் அழைக்கிருங்க போலிருக்கு என்று எண்ணியபடி மேலே சென்றேன். என்ன ஆச்சரியம், அந்த அம்மா, என்னைக் கட்டிக்கொண்டு, தேம்பித் தேம்பி யழுதாங்க—நானும் அழுதேன். ஏனென்று அந்த அம்மாவும் சொல்லவில்லை—நானும் புரிந்துகொள்ள முடியவில்லை.

"சிங்காரி நான் பெண்தானடி. பெண் என்ருலும், புண்பட்ட பெண்ணடி—அந்தப் புண்மாற புதுவழியில் போகவேண்டியிருக்கிறது—என்னைத் திட்டு—அடிபட்டுக் கொள்கிறேன்—நீ 'வேலைக்காரி யென்ருலும்,' என் சகோதரி"

"அம்மா, அழுவாதீங்க—என்ன நடந்தது என்று தான் சொல்லுங்களேன்—அதற்கு ஏதாவது செய்ய முடிந்தால் செய்வோம்"

"சொல்லக்கூடியதல்லடி, என் மனப்புண்—அது சொன்னல், வேதனை தான் அதிகமாகும்"

"அம்மா, உங்க தங்கச்சி நான்னு நினைச்சு, உண்மையைச் சொல்லுங்க"

"சிங்காரி, இனி நான் உண்மையைச் சொல்லியும் பலனில்லை என் வாழ்வை நானே முறித்துக்கொண்டேன்—நான் கெட்டுவிட்டேன்—தினம் தினம் கெடுகிறேன்"

"கெடுவதா?"

"ஆமடி, பழிவாங்க வேண்டும்—அதற்கு நான் கெடுவது தவிர வேறு வழியில்லை"

"பழிவாங்குகிறீர்களா? யாரை? ஏன்?"

"பெற்ற தந்தையை என்றுதான் வைத்துக் கொள்ளேன்"

"ஐயோ!"

"சிங்காரி, இனி அவரை என்னிடம் வரவிடாதே—இந்தச் செய்தியை அவர் அறியும்படி செய்துவிடு"

தேவகியம்மா, உரக்கவே அழுதாங்க—என்னால் முடிந்தவரை நான் தேற்றினேன்.

* * *

பொழுது சாய்ந்துவிட்டதால், வீடு நோக்கி நான் நடந்தேன். என் வீடு ஊர்க்கோடியி லிருந்தது. நான் போய்க் கொண்டேயிருந்தேன்.

யாரோ என்னைப் பின் தொடர்வது போலிருந்தது—திரும்பினேன்: அவர் வந்தார்.

"சின்ன ஐயாவா, எங்கே கிளம்பினீங்க"

"சிங்காரி, உன் கனிந்த உள்ளத்திற்கு நன்றி சொல்லிக் கொண்டாலாவது, என் வேதனை குறையுமென்று வந்தேன்"

"நடந்ததை யெல்லாம் மறந்துவிடுங்க"

"மறக்கக்கூடியது எதுவுமில்லை} சிங்காரி, எங்கள் வாழ்வில்"

"மறந்தேயாகவேண்டுங்க—இனி அந்த அம்மாவை உங்க புனிதமான கரங்களால் தொடவே கூடாதுங்க"

"ஏன்"

"ஆமாங்க"

"காரணம்......"

"காரணத்தைச் சொன்னுல், நீங்க பைத்தியமாகி விட்டாலும் ஆகிடுவீங்க"

"சிங்காரி......"

"போங்க ஐயா......"

நான் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. ஒருவேளை அங்கு நின்றிருந்தால் விபரீதமான வார்த்தைகள் ஏதேனும் சொல்லி விடுவேனே என்னவோ என்ற பயத்தால் தான் ஓடிவிட்டேன். அவரும் மெதுவாகத் தள்ளாடிய நடையோடு திரும்பிச் சென்ருர்.

* * *

நான் வீடு போய்ச் சேர்ந்தேன்-அந்தக் கொள்ளையை எங்கு போய்ச் சொல்வேன்? என் அம்மா ஒப்பாரியே வைத்துவிட்டாள். என் தந்தை அதற்கு பின்னணி சங்கீதம் போல, அன்று அதிகமாகவே இருமிக்கொண்டிருந்தார். அக்கா சிவகாமி, அடுப்பங்கரையில் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏம்மா, இப்படி, எல்லாரும் அழுதுவடியறீங்க"

"அழாமல் சிரிப்பாங்களாடி—இந்தப் பொட்டை கண்ணி பண்ணியிருக்கிற வேலைக்கு"

"என்ன பண்ணிடுச்சாம் அக்கா"

"வயிற்றிலே வாங்கிகிட்டா, அந்த வரமுறை கெட்ட தேவடியாள்"

"என்ன......?"

"அந்த வாயில்லாப் பூச்சியை, இந்த வம்பிலே மாட்டிவிட்ட பாவி யார்?"

"அவன்தான் உன் அத்தான்—ஆசை பொத்தான்"

"அந்தச் சண்டாளன் எங்கே?"

"அவனுக்கின்னு வாய்ச்சிருக்காளே, காளியாத்தா அவள் பேசாத பேச்செல்லாம் பேசிவிட்டு, அவனையும் இழுத்துகிட்டுப் போயிட்டா"

"எங்கே?"

"சுடுகாட்டிற்கு......நாசமாய்ப்போக"

இதைக் கேட்டதும் எனக்கு வந்த ஆத்திரத்தில் நானே எரிந்து சாம்பலாகிவிடுவேன் போலிருந்தது—தெருவில் ஓடினேன்—இருட்டு—இருந்தும் ஓடினேன்—எங்கே சென்றார்கள் அவர்கள் என்று எனக்குத் தெரியாது—இருந்தாலும் ஓடினேன். கடைசியில் முனியப்பனை, அவனுக்கு வாய்த்த மூதேவியை, அவனுக்குப் பிறந்த பன்றிக்குட்டிகளை எல்லோரையும் வளைத்தேன்—திருப்பி யிழுத்துக்கொண்டு வந்தேன்—அவர்கள் என்னைக் கண்டு பயந்தே திரும்பிவந்தார்கள்.

"அடே—சண்டாளா, மரியாதையாக, அக்கா சிவகாமியை நீ கல்யாணம் கட்டிக்கணும்—இல்லாவிட்டால் சிரிக்க வைச்சிடுவேன்—சிங்கப்பூர் போனாலும் சரிதான்—பினாங்குக்கு ஓடினாலும் விடமாட்டேன்"

"சிங்காரி, ஏன் இப்படி கத்தரே—சாவதானமாகச் சொல்லு"

அவன் பயப்படுகிறான் என்று தெரிந்தது—அவனுடைய மனைவியும் அடங்கி உட்கார்ந்துவிட்டாள். பிறகு நாங்கள் எல்லோரும் கலந்து பேசினோம். அன்று இரவு முழுவதும், கல்யாணப் பேச்சுத்தான்—பக்கத்தூர் கோயில் சத்திரத்தில் முனியப்பனுக்கும், சிவகாமிக்கும் திருமணம் நடத்துவதென முடிவு செய்தோம்.

மறுநாள் எங்கள் குடும்பம் பக்கத்தூருக்குப் புறப் பட்டது. அங்கு போய் திருமணமும் முடிந்தது. கட்டை வண்டியில் முனியப்பன் குடும்பத்தை ஏற்றிவிட்டுவிட்டு, நானும் என் அம்மாவும், அப்பாவும் நடந்துவந்தோம்.

எதிரில் ஒரு கார் வந்தது—எங்களைப் பார்த்ததும் அந்தக் கார் நின்றது. அதில் ரேவதியம்மாளும், பாலனும் இருந்தார்கள்.

"சிங்காரி, எங்கே போய்ட்டு......"

"எங்க அக்கா கல்யாணம்......"

"திடீரென்று கல்யாணமா ?"

"ஆமாங்க—அதோ அந்த வண்டியிலே இருப்பது தான் எங்க அக்கா குடும்பம"

"அக்கா குடும்பம், கல்யாணமாகி அரை நாளுக் குள்ளே இவ்வளவு பெரிதாகிவிட்டதா ?

"ஆமாம். அந்த அம்மா, முதல் தாரம்—அதோட குழந்தை குட்டிங்க—எங்க அக்கா இரண்டாந்தாரம்..."

"பரவாயில்லே—அக்காவுக்குச் சிரமமில்லை—எல்லா வேலையையும் முன்னே வந்தவளே முடிச்சு வைச்சிருக் கிறுப்பலே இருக்கு"

பிறகு அவர்கள் காரில் ஏறிக்கொண்டார்கள். ரேவதி யம்மா முகத்திலே சிரிப்பு இருந்ததே தவிர, பாலன் முகத் திலே சோகந்தான் தெரிந்தது.

என் வாழ்விலே இப்படியெல்லாம் திடீர் திடீர் காரி யங்கள் நடைபெறுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அக்காவின கல்யாணம், நான் எதிர்பாராத திடீர் ஏற் பாடு. அது முடிந்து வீடு வந்து சேர்ந்தவுடன் நடைபெற்ற நிகழ்ச்சி, எனக்கு இன்னமும் நம்பமுடியாததாகவே இருக்கிறது.

* *

இரவு எட்டுமணி இருக்கும்-குதிரைவண்டி யொன்று வாசலில் நின்றது. அதிலிருந்து கண்ணன் அவசர அவ சரமாக இறங்கினர்.

“சிங்காரி, புறப்படு” என்றார்.

“எங்கே?” என்றேன்.

“புறப்படு என்றால் புறப்படு” என்றார், அதிகாரத்தோடு.

நான் பயந்தேன். வீட்டினுள் ஓடிவிடலாமா என்று கூட எண்ணித் திரும்பினேன். அடுத்த கணத்தில் அவர் கரம் என் கரத்தை இரும்புப் பிடியாகப் பிடித்தது. என்னை இழுத்துக்கொண்டு போய் வண்டியிலேற்றினார்— அவரும் என் பக்கத்தில் அமர்ந்துகொண்டார். எனக்கு எதுவும் புரியவில்லை.

நேராக, வண்டி அவர் வீட்டில் போய் நின்றது. என் கரத்தைப் பிடித்த பிடியை இன்னமும் விடவில்லை. என்னைத் தரதரவென இழுத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

அவர் முகத்தை அந்த நேரத்தில் பார்த்திருந்தால் எவரும் பயந்தே போவர்.

“அம்மா” என்று கூவினார், “அப்பா” என்று அலறினார். இருவரும் தடதடவென ஓடிவந்தனர். அவர்கள் எங்கள் எதிரில் வந்ததும், அவர் ஒரே கூச்சலிட்டார்.

“இதோ, உங்கள் மருமகள்” என்றார். அவரைப் பெற்றவர்கள் எதுவும் பேசவில்லை.

“சிங்காரி நீ என் மனைவி—போ, உள்ளே” என்றார். நான் பயந்தபடி உள்ளே சென்றேன்.

அவர் அப்படியே, அங்கு கிடந்த நாற்காலியில் சாய்ந்தார். அவருடைய அப்பா, பக்கத்து அறைக்குப் போய் விட்டார். அங்கு போய் அவர் அழுதிருக்கவேண்டும். அவருடைய தாய் அசைவற்று நின்றுகொண்டிருந்தாங்க. அந்த அம்மா கண்களில் பொலபொலவென நீர் வடிந்தது.

“தம்பி, ஏழையாக இருந்தாலும், பெற்றவங்க இஷ்டமில்லாமல் நாம் எதையும் செய்ய முடியாது”

“அம்மா சிங்காரியின் பெற்றோர்கள் காலில் விழுந்து நான் சம்மதம் வாங்கிவிடுகிறேன்” என்றார், அவர்.

எனக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. திடீரென்று ஓடிப்போய் அவர்கள் இருவரின் கால்களிலும் விழுந்து அழுதேன். அவருக்கு மனம் சரியாக இல்லை, அதனால்தான் இப்படி நடந்து கொள்கிறார் என்று சொல்லி நான் வீட்டிற்குப் போவதாகக் கேட்டேன்.

"சிங்காரி நீ பெண்ணிலே பெரியவள்—மண்ணிலே பிறந்தவர்களில் நீ தெய்வம்—உன்னைத்தான் நான் மணப்பதென்று முடிவு செய்துவிட்டேன்—தடை சொல்லாதே" என்றார்.

"சிங்காரி, நீ இங்கேயே இரு—காலையில் பேசிக் கொள்வோம்" என்று அவரின் தாய் என்னைத் தன் தனியறையில் படுக்கச் சொன்னார்கள். எனக்கு நடப்பதெல்லாம் விசித்திரமாக இருந்தது.

எல்லோரும் தூங்கியிருக்கவேண்டும்—நான் படுத்திருந்த அறையின் கதவு திறந்தது. இருட்டில் யாரோ வருவது போலிருந்தது. நான் எதிர்பார்த்ததுபோல் அவரே தான் வந்தார்.

என்னை அணைந்தார். ஆசையோடு முத்தமிட்டார்.

"சிங்காரி, அவள் சதிகாரி—என் வாழ்வை மட்டும் கெடுக்கவில்லை. சண்டாளி, அந்த இளம் பெண் அஞ்சுகத்தின் வாழ்வையும் நாசமாக்கிவிட்டாள். இன்று இந்த இரண்டு கண்களால் கண்டேன். ஏன் நான் குருடனாகி விடக்கூடாது என்றுகூட எண்ணினேன். அஞ்சுகத்தை மணந்துகொண்ட அந்த நாராயணனும், அவளும் அந்தி நேரத்திலேயே, ஒரு கட்டிலில் வெட்கந் துளியுமின்றி...... ஐயோ...என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது!"

"மறந்து விடுங்கள்—மன்னித்து விடுங்கள்"

"நாளை நம் திருமணம்—அதன் பின் அவள் மரணம்"

நான் அவர் வாயைப் பொத்தினேன். அவர் பொருமினார். அந்தப் பொருமலும் கேட்காவண்ணம், என் உதடுகளால் மூடினேன். விம்மலுக்கிடையே, விருந்தளித்தேன். —உண்டோம்—களித்தோம் — உறங்கினோம் — குடும்பச் செடியில் முதல் பூ அன்று பூத்தது!

—(●)—

தோழன் :

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அந்தப் பழமொழி எனக்காகவே தயாரிக்கப்பட்டதோ என்றுகூட நினைக்கிறேன். அவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஊரார் நன்மைக்காக, கிணறு வெட்டப்போனால், அதிலிருந்து பூதம் புறப்பட்டு வந்து ஊரையே அழித்ததென்றால், இதனை எபபடி நாம் தாங்கிக்கொள்ளமுடியும்!

நான், கண்ணனோடு, நெருங்கிப் பழகமுடியாமல் போனதற்கு எனக்குத் திருமணமான முதலில் வருந்தினேன். பிறகு அது இயற்கை, அவனவனுக்கு ஒரு குடும்பம என்று ஏற்பட்டுவிட்டால், அந்தக் குடும்பத்தில் எழும் குமுறல்களையும், குதூகலத்தையும் அனுபவித்து அனுபவித்து அதிலேயே அமிழ்ந்து விடுவார்கள் என்று தத்துவம் பேசி என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். அதனால்தான், விநோதா ஸ்டோர்ஸை விட்டு வெளியேறுவதே இல்லை. உயிர்த்தோழன் கண்ணனோடு, சிறுவயதிலிருந்து பழகிய பழக்கத்தையும் மறந்து, உறவாடுவதை குறைத்துக்கொணடேன். தொழிலுக்கேற்ற தோழர்கள் எற்பட்டுவிட்டார்கள். அவர்களோடு பேசிப் பொழுதைக் கழித்து வந்தேன்.

திருமணம், என் வாழ்வின் திருவிழாவாக இருந்தது, திருமணமாகி ஓராண்டு முடிகிறவரை—சுந்தரி, இந்திர லோகம் என்று சொல்வார்களே, அந்த லோகத்தில் தான் என்னைக் குடிவைத்திருந்தாள். நான் அந்த ஓராண்டுக் காலம் வரை பூமியில் நடப்பதாக நினைக்கவில்லை. வானத்தில் பறந்து திரிவது போலவே எண்ணிக் கிடந்தேன்.

பிறகு, என் வாழ்க்கை ஏனோ அப்படி மாறிவிட்டது. சுந்தரி, சூரசம்ஹாரியாக மாறிவிட்டாள். இமயமலை உச்சியிலிருந்து, பசுபிக் மட்டத்திற்கு வந்து விழும்படி, தலை

கீழாக உருட்டிவிட்டதைப் போல, உருட்டிவிட்டாள். ஏன் அப்படி என் சுந்தரி செய்தாள்? அவள் அதற்கு விளக்கம் சொல்லாமலே அடம் செய்தாள்.

அவளே விரும்பி, எனக்குத் திகட்டும் அளவு இன்பத்தை ஊட்டினுள். பிறகு, பசி பசி, என அடிவயிறு வலிக்க வலிக்கக் கூவினுலும், ஒரு பிடிகூட போடவில்லை —என்னைப் பட்டினி போட்டு, அதனுல் நான் படும் அவதியைக் கண்டு ரசித்தாள். அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாகும் என்பதை அவளும் நினைத்துப் பார்க்காமல் போய்விட்டாள். நானும் அதனைக் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

சுந்தரிதான் அப்படி மாறிவிட்டாள் என்ருல், அவளைத் தேடி, எனக்கு மனைவியாக்கிய பெற்ருேர்கள், அவளிடம் ஓயாது சண்டையிட்டு வந்தார்கள். அவளும், அவர்களுக்கு அடங்கி நடப்பதாக இல்லை.

தினந்தினம், நீதிபதியிடம் வந்து குவியும் வழக்குகள் போல வழக்குகள் வந்தபடியிருக்கும். குடும்பம் குற்ற விசாரணை மண்டபமல்ல, அது அன்பாலயம். இதனை என் பெற்ருேர்களும் உணர்வதில்லை. சுந்தரியும் அந்த வயதானவர்கள் விஷயத்தில் விட்டுக்கொடுத்து, குடும்பத்தை, ஒரு அன்பாலயமாக்கவில்லை.

சுந்தரி பகலில், அவர்களோடும், இரவில் என்னேடும் சண்டையிடுவதுதான் தனக்குரிய வேலையென்று தீர்மானித்துவிட்டாள் போலும்!

அந்தக் கிழங்களும் வாயை அடக்கிக்கொண்டு சும்மாயிருப்பதில்லை. இளம் பெண்ணுயிற்றே ஏதோ வேடிக்கையாகப் பொழுதைக் கழிக்கட்டுமே என்று விடுவதில்லை—எடுத்ததற்கெல்லாம் குற்றம் காண்பதும், அதைத் தூற்றுவதுமே என் தாயாரின் வேலையாகிவிட்டது. என் தந்தை, எப்பொழுதுமே என் தாயார் பக்கந்தான்—ஆகவே, சுந்தரி, தான் தனியாக்கப்படுகிருேம் என்ற நினைப்பு வந்தவுடனே சீறும் பாம்பாகிவிடுகிருள். வாயைத் திறந்து பேசினுல், விஷத்தைக் கக்கிவிடுகிருள். இதனை, அவர்கள் தாங்கமுடிவதில்லை. என்னிடம் 'ஒவ்

வொரு நாளும் குறை சொல்வார்கள். நான் சிரித்துக் கொண்டிருந்துவிடுவேன்.

சுந்தரி மட்டும், விடமாட்டாள். என்னை வாட்டி வதக்கிக்கொண்டு, இம்மாதிரி வழக்குகளில் மட்டும், அவள் பக்கம் தீர்ப்பளிக்க வேண்டுமென்று வற்புறுத்துவாள்.

* * *

ஏன் அப்படி நடந்துகொள்கிருள் சுந்தரி என்று நான் யோசித்து யோசித்துப் பார்த்தேன். காரணத்தை என்னுல் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனுல், ஆத்திரமான வார்த்தைகளைக் கொட்டி, என்னை அவள் தாக்கிப் பேசும்பொழுது, நான் புரிந்துகொண்டது இதுதான்—என்னை அவள் சந்தேகிக்கிருள் என் பழைய நாள் நடவடிக்கைகளை, யாரோ ஒரு குறும்புக்காரி அவளிடம் சொல்லியிருக்க வேண்டும். அதுவும், எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருக்கும் பார்வதிதான் சொல்லியிருக்க வேண்டும். அவளோடு, நான் ஆடிய, பருவக் கூத்துக்களை மெதுவாகச் சொல்லிவிட்டாள் போலும். இல்லாவிட்டால் சுந்தரி, தொட்டால், சுடு நெருப்பு பட்டால் எப்படி நடந்து கொள்வார்களோ, அப்படியல்லவா ஒதுங்கி ஓடுகிருள். நான் தவறு செய்யாதவன என்று சொல்லி, அவளிடம் தங்கமெடல் கேட்கவில்லை. தவறு செய்து திருந்தியவன் நான். திருத்திக்கொண்ட ஒருவனை மேலும் மேலும் இப்படிக் குற்றம் சுமத்தினுல், மீண்டும் தவறு செய்யலாமா என்றுதான் தோன்றும். இதுதான் மனுேதத்துவம் உணர்ந்த முடிவு. சுந்தரிக்கு, இது தெரியவில்லையே!

அவள் என்னை வெறுத்து ஒதுக்குவதால், நான் என்னை விரும்பிச் சேர்கிற ஒருவளைத் தேடுவேன் என்று புரியவில்லை. குடும்பம் என்பது மாட்டுத் தொழுவமா, திருமணம் என்பது, அறுக்கவே முடியாத மூக்கணுங் கயிறு—இரண்டுமில்லை.

அவள் பிடிவாதம் என்னைச் சித்திரவதை செய்யும் பொழுதெல்லாம், இவைகளை எடுத்து விளக்கியிருக்கிறேன். அழுதும சொல்லியிருக்கிறேன். அதட்டியும்

சொல்லியிருக்கிறேன். அவள் அவைகளை அசட்டை செய்தாள்.

என் பெற்றோர்கள், சுந்தரியின் மீது வந்த கோபத்தால் என்னை வேறு திருமணம் செய்து கொள்ளவே தூண்டினார்கள். நான் அது தவறு என்று வாதாடினேன். அவர்கள் எனக்குச் சமாதானம் சொன்னார்கள்.

* * *

என் குடும்பம், கலஹன கட்டிடமாக இருந்த நேரத்தில்தான் கண்ணனைப் பற்றி, அவனது தந்தையார் விவரித்தார். அந்தச் செய்தி, ஏதோ வெய்யிலில் நிற்பவனுக்கு, குளிர்ந்த மரநிழல் கிடைத்தது போலத் தென்பட்டது. என் குடும்பத்தில் விடிந்தால் வழக்கும், பொழுதானால் பிணக்குமாக இருக்கிறதே! தோழனின் வாழ்விலாவது மலர்ச்சி ஏற்படுத்தி அதனைக் கண்டாவது மனம் மகிழலாம் என்ற மனப்பூர்வமான எண்ணத்தோடு கண்ணனைக் கண்டேன். அவன் உள்ளத்துள்ளவைகளையெல்லாம் என்னிடம் சொல்லும்படி வற்புறுத்திக் கேட்டேன். அவனும் எதையும் ஒளிக்காமல் என்னிடம் கூறினான்.

கண்ணனின் திருமணத்திற்கு, தேவகி காட்டிய தடைக்கல்லை கண்டு முதலில் நான் மருண்டேன்—மலைத்தேன். என் சுந்தரி செய்த கொடுமையும், என் பெற்றோர்கள் செய்த தூண்டுதலும் எனக்கு ஒரு புதிய பலத்தையே கொடுத்தது. சுந்தரிக்குத் தக்க பாடமாக அமையட்டும் என்று எண்ணி, ஒரு பயங்கர முடிவு எடுத்தேன். தேவகி கண்ணனை மணந்து கொள்ளவேண்டுமென்றால், அவளின் அக்காள் ரேவதிக்குத் திருமணமாக வேண்டும் என்று கூறினாள். ரேவதிக்கு, இனி மணமகன் தேடியலைவது யாரென்று யோசித்து, அவளை நானே மணந்து கொள்வது என்று முடிவு செய்து, அந்த முடிவை, ரேவதிக்கு எழுதினேன். அவள் முதலில் என்னை நம்பாததால் என் கடிதத்தை எல்லோரிடமும் காட்டி அழுதாள், அரற்றினாள்—பிறகு ஒரு வாரத்திலேயே, அவளே எனக்குக் கடிதம் எழுதி, வரவழைத்து, என் திட்டத்தை ஏற்றுக்கொண்டாள். நான் ஏதோ பெரிய தியா

கத்தைச் செய்துவிட்டதாகவே எண்ணிக்கொண்டேன். இனி நண்பன் திருமணம் நடைபெறுமென்று இறுமாந்தேன்.

குடும்பம், சூழல்கள் நிரம்பிய பெரிய மடுவு என்பது அப்பொழுதுதான் புரிந்தது. சுந்தரியின் அடம், நீடித்து நிற்கக்கூடியது. இனி அவள் ஆயுள் முழுவதும் அப்படித்தானிருப்பாள் என்று தப்புக் கணக்குப் போட்டேனல்லவா? ரேவதியை மணந்துகொள்கிறேன் என்று உறுதிமொழி கொடுத்து, உறவாடத் தொடங்கிய ஒரு மாதத்திற்குள், என் சுந்தரி, என் பழைய இன்ப சுந்தரியாக மாறிவிட்டாள். நான் என்செய்வேன்? அவள் என் மீது அன்பைப் பொழியும் பொழுதெல்லாம் என் மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்ளும்.

சுந்தரியை விட்டுவிட்டு, வேறு திருமணம் செய்து கொள்ளத் தூண்டிய என் பெற்றோர்கள், இப்பொழுது அதற்கு நேர்விரோதமாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். சுந்தரி தங்கமான பெண், கொஞ்சம வாய்த்துடுக்கு, என்மகளாக இருந்தால், தள்ளிவிடுவேனு, அப்படித்தான் அவளும் ஒன்று. என் தாயே என்னிடம் இப்படிப்பேச ஆரம்பித்துவிட்டாள். நான என்ன செய்வேன்? மேலும், என் போக்கு பற்றிய மோப்பம் நடந்துவிட்டது போலும்! இல்லாவிட்டால், என் அப்பா அப்படியெல்லாம் பேசமாட்டார்—அவர் என் வெளிநடவடிக்கைகளை யெல்லாம் கண்காணிக்க ஆரம்பித்துவிட்டார்!

* * *

ரேவதி உண்மையில், கள்ளமில்லாத உள்ளம் கொண்ட பெண்—அவள், என்னிடம், என் நிலையைப் பற்றி எடுத்துக்கூறி, ஆரம்பத்தில் வெகுநேரம் வாதாடினுள். நான் மணமானவன். அதுவும், முதல் மனைவியே அழகி—இளமை குன்ருதவள்-அவள் இருக்கும் பொழுது நான் எப்படி உங்களோடு வாழமுடியும் என றுகேட்டாள். நான்தான் அவளுக்குத் தைரியம் சொன்னேன்.

ரேவதி, தெளிவாகத் தெரிவித்தாள். என்னுல் இன்ெனுரு பெண்ணுக்கு இன்னல்வர நான் சம்மதிக்க மாட்

டேன். சுந்தரி என் தங்கை மாதிரி—அவள் வாழ்வில் நான் குறுக்கிட்டால், அவள் என்ன நினைப்பாள்? முதலில் அவளைச் சமாதானப்படுத்துங்கள் என்ருன். அதனுல்தான் நான் வலுக்கட்டாயமாக ரேவதியையும், சுந்தரியையும் தோழிமார்களாக்கினேன்.

சுந்தரிக்கு, எனது களவொழுக்கம் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்தும் ரேவதியோடு பழகினுள். அதுவும் அன்பாக, இனிமையாக! சுந்தரியைப் பார்க்கும் பொழுதெல்லாம் என்னையறியாமலே, என் கண்கள் கலங்கி விடுகின்றன. குழந்தையுள்ளம் கொண்ட, என் மனைவி செய்த குறும்புக்காக, அவள் வாழ்வு முழுவதுமே, எண்ணி ஏங்குமாறு ஒரு போட்டிப் பெண்ணைக் கொண்டுவந்து விட்டோமே என்று நானே நினைத்துச் சங்கடப்படுவேன். நான் சுந்தரியாக இருந்தால் என்ன நினைப்பேன் என்று கற்பனை செய்து கலங்குவேன்.

ரேவதிக்கு உறுதிமொழி தந்தது மட்டுமல்ல, அவளோடு, உடல் உறவாடத் தொடங்கிவிட்டேன். அதுவும் அவளும் பலகாலம் அடக்கி வைத்த பருவப்பசி, எனக்கே தேக்கி வைக்கப்பட்ட உணர்ச்சி வேகம்—சொல்ல வேண்டுமா? இந்நிலையில் நான் என்ன செய்யமுடியும்?

ரேவதி என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துகிருள். என் பெற்ருேரும், சுந்தரியும் இப்பொழுது நினைத்துப் பார்க்கிற பொழுதுதான் பயங்கரமாகத் தெரிந்தார்கள். ஆரம்பத்தில் ரேவதியோடு உறவு தொடங்கும் பொழுது, இந்த உருவங்களை ஏதோ கேலிக்குரிய உருட்டு பொம்மைகளாகவே நினைத்தேன். இப்பொழுது அவர்கள் கவனமே, எனக்கு மிரட்சியைத் தந்தது.

மங்கம்மாளோ, என்னிடம் நேரில் கூறிவிட்டாள். 'ஊரார்ின் வசை மொழிக்கேற்ப, என்மகள் வாழ்வையும் பாழாக்கிவிடாதே— ஊரறிய உடனே மணந்து கொள்ள ஏற்பாடு செய்' என்று கூறிய பிறகு நான் எப்படிச் சும்மாயிருக்க முடியும்?

என்னுடைய நிலை இக்கட்டாகப் போய்விட்டது. சுந்தரியை நான் கைவிடமுடியாது — ரேவதியையோ மணந்தேயாக வேண்டும்—இருவருமோ இணைந்திருக்க மாட்டார்கள். நான் என் செய்வேன்? சுந்தரி என் அன்பு மனைவி-சூழ்நிலையால் இந்தக் குடும்பக் குழப்பம் ஏற்பட்டு விட்டது என்று விளக்கி, ரேவதியை ஏற்றுக் கொள்ளச் சொல்லவேண்டுமென்று சென்றேன். இதனைச் சொல்லவே, என் நாக்குக்குத் தைரியம் வர, நான்கு நாட்களாகி விட்டன. அதுவும், சுந்தரியின் அன்போ, வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடுகிறது.

அவளிடம் இந்தச் செய்தியை நான் சொன்னேன். அவள் அழுதாள்—அழுதாள், அன்று இரவு முழுவதும் அழுதபடியே கிடந்தாள்.

சுந்தரியைக் குறை கூறமுடியாது. அவளும் பெண்—தன் மீது செலுத்தும் காதலில் பங்குபோட இன்னொருவள் வருகிறாள் என்றால் எப்படிச் சகிப்பாள்? ஆனால், அவள் செய்த தவறால்தானே இந்தத் துணிவு எனக்கேற்பட்டது-ஐயோ, அவள் தவறு செய்யவில்லையென்றாலும், என் தோழனுக்காக, இந்த முடிவு எடுத்துத்தானே இருப்பேன்!

சுந்தரியின் அனுமதியின்றியோ, பெற்றோர்களின் சம்மதம் பெறுமலோ, ரேவதியை மணம் முடித்துக்கொள்ளலாம். ஆனால் ரேவதியின் தாயோ, முறைப்படி மணமாக வேண்டும் என்கிறாள். சட்டப்படி அது ஒத்துக்கொள்ளப் படக்கூடியதாக இருக்கவேண்டும் என்று வேறு கூறுகிறாள்.

என் சுந்தரிக்கு என்ன குறை சொல்லி ரேவதியை நான் மணந்து கொள்வேன்? ரேவதியை மணக்கவேண்டுமென்றால், சுந்தரியை மறக்கவேண்டும். சுந்தரியோடு வாழவேண்டுமென்றால் ரேவதியை விட்டுவிடவேண்டும். இரண்டும் இனி நடைபெற முடியாத காரியங்களாகி விட்டன. இரண்டு பிரச்சனைகளும் தீர ஒரு வழி வேண்டும்.

இப்படி நான் இந்தச் சிக்கல்களுக்கிடையே மாட்டித் தவிக்கும்பொழுதுதான் எனக்கு வேறொரு இடிபோன்ற செய்தி கிடைத்தது. அந்தச் செய்தியைக் கேட்டதும், எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலாகிவிட்டது. நான் யாருக்காக, இந்தச் சிக்கலை ஏற்றுக்கொண்டேனே அவனுக்கு, அவன் விரும்பிய தேவகி சம்மதம் தர மறுத்துவிட்டாள். நான் என்ன செய்வேன்? அந்தத் தேவகியை சுட்டெரித்து விடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால், தேவகி கூறியது விளையாட்டிற்காகக் கூட இருக்கலாம். ஒருவேளை, தமக்கையின் திருமணம் பகிரங்கமாக நடைபெறாததால் அப்படி மிரட்டுகிறாளோ என்னவோ என்று எண்ணிக்கொண்டு, திடீரென ஒரு பத்திரிகை யடித்து நண்பர்களைக் கூட்டி, ரேவதியை மணந்துகொண்டேன். நான் முனியப்பன் முறையிலேயே தான் நடந்துகொள்ள முடிந்தது—சட்டப்படி என்றால் எதுவும் செய்ய முடியாது—சுந்தரி வேண்டுமானால் என்னைச் சட்டத்தால் வாட்டலாம். ஆனால் அப்படிச் செய்ய மாட்டாள் என்ற தைரியத்தில் நான் துணிந்து திருமணம் புரிந்துகொண்டேன்.

சுந்தரி, தன் அன்பிலே குறைவில்லாமல் நடந்து கொண்டாலும், இப்பொழுது அழுகையையும் அத்துடன் கலந்துவிட்டாள். நான், நடந்தது நடந்து விட்டது, இனி நடப்பதை நினைப்பதுதான் நல்லது. உன்னைப்போல அவளும் ஒரு பெண், அவள் வாழ்வு பாழாகலாமா, அவள் நம்பித்தானே என்னுடன் பழகிவிட்டாள், நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா என்று உபதேசம் புரிந்தேன். உபதேசமா, அவளின் உள்ளத்திலே ஏற்பட்ட வடுவைப் போக்கும்!

* * *

அன்று எனக்கு, வட்டியூர் அகிலாண்டம் அவர்களிடமிருந்து அவசர அழைப்பு வந்திருந்தது. 'உடனே புறப்பட்டு, வரவும்—அவசரம்' என்று அவர் எழுதியிருந்தார். அஞ்சுகத்தின் திருமணம் முடிந்துதான் போய்விட்டதே, இனியும் ஏன் நம்மை யழைக்கவேண்டும் என்று எண்ணினேன். இருந்தாலும் அன்று இரவு வண்டிக்கே புறப்

பட்டேன், வட்டியூருக்கு. அந்த வண்டி விடியற்காலையில் போய்ச் சேர்ந்தது. புகைவண்டி நிலையத்திலேயே அவர் எனக்காகக் காத்திருந்தார்.

அகிலாண்டம் என்னைக் கண்டதும் அழுதுவிட்டார். அவர் கண்களில் தாரை தாரையாக நீர் வடிந்தது.

" தம்பி, இந்தமாதிரியான சம்பவம் நடக்கவே கூடாது —அப்படி நடப்பதை உன்னைப் போன்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்கவே கூடாது "

" என்னங்க, சொல்வதைப் புரிகிற மாதிரி சொல் லுங்க "

" புரிகிற மாதிரியா—ஒரு பெண்ணை, நான் பெற்று, அவள் வாழ்வை அணு அணுவாகச் சிதைக்கிறேன்."

" என்ன? "

" அஞ்சுகத்தின் நெஞ்சொடிந்தது—அவளுக்கு ஆறு தல் அளிக்க அந்த நாராயணனைத் தேடினேன்."

"அஞ்சுகத்தின் கணவனைத்தானே சொல்கிறீர்கள்?"

" ஆமாம், தம்பி, அவன் இன்று அஞ்சுகத்தின் கண வனாக இல்லை.' உங்கள் தேவகியின் மணாளனாகிவிட்டேன்' என்று கடிதம் எழுதியிருக்கிறான் பாரேன்—விவாக விடு தலை செய்துகொள்ளட்டும் அஞ்சுகம்—வேறு ஒருவனை மறுமணம் செய்துகொள்ளட்டும்—என்று எழுதியிருக் கிறானே !"

" ஆ, அப்படியா ?"

" தம்பி, இனி நான் தூக்கில் தொங்கவேண்டும். அந்தத் துக்கம் தாங்காமல், என் மனைவி ஆற்றிலோ குளத்திலோ விழுந்து சாகவேண்டும். என் மகள் அஞ்சுகம் தெருவில் நிற்பாள்."

" அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது—நடக்கவும் வேண்டாம் "

" இல்லை தம்பி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்களே—அது உண்மையாகி விட்டது "

" முற்பகலாவது பிற்பகலாவது—நான் பார்க்கிறேன் அந்தத் திருட்டுப் பெண் தேவகியை "

" அப்பா, தம்பி, தேவகியிடம் போய் ஏதும் தாறு மாருக நடந்துவிடாதே—அவள் துன்பப்பட்டால் அதை யும் என்னால் தாங்க முடியாது "

" இவ்வளவு இரக்க உள்ளம் கொண்ட உங்களுக்குத் தான் அவள் இழுக்கு தேடுகிறாள் "

" நான் இரக்கப்பட வேண்டியவன் இரக்கங் காட்டு கிறேன்—என்னை வாட்டி வதைக்க வேண்டியவள் அவள், வதைக்கிறாள் ".

அவர் ஆத்திரத்தில், அர்த்தமில்லாமல் ஏதேதோ பேசுகிறார் என்று எண்ணிக்கொண்டேன். நான் ஊர் திரும்பிச் சென்று, எப்படியும் நாராயணனுக்குப் புத்தி கூறி, திருப்பியனுப்புவதாக உறுதி கூறினேன். பிறகு அவர் வீடு போய்ச் சேர்ந்தோம். அன்று அவர் வீட்டில் தங்கியிருந்தேன்.

அகிலாண்டம் பெயருக்கு ஒரு தந்தி வந்திருந்தது—'கண்ணன் திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. திரு மணம் நாளைக்கு, பதிவாளர் பணிமனையில்—உடனே வருக' என்று கண்டிருந்தது. கண்ணம்மாவுக்கு இந்தச் செய்தி பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. என்னால் அந்தத் தந்தியை நம்பவே முடியவில்லை.

தந்தியைப் பார்த்த அஞ்சுகம் என்னிடம் வந்தாள்.

" அத்தானைக் கட்டிக் கொள்ளப்போகும் அழகியின் பெயர் என்ன ?" என்று கேட்டாள்.

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. கண்ணன் வாழ்வுப்பாதை இப்படி ஏன் வளைந்து வளைந்து செல்ல வேண்டும் என்று எண்ணினேன். என் தொண்டை யடைத்துக் கொண்டது. வார்த்தை வெளியில் வர முடிய

வில்லை. மெதுவாக என்னை நானே திடப்படுத்திக் கொண்டு, அஞ்சுகத்திடம் பேசினேன்.

"அஞ்சுகம் உன் அத்தானுடைய வாழ்க்கையை எண்ணிக்கொண்டால் அழுகைதான் வருகிறது—காதல், காதல் என்று கூறி உன்னை இழந்தான். இப்பொழுது, என்ன சொல்லி என்ன செய்திருக்கிருனே யார் கண்டார் கள்?" என்றேன்.

"அத்தான் வாழ்வு இனி பட்டமரம் என்று எண்ணு கிறீர்கள்—இனி துளிர்க்கவே, துளிர்க்காதா?"

"துளிர்க்கும் ஆனால், வரும் இலைகளில் பசுமையை காண்பது அரிது"

"பசுமை யிழந்துவிட்டு, இலையிருந்து என்ன பயன்?"

"பின் காதலில்லாத இல்வாழ்வால் என்ன பயன்?"

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஆவேசம் வந்தவர்போல, "அஞ்சுகம், கண்ணம்மா, அடுத்த வண்டிக்கு ஊருக்குப் புறப்படவேண்டும். ஆயத்த மாகுங்கள்" என்று அகிலாண்டம் கூவினுர்.

* * *

மறுநாள், அகிலாண்டம் குடும்பத்துடன் நானும் சென்றேன்—பதிவாளர் முன்னிலையில் கண்ணனும், சிங்காரியும நின்றுர்கள். என் கண்களை நானே நம்ப வில்லை.

"கண்ணு, இது என்ன?"

"இது திருமணம்"

"சிங்காரியையா?"

"அவளை விடச் சிறந்தவள் இந்த அவனியிலே கிடை யாது"

"வேலை செய்ய வந்தவள்......!"

"ஆகவேதான் நான் இந்தத் திருமண வேலையையும் அவளிடமே ஒப்படைத்து விட்டேன்"

"போடா, போ, உன் போக்கே—எனக்குப் புரிவதில்லை"

"குடும்பம் ஒரு பூகம்பம் — அது எப்பொழுது நடுங்க ஆரம்பிக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஆம், நேற்றுதான் அந்த பூகம்பம் ஏற்பட்டது. இன்று அமைதி—இனி என்றும் அமைதிதான்"

கண்ணன், பிறகு, என்னைவிட்டு, பதிவாளர் முன்னிலையில் போய் நின்றான். திருமணம் முடிந்தது. எல்லோரும் வீடு திரும்பினோம்.

அகிலாண்டம் என்னை விடாது தொடர்ந்து வந்தார். எப்படியும் நாராயணனைச் சந்தித்து, அவனைத் திருப்பியழைத்து வரும்படி கூறினார். நான் சரியென்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

*　　　　*

நேராக, ரேவதியிடம் சென்றேன். அவளிடம், அவளின் தங்கையின் தறுதலையாட்டத்தை எடுத்து இடித்துரைத்தேன். அவள் எதுவும் பதில் சொல்லாமல் ஊமைபோல உட்கார்ந்திருந்தாள்.

நேராக, தேவகி வீட்டிற்குச் சென்றேன். அந்த வீட்டில், அந்தக் கிழவர் தானிருந்தார்.

"எங்கே தேவகி"

"தேவகி, அவங்க அம்மா, எல்லாம் திருச்செந்தூர் போய்விட்டாங்க."

"ஏன், முருகனுக்கு முடி யெடுக்கவா?"

"இல்லேப்பா, தேவகிக்கு, அங்கே வாத்தியார் வேலையாயிருக்கு—இந்த ஊரைவிட்டே அங்கே போய்ட்டாங்க—நான் வீட்டைக் காலி பண்ணி, சாமான்களை பார்சல் பண்ணிட்டு, நாளை ஊருக்குப் போகிறேன்"

"அந்த நாராயணன் இங்கில்லையா?"

"அந்த பிள்ளையாண்டான் தானே, வேலையே வாங்கிக் கொடுத்தது"

நான் திரும்பிவிட்டேன். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஒரு பெண், எத்தனை குடும்பங்களைச் சித்திரவதை செய்துவிட்டாள். மூன்று குடும்பப் பம்பரங்களை, பெண் என்ற ஒரு சாட்டைக் கயிறு சுற்றி விட்டு வேடிக்கை பார்க்கிறது! இந்தப் பெண்ணை நான் சும்மாவிட முடியாது. இவள் என்னை இரண்டு மனைவிக் காரனுக்கினாள்—கண்ணனை வேலைக்காரி மணாளனுக்கினாள்—அஞ்சுகத்தையோ வாழாவெட்டி யாக்கிவிட்டாள். இந்தச் சதிகாரியை ஏதேனும் செய்தே யாகவேண்டும். இவளை விட்டால், இவள் இன்னும் எத்தனை குடும்பங்களுக்கு என்னென்ன செய்வாளோ? யார் கண்டார்கள்!

* * *

திருச்செந்தூர் போய்விட்டால் மட்டும், இவளின் பாதகச் செயல்களையெல்லாம், பஞ்சாமிர்தமென்று நினைத்துவிட முடியும்! இவளைத் தன்னந்தனியாகத் தவிக்கவிட்வேண்டும் தனது மண்டைக் கர்வம் அத்தனையும் மடிந்து, ஒவ்வொருவர் காலிலும் விழுந்து கெஞ்ச வேண்டும்—மன்னிப்பு கேட்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் என் மனம் ஆறுதலடையும்.

திருச்செந்தூர் போவதென்று முடிவு செய்துகொண்டேன். போய் அவளை மானபங்கப்படுத்துவது, அதுவும் அந்த நாராயணன் எதிரில்—அதைக் கண்டு, அவனும் வெறுப்படைந்து அவளைவிட்டு ஒதுங்கிச் செல்வது—பிறகு ஊராரிடமெல்லாம் கூறி அவளுக்கு விபசாரி என்று பட்டஞ் சூட்டுவது என்று ஏதேதோ திட்டமிட்டுக் கொண்டேன்.

அகிலாண்டத்தைச் சந்தித்தேன். அவரிடம், நாராயணன் இருக்குமிடத்தைக் குறிப்பிட்டேன். அவர் அங்கேயாவது போய், அவனைத் திருப்பி யழைத்துவா என்று என்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அவர் பரிதாபத்தைப் பார்க்கச் சகிக்காமல், அன்றைக்கே திருச்செந்தூர் பிரயாணமானேன்.

திருச்செந்தூரில், ஒரு கோடித் தெருவில், ஒரு சிறிய வீட்டில் அவர்கள் குடியிருந்தார்கள். அதைத் தேடிக்

கண்டுபிடிப்பதே பெரும் சிரமமாகி விட்டது. நான் வீட்டினுள் நுழைந்ததும், ஆச்சரியத்துடன், மங்கம்மா என்னை வரவேற்ருள்.

"வாங்க, ரேவ்தி வரவில்லையா?"

"ஏதோ, சொல்லிவிட்டு வந்தவங்க மாதிரியில்லே கேக்கிறீங்க".

"உங்களுக்கெல்லாம் கோபமாயிருக்கிறது தெரியும்—இருந்தாலும் சமாதானம் சொல்லிக்கொள்ளலாம் என்றுதான் அவசர அவசரமாக இங்கு வந்தேன். தேவகி கண்ணன் வாழ்வு இப்படித் துண்டித்துப் போகுமென்று நான் நினைக்கவே இல்லை"

"கதையளக்கவேண்டாம்—இத்தனைக்கும் காரணம் நீங்கள் தான்"

"ஆத்திரம் கூடாது உங்களுக்கு. ஆதியிலிருந்து தேவகிக்கு இது நீதியில்லையென்று கூறி வந்தவள் நான். நாராயணனைச் சேரவொட்டாமல் விரட்டியடித்தவள் நான்"

"அதனுல்தான் இப்பொழுது கூடிக் கும்மாளம் போட விட்டு விட்டீர்களாக்கும்"

* * *

"அவள் பிடிவாதமாக ஒன்றைச் செய்கிருள்—அதற்குக் காரணமும் இருக்கிறது—பிறகு நான் எப்படி அவளைத் தடுக்கமுடியும்?"

"என்ன காரணம்?"

மங்கம்மாள், அழத் தொடங்கிவிட்டாள். அழுகிறபொழுது நான் என்ன செய்ய முடியும்? பேசாமல் உட்கார்ந்துவிட்டேன். அப்பொழுது, பள்ளிக்கூடத்திலிருந்து தேவகி வந்தாள்.

"வாங்க"

"....................."

"பேசமாட்டீங்க போலிருக்கு!"

"பேசுவதற்கு என்ன இருக்கிறது!"

"சரி பேசவேண்டாம்"

அவள் சிரித்துக்கொண்டே அறைக்குள் நுழைந்தாள். நான் திடுதிடுவென உள்ளே நுழைந்தேன். அவள் எதிரில் போய் நின்றுகொண்டு நான் பேசினேன்.

"நான் எங்கே வந்திருக்கிறேன் தெரியுமா?"

"திருச்செந்தூருக்கு!"

"தேவகி, ஏன் வந்திருக்கிறேன் தெரியுமா?"

"என்னைப் பார்க்க"

"தேவகி, உன்னைப் பார்க்க அல்ல—பழிவாங்க—"

"பழிவாங்கவா?'

"ஆமாம்—நீ செய்த துரோகங்களுக்கு எல்லாம் சேர்த்து இன்று பழிவாங்கப் போகிறேன்."

"துரோகம் செய்தால், பழிவாங்க வேண்டியது தானே!"

"ஆகா, தாராளமாக"

"அப்படியானால் ஒரு விதவையை ஆசை வார்த்தை காட்டி, ஐந்தாண்டுகள் சுகித்து, இரண்டு குழந்தைகளையும் பெற்று, அவர்களை நடுத்தெருவிலே விட்டோடியவனை என்ன செய்வீர்கள்?"

"அந்தச் சண்டாளனைக் கண்டதுண்டமாக வெட்டியெறிந்தாலும், என் ஆத்திரம் தீராது"

"சரி அந்த விதவையின் மகனாகவே தாங்கள் இருந்தால், என்ன செய்வீர்கள்?"

"தந்தையென்றும் பாராமல் பழிவாங்குவேன்"

"இப்பொழுது நிதானமாகக் கேளுங்கள்—அனாதரவாக விடப்பட்ட விதவை, என் தாய்-அவளுக்குப் பிறந்த

ரேவதி, தேவகிதான் அந்தக் குழந்தைகள்—அந்தத் துரோகி வட்டியூர் அகிலாண்டம் பிள்ளை !''

''ஆ, அகிலாண்டமா, இத்தகைய பாதகத்தைச் செய்தவர் ?''

''ஆமாம், அந்த மகானுபாவர்தான் எங்கள் தந்தை- விதவையைத் தொடலாம், திருட்டுத்தனமாகக் கூடி மகிழலாம், குழந்தை பெறலாம், அப்பொழுது சமூகம் அவரைத் தடுக்கவில்லை—அவரும் சமூகத்திற்குப் பயப்படவில்லை—பகிரங்கமாக அந்த விதவையைத் தன் மனைவியென்று ஏற்றுக்கொண்டால்தான் சமூகம் சீறும், சனாதனம் அலறும்—எங்களையும், எங்கள் தாயையும் தெருவில் விட்டு விட்டு, அவர் திருமணம் செய்துகொண்டார்: கண்ணியமே உருவான எங்கள் தாய் அந்தத் துரோகியைக் காட்டிக் கொடுக்கவே இல்லை. கடைசியில் நானுகைக் கண்டுபிடித்தேன். அவருக்குப் பாடம், என் தாய் பட்ட துன்பம்போல் அவர் அவதிப்பட வேண்டும். எந்தச் சமூகம், விதவைத் திருமணத்தை ஏற்காது என்று அவர் எண்ணினாரோ, அந்தச் சமூகத்தில் அவரே, கணவனை விட்டுப் பிரித்து, தன் மகளுக்கு வேறு திருமணம் செய்ய வேண்டும். சமூகத்தை அப்பொழுது எப்படித் தள்ளுகிறார் என்று பார்க்கவேண்டுமென்று என் காதலைத் தியாகம் செய்தேன். வேசிபோல நடந்து, நாராயணனை என்னிடம் இழுத்துக்கொண்டேன். இன்னமும், அவரை விடுவதாக இல்லை—அவரையேதான் நான் மணந்துகொள்ளப் போகிறேன். அஞ்சுகம், மறுமணம் செய்துகொள்ளவேண்டும். அந்தச் சமுதாயக் கோழை அதைச் செய்து வைக்கவேண்டும்......'' என்று அவள் மூச்சு விடாமல் பேசினாள்.

என் மனம் இடிந்துவிட்டது. நான் பழிவாங்க வந்தவன்—இப்பொழுது பழியோரிடம், பாவமோரிடம் என்று அவள் எடுத்துக் காட்டுகிறாள். என்னால் அவள் கூறியவைகளைக் கேட்டுக்கொண்டு அப்படியே நிற்கமுடியவில்லை

நான் எவ்வளவு ஆத்திரமாக அங்கு வந்தேனே, அவ்வளவு அனுதாபத்துடன் திரும்ப வேண்டிய வனுகிவிட்டேன். தேவகியை, நான் உற்றுப் பார்த்தேன். அவள் பேச்சில் இருந்த உறுதி, அவள் விழிகளிலும் இருந்தது. அவள் எவ்வளவு ஆத்திரமிருந்தால், இப்படிச் செய்திருப்பாள் என்று எண்ணினேன், எனக்கே பயமாக இருந்தது. நான் தேவகியிடம் வேறென்ன பேசுவது? அவளைப் பழிவாங்க வந்து, அவள் பழிவாங்கிய கதை யைத்தான் கேட்கவேண்டியதாகி விட்டது.

அவள் என்னை விடுவதாக இல்லை. என்னை அங்கு கிடந்த நாற்காலியில் உட்காரும்படி சொல்லி விட்டு அவளும் எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

"உங்களின் துணிவு மெச்சத்தக்கது—நண்பருக்காக துணிகரமான காரியம் செய்தீர்கள்—அதுபோல உங்க ளைக் கேட்கிறேன்—என் தந்தையின் தவறுக்காக, நான் எடுத்த வைராக்கிய முடிவை நீங்கள் பாராட்டவேண்டும். எனக்கு, கண்ணனிடம் உள்ள காதல், நிலையானது-அது என்றும் மாருது—ஆனல், அவரை மணக்கவில்லை— இதற்காக யாரும் என்னைக் குற்றஞ் சாட்டவும் முடியாது" என்ருள்.

அவளுக்கு நான் என்ன பதில் சொல்வது? அவளி டம் பேசவே எனக்கு அச்சமாக இருந்தது.

* * *

நான் அங்கிருந்து வெளியில் வந்தேன். மங்கம்மா ளிடம் விடைபெற்றுக்கொண்டு. மீண்டும் ஊருக்குக் கிளம் பினேன். ஊருக்கு வருவதா, அப்படியே எங்கேயாவது ஓடிமறைவதா என்று எனக்குப் புரியவில்லை. புகைவண் டியில் நான் உட்கார்ந்திருந்த பொழுது, என் எதிரிலிருப் பவர் எவரும் என் கண்களில் படவில்லை. என் செவிகளில் தேவகி கூறிய வார்த்தைகள் ஒலித்துக்கொண்டே யிருந் தன. அந்த வார்த்தைகளின் ஒலியிலேயே ஒடுங்கிக் கிடந் தேன். பெண் என்ருல், இலட்சியச்சிலை என்றல்லவா

தெரிகிறது—தியாகத்தின் உச்சியிலே, அந்த இலட்சியச் சிலையை வைத்து, ஆண் பூஜாரி, தினமும் பூஜை செய்தாலும், தவறில்லை போலிருக்கிறது! அத்தகைய உறுதியான இலட்சிய வேகமல்லவா, பெண் மனத்தில் குடிகொண்டிருக்கிறது!

குடும்பம் என்கிறார்கள்—உடனேயே அதிலேயே குதூகலம் குடிகொண்டிருப்பதாகச் சொல்லி விடுகிறார்கள். இன்னும் சிலர் குடும்பம் என்று சொல்வதற்கே நடுங்குகிறார்கள்! குடும்பம் பாம்புப் புற்றாகவுமிருக்கிறது, பசும் புல் தரையாகவுமிருக்கிறது! புற்றை நீக்கி, எங்கும், பச்சைக் கம்பளம் விரித்ததுபோல், பசும்புல் வெளியாக மாற்றவேண்டும்!